

443
3.52
1611
14 AUG 1952

கலைக்கதிர்

நந்தன — ஆடி

உணவு உற்பத்தியின் முன்னணியில் நிற்பவை

DPF பம்புகள்

'DPF' பம்புகளின்

விசேஷ அம்சங்கள்

- ★ குறைந்த செலவில் அதிக தண்ணீர்
- ★ நீடித்த உழைப்பு
- ★ நிசப்தமான ஓட்டம்
- ★ குறைந்த கவனிப்பு



மோட்டாருடன் இணைக்கப்பட்ட DPF பம்பு

பால் பேரிங்குகள் பொருத்தப்பட்ட 'DPF' பம்புகள் 2" முதல் 6" வரை எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்.

DPF பெல்ட் டிரைவ் பம்பு

தண்டாயுதபாணி பவுண்டரி

பாப்பநாயக்கன் பாளையம்

போன் 219 கோயமுத்தூர் தந்தி: மோட்டார்பம்பு.

EP

குமரன் மில்ஸ் லிமிடெட்,

புதுப்பாளையம், கோயமுத்தூர்.

(மேட்டுப்பாளையம் ரோட்)

1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

★

மூலதனம், மானேஜ்மெண்டு, தொழிலாளர்

ஆக எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்

சுதேசி நூலையே வாங்குங்கள்

20, 40, 60 நெ. நூல் தயாரிக்கப்படுகிறது

குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே

நிர்வாகஸ்தர்களது நோக்கம்.

★

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின் வரிசையில்

இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது.

கல்வி, தொழில் அனுபவம் நிறைந்தவர்களால்

நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.

வருடா வருடம் பங்குதாரர்கள் நல்ல

டிவிடெண்டு பெற்று வருகிறார்கள்

★

Managing Agents:—

N. APPUSWAMY NAIDU & CO,

Managing Director :—

G. V. MUTHUSWAMY, B. Sc.,

Estd. 1933.

Telegram: VENKATESA, Udamalpat,

ஶ்ரீ

ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்,

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்,
உடுமலைப்பேட்டை.

○ ● ○

100 நெ. வரை மெல்லிய ரக பருத்தி நூல்கள் நூற்பதில் பிரசித்தி பெற்றது.

○ ● ○

எங்கள் புதிய தறிகளிலிருந்து வெளிவந்த தரத்தில் சிறந்த துணி ரகங்கள் புகழ்பெற்று விளங்குகின்றன.

○ ● ○

சலவை மில்லும் தயாராகிறது.

○ ● ○

மானேஜிங் ஏஜண்டுகள்:

ஜி. வி. கோவிந்தசாமி நாயுடு
அண்டு கம்பெனி.

கலைக்கதிர்

மலர்—௪ நந்தன ஆடி இதழ்—அ

14 AUG 1950
MADRAS

ஆசிரியர் :
ஜி. ஆர். தாமோதரன்,
B. Sc. Elec. B. Sc. Mech. (Durham A. M. I. E. E. (London), M. P.

இந்த இதழில்

இருட்டிலே தெரிந்த கண் ... "என் கே. என்." 2
காதற் கலை ... ஒவிட் 5
நூல் அரங்கு ... 7
விளையாட்டா, வினையா? ... 'இளங்கணத்தான்' 9
"ஸ்ப்ரே பெயிண்டிங்" ... திரு. அ. இராமகோபால் 13
சங்க காலப் பாண்டியர்கள் ... திரு. தி. வை. சொக்கப்பா 17
தூசி ... திரு. நா. கி. நாகராசன் 24
இதயச்சுழலிலே ... திரு. டி. கே. பி. வரதராசன் 28
எரிமலை ... திரு. வீ. இராசமாணிக்கம் 33
கிப்ஸ் கருவி .... 'குப்ஸ்' 41
பலசரக்கு ... 43
சிலப்பிசை ... திரு. எஸ். ஆர். குப்புசாமி 45
உள்ளத்தின் உண்மை ... திரு. தா. ஏ. சண்முகம் 51
காதல் படும் பாடு (தொடர் கதை) ... திரு. தா. ஏ. ஞானமூர்த்தி 53
வினுக்களும் விடைகளும் ... 60
புராணங்களைப் பற்றிய சில குறிப்புகள் ... திரு. வி. ஆர். ஆர். தீட்சிதர் 61

21172b

'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை, கதை முதலியனவற்றின் கருத்துக்கள் அவற்றை எழுதிய நேயர்களுக்கே உரியன.

இருட்டிலே தெரிந்த கண்

"என். கே. என்."

தமிழ்நாடு ... 600 008

இரண்டாம் உலகப் போரில் ஆங்கிலேயர் கோட்டைவிட்ட பர்மாவை மீட்பதில் அமெரிக்கர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அடர்ந்த காடுகளில் மும்முரமாகப் போர் நடந்து கொண்டிருந்தது. மலைப்போர் முறையில் கைதேர்ந்த ஜப்பானியர் இருட்டையே தகுந்த பாதுகாப்பாகக் கொண்டு மறைந்து வந்து அமெரிக்கத் துருப்புக்களைத் தாக்கினர். எதிரி மிக அருகில் வரும் வரை அவனைக் கண்டறிய முடியாமல் அமெரிக்கர் திகைத்தனர். பௌதிக அறிஞர்கள் இச்சங்கடத்தைத் தவிர்க்க முன்வந்தனர். இருட்டிலே தெரியும் கண் ஒன்றை அவர்கள் அமைத்துத் தந்தார்கள். பூனைக்கு இருட்டிலே கண் தெரியும் என்பார்கள். ஆனால், பூனை கூடக் கும்மிருட்டில் பார்க்கமுடியாது. ஆனால், பௌதிக ஆராய்ச்சி தந்த இக் கண்ணோ ஒளி என்ற பேச்சே இல்லாத இருட்டையும் பொருட்படுத்துவதில்லை.

ஒளி அலை வடிவானது. ஒவ்வொரு நிறமுள்ள ஒளியும் குறிப்பிட்டதோர் அலை நீளம் கொண்டது. சூரியன் தரும் வெண்ணொளி வானவில்லிலும், முப்பட்டையின் வழியே வந்த பின்னரும் ஏழு நிறங்களாகப் பிரிகிறதல்லவா? இந்த ஏழு நிற ஒளி வகைகளில் செவ்வொளி அலைகள் மிகவும் நீளமானவை. ஊதாவொளி அலைகள் குறுகலானவை.

நமது கண்ணுக்குப் புலனாகும் இந்த ஒளி வகைகளைத் தவிரக் கதிரவன் நமது பார்வைப் புலனுக்குப் புறம்பான சில ஒளிக் கதிர்களையும் வெளிவிடுகிறது என்பதை விஞ்ஞானிகள் தெளிவாக்கியுள்ளனர். செவ்வொளியினும் நீளமான ஒளிக் கதிர்கள் அகச் சிவப்புக் கதிர்கள (Infra red rays) எனப்படும். இவற்றை நம் கட்புலனால் அறிய முடிவதில்லையே தவிர, இவை பரிசப் புலனைப் பாதித்துச் சூட்டை விளைவிக்கின்றன. ஆகையால் இவை சூட்டலைகள் என்றும் அழைக்கப்பெறும். சூரியனும் சூடான பொருள்களும் வெளிவிடும் கதிர்ப்பு ஆற்றலில் பெரும் பகுதி அகச் சிவப்புக் கதிர்களால் ஆனதே. ஒளியை வெளிவிடாது வெறும் வெப்பத்தை மட்டும் தோற்றும் எப்பொருளும் அகச் சிவப்புக் கதிர்களைப் பெற வற்றது.

அகச் சிவப்புக் கதிர்கள் சாதாரண ஒளியின் பண்புகள் அனைத்தையும் கொண்டிருக்கும். ஆனால் கண்ணீரும் கண்ணாடியும் அகச் சிவப்பு ஒளியைக் கடத்துவதில்லை. ஆகையால் இவ்வொளியை ஆராயப் பயனாகும் ஒளியியற் கருவிகள் இந்துப்பைப் (Rock salt) போன்றதொரு பொருளினால் செய்யப்படுகின்றன. ஒளியானது காற்று மண்டலத்தில் புகுந்து புவியை அடையும்போது காற்று மூலக் கூறுகளாலும், தூசித் துகள்களாலும் சிதறுகிறது. அலை நீளம் அதிகமான ஒளியைவிட அலை நீளம் குறைவான ஒளியே அதிகமாகச் சிதறுகிறது. காற்று மண்டலத்தில் புகுந்து வரும் ஒளியில், குறுகலான நீல ஒளி அதிகமாகச் சிதறுவதால்தான் வானம் நீல நிறம் பெறுகிறது. ஆகையால் காணும் ஒளியைவிட நீளமான அகச் சிவப்பு ஒளி இன்னும் குறைவாகச் சிதறுகிறது. இதனால் இது மென்

பனியையும், மூடு பனியையும் ஊடுருவுந் திறன் கொண்டு விளங்குகிறது.

பொருள்களைச் சூடேற்றும் தன்மையும், அதிகமான ஊடுருவுந் திறனும் கொண்ட அகச் சிவப்புக் கதிர்கள் இக்காரணங்களாலேயே தனிப்பட்ட வகைகளில் பயன்படுகின்றன. பல பொருள்கள் இக்கதிர்களைப் பூரணமாக உறிஞ்சி விடுகின்றன. இப்போது அவை எளிதில் சூடேறும். ஆகையால் பொருள்களுக்குச் சீராகவும், விரைவாகவும் சூட்டை அளிக்க இவை பயனாகின்றன. தொழிற்சாலைகளில் வர்ணங்களும், மெருகெண்ணெய்களும் பூசப்பெற்ற பொருள்களைச் சில விநாடிகளுக்குள் இக்கதிர்களைக் கொண்டு உலர்த்தலாம். அவை வரிசையாக அமைக்கப்பட்ட அகச் சிவப்பு விளக்குகளின் இடையே கொண்டு செல்லப்படுகின்றன. சாதாரண முறைகளில் வர்ணங்களை உலர்த்தப் பல மணி நேரம் செல்லும். ரொட்டி செய்யும் தொழிற்சாலையில் ரொட்டியை ஒரே மாதிரியாகச் சுட இக்கதிர்களைப் பயனாக்குகிறார்கள். சாதாரண உலையில் சுடப்படும் ரொட்டியில் இருப்பதுபோல் அகச் சிவப்புக் கதிர்களால் சுடப்படும் ரொட்டியின் மேற்புறத்தில் பொருக்கே இருப்பதில்லை. அது எங்கும் சீராகச் சுடப்பட்டு மிருதுவாகவும், சுவை மிகுந்தும் இருக்கும்.

இதே காரணத்தால் அகச் சிவப்புக் கதிர்கள் மருத்துவத்திலும் பயன்படுகின்றன. கீல்வாதம், முதுகுப் பிடிப்பு முதலிய பல நோய்களுக்கு நிவாரணம் அளிக்க நோயுற்ற உறுப்புக்கள் அகச் சிவப்புக் கதிர்களால் தாக்கப்படுகின்றன. இப்போது அப்பகுதிகளில் மட்டும் வெப்பம் தோன்றி வலியைக் குறைத்து நோயைத் தணிக்கும்.

இருட்டிலே பார்க்கும் விஞ்ஞானக் கருவிகள் அகச் சிவப்புக் கதிர்களால் இயங்குபவை. இரவு நேரத்தில் வானத்திலே வரும் விமானங்களைக் காணத் துருவு விளக்குகளைப் பயன்படுத்துகிறார்கள். துருவு விளக்கிலிருந்து வரும் ஒளி அது இருக்குமிடத்தைக் காட்டிக்கொடுத்துவிடுகிறது. இதனால் அது எதிரியின் தாக்குதலுக்கு எளிதில் இலக்காகும். இக்குறையைத் தவிர்க்க ஜெர்மானியர் ஒரு முறையைக் கையாண்டனர். விளக்கின்மேல் ஓர் ஒளி வடிகட்டியை வைத்து அது அகச் சிவப்புக் கதிர்கள் மட்டும் அனுப்புமாறு செய்யலாம். விளக்கிலிருந்து செல்லும் அகச் சிவப்புக் கதிர்க்கற்றை விமானத்தில் பிரதிபலித்துத் திரும்பிவந்து ஒரு பிரத்தியேகமான கருவியை அடைந்து அதில் பொருளின் பிம்பத்தைத் தோற்றுவிக்கும். மூடுபனியையும் ஊடுருவிச் செல்லும் இக்கதிர்கள் எந்த வானிலையிலும் பயன்படும்.

பர்மாப் போர் அரங்கில் இருட்டிலே மறைந்து நின்று தாக்கிய பகைவனைக் காணவும் இதே தத்துவம் கையாளப்பட்டது. அகச் சிவப்புக் கதிர்களை வெளியிட்டு, பிரதிபலித்து வரும் கதிர்களை ஏற்கும் சிறு கருவியொன்று காட்டில் போர் புரிந்த துருப்புக்களின் துப்பாக்கிகளுடன் இணைக்கப்பட்டது. இது பகைவனது இருப்பிடத்தை வெட்ட வெளிச்சமாக்கி அவனை உடனடியாகச் சுட்டு வீழ்த்த உதவியது. மறை வீரன் காட்டி (sniper-scope) என்ற இக்கருவி கண்டுபிடிக்கப்பட்டபின் ஜப்பானியர் இரவிலே விளைத்து வந்த தொல்லை வெகுவாகக் குறைந்துவிட்டது.

சாதாரண போட்டோத் தட்டை அகச் சிவப்புக் கதிர்கள் பாதிப்பதில்லை. ஆனால் அதன்மேல் தனிப்பட்ட சில சாயங்களைப் பூசிவிட்டால் அது இக்கதிர்களுக்கு உணர்வுள்ளதாகிறது. இத்தகைய தட்டைக் காமிராவில் பொருத்தி அதற்குள் இக்கதிர்கள் மட்டும் நுழையுமாறு செய்யலாம். இம்முறையில் அகச் சிவப்புக் கதிர்களைக்கொண்டு போட்டோ பிடிக்கும்

முறை பல துறைகளில் முக்கியமாக விளங்குகிறது. ஊடுருவுந் திறன் மிக்க இக்கதிர்களைக்கொண்டு மிகத் தொலைவிலுள்ள பொருள்களையும் மிகத் தெளிவாகப் படம் பிடிக்க முடிகிறது. இம்முறையில் சுமார் எண்பது மைல் தொலைவிற்கும் அப்பாலுள்ள காட்சிகளையும் நன்றாகப் படம் பிடித்திருக்கிறார்கள். எளிதில் அணுக இயலாத மலைகள் முதலிய பகுதிகளைப் படம் பிடிக்கவும், விமானத்திலிருந்து படம் பிடிக்கும் வானப் போட்டோ முறைக்கும் இது மிக ஏற்றது.

அகச் சிவப்புக் கதிர்களைக்கொண்டு பிடிக்கப்படும் படம் சாதாரண போட்டோவைப்போல் இராது. தாவரங்களின் பச்சைப் பகுதிகள் அகச் சிவப்புக் கதிர்களை உறிஞ்சுவதில்லை. ஆகையால் போட்டோவில் இப்பகுதிகள் பிரகாசமாகத் தெரியும். அகச் சிவப்புக் கதிர்களால் ஓரிடத்தைப் படம் பிடித்தால் அது நிலவொளியில் இருப்பது போன்ற தோற்றம் கொண்டிருக்கும். ஆகையால் சினிமாப் படங்களில் நிலாக் காட்சிகளைக் காட்ட அகச் சிவப்புப் படங்கள் எடுக்கப்படுகின்றன.

பொருள்களை ஊடுருவும் இக்கதிர்களைக்கொண்டு எடுக்கப்படும் படங்கள் அவற்றின் பரப்பின் கீழுள்ள தோற்றத்தைத் தெளிவாக்குகின்றன. உடலில் ரத்தக் குழல்களின் அமைப்பை ஆராயவும், அவற்றில் நேரும் கோளாறுகளை அறியவும் அகச் சிவப்புப் போட்டோ பயன்படுகிறது. குணமாகி வரும் புண்ணை ஆராய அதைச் சில நாட்களுக்கு ஒரு முறை அகச் சிவப்புக் கதிர்களால் படம் பிடித்துப் பார்க்கிறார்கள். கண்ணின் நோய்களை ஆராய இம்முறை பயனாகிறது.

இக்கதிர்கள் சாயங்களை வெவ்வேறு அளவு உறிஞ்சுகின்றன. ஆகையால் இழைகளின்மேல் சாயம் ஏறியுள்ள வகையை அறியவும், நெசவின் தன்மையை ஆராயவும் இக்கதிர்கள் பயன்படுகின்றன. இக்கதிர்களைக் கொண்டு எந்திர உறுப்புக்களின் தேய்வையும், உலைகளின் உட்புறத்தில் நிகழும் விளைவுகளையும் ஆராய்கிறார்கள்.

ஒவ்வொரு பொருளும் சூடான நிலையில் சிறப்பான அலை நீளமுள்ள அகச் சிவப்புக் கதிர்களை வெளிவிடுகிறது. சாதாரண நிலையில் அதே கதிர்களை ஏற்கிறது. இப்பண்பினைப் பயனாக்கி இக்கதிர்களால் பொருள்களின் இருக்கையை மிகத் திருத்தமாக அறிய முடிகிறது. ஒரு பொருளிற் கலந்துள்ள தனிமங்களையும், உலோகக் கலவைகளின் அமைப்பையும், மோட்டார் எண்ணெய்களின் தன்மையையும் ஆராய இக்கதிர்களைப் பயனாக்குகிறார்கள்.

துப்பறிதலிலும் அகச் சிவப்புக் கதிர்கள் மிகப் பயனுள்ள சாதனமாக விளங்குகின்றன. கைரேகைகளை ஆராயவும், ரத்தக் கறைகள் முதலியவற்றைக் கண்டறியவும் இவை பயன்படுகின்றன. எரிந்துபோன ஆவணங்களிலுள்ள எழுத்துகளை இக்கதிர்கள் தெளிவாக்குகின்றன. அடித்தல் திருத்தல்களின் கீழுள்ள பழைய வாசகத்தை இவை காட்டிப் பத்திரங்கள் முதலியவற்றில் செய்யப்படும் மோசடியைத் தெளிவாக்குகின்றன. கள்ளக் கையெழுத்துக்காரனின் பரம வைரிகள் இவை! ஓவியங்களின் பழமையை ஆராயவும் இவை பயனாகியுள்ளன.

வானத்திலே சில பகுதிகளில் புகை போன்ற தூசிப் படலத்திற்குப் பின்னால் பல நட்சத்திரங்களும், நட்சத்திர மண்டலங்களும் ஒளிந்திருக்கின்றன. குளிர்ந்துபோன நிலையில் காணும் ஒளிக் கதிர்களை வெளிவிடாமல் வெப்பத்தை மட்டும் வெளிவிடும் வானியக்கு பொருள்கள் உண்டு. இவை யனைத்தையும் அகச் சிவப்புக் கதிர்களால் கண்டு அவற்றின் திண்மையையும் இயக்கத்தையும் ஆராய முடிகிறது. ★

காதற் கலை

மூலம்: ஓவிட் தமிழாக்கம்: திருச்சிற்றம்பலக் கவிராயர்

★

கரையினைக் கண்கள் காணாக் கடுந்தொலை நீலவெள்ளம்
தரையினைத் தடவி ஆழத் தகைமையும் அளக்கவொண்ணா
நுரையெறி கடலாம் காதற் கலையினை, நுண்மை தன்னை
உரைசெயும் எனது வாக்கை வாங்குவீர்; உளத்தின் ஏற்பீர்.

உளந்தனைக் கவர்ந்தாள் நின்னை ஒறுத்தலும், மாற்றான் மீது
களவியற் காதல் மோகம் காட்டலும் கூடும்; என்னில்
அழிவுறும் எழிலாம் மேனி ஆசையை விடுமின்; சாகா
நிலைபெறும் உள்ள மொன்றே நினைத்திடும் என்றும் நெஞ்சம்.

போதவிழ் மலரும் போதை வாசமும் புகைந்து போகும்;
மீதுறும் முட்கள் மட்டும் மிஞ்சிடும்; அஃதே போன்று
காதலி அளக பாரக் காரினில் நரையாம் மின்னல்
சூடிதெனத் தோன்றும்; விம்மும் கன்னமும் சுருங்கிப்போகும்.

ஆதலின் காதலர்க்கோர் அறிவுரை: அழகை நம்பும்
காதலைத் தவிர்மின் நெஞ்சில் கருணையும் அன்பும் உண்மைப்
போதமும் நிறைந்தே யுள்ளம் பொலிந்திடில், கோடிக் கண்கள்
சோதியும் சுடரும் ஆங்கே இணையெனச் சொல்லப் போமோ?

ஆசையின் இனிய நல்லாள் அன்பினைக் கவர, இன்பாய்
வாசகம் பேசி, கன்னம் வருத்திடும் வார்த்தை தள்ளி,
நேசமாய் மென்மைத்தாய நெருக்கமாய்ப் புல்லி வந்தால்
கூசிடும் அன்னாள் காமம் குமிழிடும், ஊறிப் பொங்கும்.

தம்பிழை யறியா தன்பு தளருமேல், மூர்க்கம் கொள்ளில்
வம்புகள் செய்து காதல் வெம்பிட வருத்தல் வேண்டா;
கொம்பினை முறிக்க மெல்ல வளைக்குறும் கொள்கை போலே
நம்பி நின் மனையாள் தன்னை நல்வழி செலுத்தக்கூடும்.

வெள்ளத்தை எதிர்த்துக் கைகள் வீசியே நீந்தப் போமோ?
பள்ளத்தின் போக்கு நோக்கி நீரோடு பாய்ந்து சென்று
மெள்ளத்தான் கரையை எட்டிப் பிடிப்பதை விட்டு, மீறித்
துள்ளித்தான் நீந்தலாயின் தோல்வியே நீவிர் காண்பீர்.

காமினி விருப்பை ஓர்ந்து கணித்தபின் அவள் தன் இச்சை
போம்வழி நீவிர் போந்து புல்லியே சுகிக்க; அன்னாள்
ஆம் எனில் ஆமே என்க! அன்றெனில் அன்றே என்க!
கோமள நகையே காணில் நீவிரும் நகையே கொள்க!

மாதவள் சோர்ந்தே சித்தம் மயங்குமேல் அவள் தன் உள்ள
வேதனை நீக்கி, அன்னாள் வேண்டுறும் பணியும் செய்து
பாதுகை வேண்டு மேனும் சுமந்துமுன் தந்து பார்க்கும்
சாதனத் தருப்ப ணத்தைத் தாங்குக; தயவே செய்க.

மாலையோர் இடத்தே நாலு மணிக்கெனப் பாரென் பாளேல்
காலையே சென்று நங்கை வரும்வரைக் காத்து நின்று,
வேலையை விடுத்து நெஞ்சில் பொறுமையே விழைந்து சொன்ன
மூலையில் அவட்காய்க் காத்து நிற்றலே முறைமை ஆமாம்.

சொல்விதம் பழகி நுந்தம் கவியினைத் தொழுதபோதும்
செல்வமே பெரிதால் நெஞ்சில் சிந்தனை செய்வார்; ஆயின்
கல்வியில் கலையில் சந்தக் கவியினில் சிறந்த மேதை
மல்கினும் செல்வமின்றேல் நுங்களை மதிக்க வெண்ணார்.

பொன்கதிர் இழைத்த சேலை போர்த்தினும், பொன்னின் மிக்க
மின்கதிர் நீயே என்னப் போற்றுதல் மேவி, அன்னாள்
கண்கொளக் காட்சி யற்றுக் காணினும் இகழா தேத்திப்
பண்கொளும் இனிய வார்த்தை பகர்ந்தவள் நகைக்கச்செய்வீர்

ஐயமே தருமோர் செய்கை அகற்றுக, நுந்தம் ஆசை
மெய்யென உணர்ந்தா ளன்றேல் மெல்லியல் நம்பாள் மேலும்
பொய்யுற வென்றே நெஞ்சம் கொள்ளுமேல் பொல்லாத் துன்பாம்!
பையவே அதற்காம் போக்கில் நடப்பதே காதல் பாங்காம்!

★

(ஓவிட் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே உதித்த இத்தாலியக் கவிஞர். சுமார் 2500 ஆண்டுகளுக்கு முந்தியவர். அவர் 'Ars Amoris' (The Art of Love) என்று ஒரு நூல் எழுதியிருக்கிறார். பெரிய நூல். அந்த நூலின் சிறு பகுதியே இங்குத் தமிழாக்கப்பட் டிருக்கிறது.

நூல் அரங்குக்கு அனுப்பும்போது இரண்டு பிரதிகள்
அனுப்புதல் வேண்டும்.

நூல் அரங்கு

புரட்சி எழுந்தது (கதைகள்) — ஆசிரியர்: 'நிஷ்டை' — கிடைக்கும் இடம்: புதுமலர் நிலையம், இராஜ பாளையம் — விலை 12 அணா.

பதினொரு கதைகளை உள்ளுறையாகக் கொண்டுள்ள இந்தப் புத்தகத்தைப் பொழுதுபோக்காகப் படிக்கலாம்; சில இடங்களில் சிந்தனையைத் தூண்டும் சந்தர்ப்பங்களும் வருகின்றன. ஏழ்மை, காதல், கற்பழிவு, தற்கொலை......... பல நரம்புகளிலும் இசை எழுப்பப்படுகின்றது. இனிப்பும் காரமும்—கசப்புங்கூட—விரவிய கதைகள்; சமுதாயச் சித்திரங்கள். அச்சுப் பிழைகள் கண்ணையும் கருத்தையும் உறுத்துகின்றன. விலை மலிவு.

காமமும் காதலும் — ஆசிரியர்: திரு. ஆ. கந்தசாமி, பி. ஏ. — கிடைக்கும் இடம்: மகிழ்ச்சி இல்லம், விருதுநகர் — விலை 8 அணா.

தமிழ் மொழிக்கே சிறப்பானது பொருளிலக்கணம். அதன் ஒரு பகுதியாகிய அகப் பொருட் பிரிவில் தமிழ்ப் புலவர்கள் கற்பனை உயர்வில் இமயச் சிகரத்தை எட்டிப் பிடித்தவர்கள்; நுட்பத் திறத்தில் பசிபிக் பெருங்கடல் ஆழங் கண்டவர்கள் .... ஆனால், அந்தத் திறங்களை யெல்லாம் உணரவேண்டுமானால், செய்யுட்கள் புரியவேண்டுமே! இடையிடையே அகப்பொருட் பாடல்கள் விரவிவரும்படி எத்தனையோ உரைநடை நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றிலும் செய்யுட்பகுதி சிலர்க்கு விளங்குவதில்லை. அவர்களுக்கும் அகப்பொருளை விளக்கும் நோக்கத்துடன் எழுந்துள்ளது இந்த நூல். கதை படிப்பதுபோல் படித்து, தமிழ் இலக்கியச் செய்திகளை உணர்ந்து கொள்ள இந்தச் சிறு நூல் உதவும். இலக்கியப் பாடல்களையும் இலக்கணத் துறைகளையும் மனத்திலே வைத்துக் கொண்டு ஆசிரியர் எழுதியுள்ளார். ஆகையால், செவ்விய நடை இந்த நூலின் சிறப்பாக உள்ளது. ஆனால், பாஷை, ரம்மியம், விஷயம், சித்தித்தமை போன்ற சொற்களும், சந்தை நடை உரையாடலும் ஆங்காங்கே தலைகாட்டுகின்றன. சிற்சில இடங்களில் அச்சுப் பிழைகளும் காணப்படுகின்றன. (நூல் உருவாக்கும் போது — அதிலும் இலக்கியச் சார்புடைய நூல்களை உருவாக்கும் போது — அச்சுப் பிழைகள் இல்லாமல் பார்த்துக்கொள்வது இன்றியமையாத கடமை.) குறைந்த விலையில் நிறைந்த பயன் தரும் நோக்கத்தோடு எழுந்துள்ள இந்த நூல் யாவராலும் போற்றுதற் குரியது.

வ. உ. சிதம்பரம் பிள்ளை மலர்: கட்டுரைத் தொகுப்பு — வெளியீட்டோர்: பம்பாய்த் தமிழ்ச் சங்கம், மாதுங்கா, பம்பாய் — விலை ரூபாய் 1—4—0

ஒரு நூலுக்குப் பொதுவாக இரண்டு வகையில் மதிப்பு ஏற்படலாம். எழுதிய ஆசிரியரின் புகழால் நூலுக்கு மதிப்பு ஏறுவதுண்டு. நூலில் கூறப்பட்ட பொருளால் புத்தகம் மதிப்படைவதும் உண்டு. இந்தப் புத்தகத்தில் டாக்டர் மு. வ. வையாபுரிப் பிள்ளை, கவிமணி சோமசுந்தர பாரதியார்.... .....போன்றவர்களின் எழுத்தோவியங்கள் கப்பலோட்டிய தமிழராகிய சிதம்பரனாரைப் பற்றிய நினைவை ஊட்டுகின்றன. இந்த இரண்டு சிறப்புகளோடு, இந்த வெளியீட்டுக்கே உரியதாக மூன்றாவது சிறப்பும் ஒன்று உள்ளது. தமிழகத்தின் எல்லையைக் கடந்தும், தமிழன்னையின் சந்நிதியில் தவம்புரிகின்ற பம்பாய்த் தமிழர்களின் காணிக்கையாக இந்த நூல் அமையும் பேறு பெற்றிருக்கிறது. ஒரு பொறுப்பை மேற்கொள்வது கூடப் பெரிதில்லை; அதனை ஒழுங்காக நிறைவேற்றுவதே சிறப்புடையது. பம்பாயிலிருந்து கொண்டு தமிழறிஞர்களின் கட்டுரைகளைத் தொகுத்து மிக அழகான முறையில் ஒரு தமிழ்ப் புத்தகம் வெளியிடுவதில் எவ்வளவோ இடையூறுகளை யெல்லாம் திறம்படச் சமாளித்து வெற்றி பெற்றுள்ள பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தாரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். சிதம்பரனாருடன் நெருங்கிப் பழகிய பாலி—சு. சண்முகசுந்தரம், திரு. வையாபுரிப் பிள்ளை, சிதம்பரனாரின் மகன் திரு. வ. உ. சி. சுப்பிரமணியம் முதலான பலரும் சிதம்பரனாரின் வாழ்க்கைச் சிறப்பையும் பண்பின் மாண்பையும் பலபட விரித்துரைக்கின்றனர். பேராசிரியர் நவநீதகிருஷ்ணன் கப்பற்கலைபற்றி விஞ்ஞானக்கட்டுரை வழங்கியிருக்கிறார் .... சிந்தனைக்கு நல்ல விருந்தைத் தந்திருக்கிறார்கள். எல்லாத் தமிழர்களுமே தமிழகத்தை விட்டுப் போய்விட்டால், அவர்களால் நல்ல ஆக்க வேலைகள் செய்யமுடியும் என்று தோன்றுகிறது.........

●

இலங்கைத் தமிழ் விழா மலர்: கிடைக்கும் இடம்: திரு. க. நவரத்தினம், சாந்திநிகேதன், பி. ஏ., தம்பிலேன், யாழ்ப்பாணம், இலங்கை. விலை ரூ. 5. (தபால் செலவு 50 சதம்)

தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் இலங்கையில் நடத்திய தமிழ் விழா பல வகையில் நலம் பயந்துள்ளது. அவற்றுள் ஒன்று இம்மலர். இலங்கை பற்றிய இலக்கிய, வரலாற்றுக் குறிப்புகள், தமிழ் மொழி அங்குப் பெற்றுள்ள இடம், இலங்கைத் தமிழரின் தமிழ்ப் பணி......... போன்ற பயன்படும் எண்ணிறந்த குறிப்புகளை இதனால் அறியலாம். படங்களோடு தெளிவான அச்சில் எழில்பெற வெளியிட்டுள்ள இந்த நூல் என்றும் பயன்படக்கூடிய களஞ்சியமாகும்.

●

கிடைக்கப்பெற்றோம்

முருகப்பெருமான் திருப்பதிகங்கள்: ஆசிரியர்: சைவசித்தாந்தப் புரவலர்—தமிழ் வள்ளல் மெய்யப்பச் செட்டியார் — செட்டிநாடு அச்சகம், தேவகோட்டை — இலவசம் (?)

●

விளையாட்டா, வினையா?

"இளங்கணத்தான்"

வேற்றுமை:

விளையாட்டாகப் பேசினால் வினையாக எடுத்துக்கொண்டு விபரீதமான விளைவுக்கு ஆளாகிற நிலையை நாம் அறிவோம். நாம் பேசும் பேச்சு, எழுதும் எழுத்து—என், செய்யும் செயல்கள்-எல்லாவற்றிலும் விளையாட்டாக இருப்பவை என்றும் வினையாக இருப்பவை என்றும் இரு வேறுபட்ட நிலைகளிருப்பதை அறிகிறோம்.

விளையாட்டு:

"விளையாட்டாகத்தான் நான் அதைச் செய்தேன்" என்று யாராவது கூறினால் அதன் விளைவு என்ன? அவர் செய்ததில் புறநோக்க நிலை எதுவும் இன்றித் தன்நோக்க நிலையே இருந்தது. இதுவே "விளையாட்டாக"ச் செய்த அச்செயலின் சுருக்கப் பொருள். புறக் கட்டுப்பாடு எதுவும் இல்லாமல் தன்னிச்சையாகவே செய்யும் செயல்தான் விளையாட்டு; தன்னிச்சை நிறைவு பெறும் நிலையிற்றான் விளையாட்டு உள்ளது; பிறர் மனத் திருப்திக்காக எது செய்தாலும் அதில் விளையாட்டு இல்லை. சுருங்கக் கூறின் சுயேச்சையுடன் செய்யும் செயல்தான் விளையாட்டு; சுயேச்சையற்ற நிலையில் நிகழும் செயல்கள் விளையாட்டாகா. தன்னிச்சை நிறைவுக்காகச் செய்யும் சுயேச்சைச் செயல்கள் பிறரைத் துன்புறுத்துவதாக இருந்தால் அந்த "விளையாட்டு" வினையாக, முடிந்து விடுகிறது. அந்த விளையாட்டு பிறருக்கும் இன்பத்தைத் தருவதாக இருந்தால் அது விளையாட்டாகவே நிலைத்து விடுகிறது; இரட்டித்த விளையாட்டாக ஆகிவிடுகிறது.

வினை:

மனத்தின் செயல் இரண்டு விதங்களில் வெளிப்படுகிறது. மனம் புறநிலையைப் பெரிதும் கருதாமல் விளையாடுவது ஒரு தோற்றம். மனம் புறநிலையைக் கருதித் தொழிற்படுவது மற்றொரு தோற்றம். புற நிலையைக் கருதியே தொழிற்படுதலுக்கு வினை அல்லது வேலை யென்று பெயரிடுகின்றனர். ஒருவர் வேலை செய்யும்போது புற நிலையைக் கருதியே வேலை செய்கிறார். கூலி அல்லது சம்பளம் அல்லது ஊழியம் கருதியே வேலை செய்த நிலையில் சுய இச்சை தோன்றுவதில்லை. சுயேச்சையுடன், மன மகிழ்ச்சியுடன், தன் இஷ்டத்துக்காக விளையாடுதலுக்கும் பிறர் இஷ்டத்துக்காக "ஆடவேண்டிய" நிலைக்கும் உள்ள வேற்றுமையை நாம் எளிதில் உணரலாம்.

ஒருவர் 'ஆடுகிற' ஆட்டம் விளையாட்டமாக இருக்கலாம், அல்லது வினையாட்டமாக இருக்கலாம். ஒருவரது விளையாட்டு மற்றவருக்கு வினையாட்டாகப் படலாம்; ஒருவரது வேலை இன்னொருவருக்கு விளையாட்டாகப் படலாம். விளையாட்டு என்றும் வேலையென்றும் வேறுபாடு கற்பிப்பதெல்லாம் அவரவருடைய மனநிலையைப் பொறுத்தேயாகும். நடனக் கச்சேரி நடைபெறுகிறது; நாட்டியம் ஆடுவதைக் கண்டு களிப்படைகிற கூட்டத்துக்கு நாட்டியம் ஒரு விளையாட்டாகத் தோன்றும். நாட்டியம்

ஆடுபவருக்கோ... அது ஒரு வேலை!... கடினமான—மிகக் கடினமான-வேலை; பார்ப்பவர்கள் சுவைக்கும்படி செய்ய வேண்டிய பெருங் கடினமான வேலை! அதே நடனக்காரர் தம் இஷ்டத்துக்கு ஏதாவது ஒரு பாடலுக்கு அபிநயம் 'பிடித்து'க்கொண்டிருந்தால் அது அவருக்கு விளையாட்டாக இருக்கலாம். இவ்வாறே பல எடுத்துக்காட்டுக்களை அடுக்கிக்கொண்டே போகலாம்; ஒரு சிலரின் விளையாட்டுக்காகப் பலர் "விளையாடும்" இந்த உலக அரங்கில்.

வெவ்வேறு?

ஆனால் விளையாட்டு, வேலை—என இரண்டும் உண்மையிலேயே வேறுபட்டனவா? வேறுபாடு கற்பிக்கிற நிலை சரியா? வேறுபாடு இருக்கலாமா? -என்ற பல கேள்விகள் எழவேண்டும்.

விளையாட்டு என்ற சொல்லும் வேலையென்ற சொல்லும் தெரிவிக்கும் சொல்லிலக்கணம் மிக ஆழ்ந்த கருத்தொற்றுமையைக் குறிக்கிறது. விளைவிக்கும் ஆட்டம் (creative activity) விளையாட்டாகும்; ஆக்க வேலையெல்லாம் விளையாட்டே. ஆக்கத்துக்காக அழிவு நடந்தால் அந்த வேலையும் விளையாட்டே. ஏன், ஈசன் செய்யும் ஐந்தொழில்களும் திரு விளையாடல்கள்தாமே! ஆக்கல், அழித்தல், மறைத்தல், காத்தல், அருளல் என்ற ஐந்தொழிலையும் அவன் விளையாட்டாகத்தான் செய்கிறான். அம்மாதிரியே நாமும்—மக்களாகிய நாமும்—பரமாத்மாவுடன் தொடர்புள்ள ஜீவாத்மாக்களாகிய நாமும்—ஈசனின் சாயையாகக் கருதப்படும் மக்களும்—ஈசன் ஆடும் ஆட்டத்தை ஆடத் தெரிந்து அவ்வழியே தொழிற்படுதலே முறை. இம்மாதிரி வேலை செய்தால் நம்முடைய வாழ்க்கை இனிதே நடைபெறும். இல்லையெனில் இடர்ப்பாடுகளில் சிக்கி வருந்தி உழல வேண்டியிருக்கும். இது நம் நாட்டுப் பழங்கருத்து; தற்காலத்திற்கும் ஏற்ற கருத்து; விளையாட்டு—வேலையென்ற இரு சொற்களும் எடுத்துக் காட்டும் உண்மைக் கருத்து.

வெல்லுவது வேல்>வேலை-என்ற பொருளமைபபைக் குறிப்பது வேலையென்ற சொல். வாழ்க்கை வாழ்வதில் எவ்வளவோ இடைஞ்சல்கள், இடையூறுகள் வருகின்றன. அவற்றை வென்று மேற்செல்வதே வாழ்க்கையில் நடக்கவேண்டிய வேலை. நம்மை ஆக்கிக்கொள்ளச் செய்யும் வேலையெல்லாம் ஆக்க வேலையே. எனவே, வேலை, விளையாட்டு என இரண்டும் ஒன்றிற்கொன்று வேறுபாடில்லாத — இருக்கக்கூடாத — நிலையைச் சுட்டிக் காட்டுகின்றன. வாழ்வதற்கு வெல்லும் வேலை வேண்டும். அந்த வேலையை விளையாட்டாகச் செய்யவேண்டும். விளையாட்டு விளைவிக்கும் ஆட்டமாக அமைந்து ஆக்க வேலையாகத் திகழவேண்டும். விளையாட்டே வேலையாகவும், வேலையே விளையாட்டாகவும் நடைபெற வேண்டும். விளையாட்டிற்கு வேலை உடல் போன்றும், வேலைக்கு விளையாட்டு உயிர்போன்றும் இருந்தால் - வேலை வேறு, விளையாட்டு வேறு என்ற வேறுபாடு அற்று நல்ல நிலை அமையும்.

கல்வியில்:

கல்வித் துறையில் ஈடுபடும் பெரியவர்கள் எல்லோரும் விளையாட்டுப் போல (play way) எல்லா வேலைகளும் அமையும்படி அமைக்கவேண்டும் என்ற கருத்தை வற்புறுத்தி, எல்லாம் விளையாட்டாகவே ஆகிவிடாமல் வாழ்க்கை வாழ்வது என்பது வெறும் விளையாட்டான விஷயமன்று என்றும் அதனால் கல்வி பூராவும் விளையாட்டு மயமாக ஆகிவிடாமல், வேலையும் அக்கல்வியில் நல்ல இடம் பெறுமாறு செய்ய வேண்டும் என்றும் குறிப்பாகக் குறிப்பிடுவது வழக்கம். இவ்வாறான எச்சரிக்கைக் குறிப்பின்

அவசியம் என் ஏற்படுகிறது?—வேலை வேறு, விளையாட்டு வேறு என்ற வேறுபட்ட நிலை இருப்பதனாற்றான். இந்நிலை சரியான தன்று. வேலையில் விளையாட்டுக் குடிபுகுந்து விட்டால்......? அல்லது விளையாட்டில் வேலை ஒன்றி விட்டால்.....? கல்வியில் வேலை விளையாட்டாகிய உயிர் பெற்று உருவெடுத்து, விளையாட்டானது விளைவிக்கும் ஆட்டமாக ஆகி, அதன் மூலம் வேலையாக—ஆக்கவேலையாக — நிகழ்வதாய் இருந்தால் அப்போது, விளையாட்டு வேலை என்பனவற்றில் கல்வி நிபுணர்கள் சுட்டிக் காட்டும் வேற்றுமை அற்றுப் போய்விடும் அல்லவா? அஃதெவ்வாறு நடக்கும்?

வழி ?

பிள்ளைகள் பள்ளியில் செய்யும் வேலை பிள்ளைகட்கு ஊக்கம் அளிப்பதாய், பிள்ளைகளுடைய இயல்பூக்கங்களுக்குத் (Instincts) தக்க மடைமாற்று (sublimation) அளித்துத் தூய்மை தரத்தக்கதாய்ப் பிள்ளைகட்கு மன அமைதியை யளிக்கத் தக்கதாய், மகிழ்ச்சியை அளிக்க வல்லதாய்—சுருங்கக் கூறினால் பிள்ளைகளின் அறிவை வளர்த்து ஆற்றலைப் பெருக்கி, உணர்ச்சியைப் பண்படுத்தி உயர்த்தக் கூடியதாய் அமைந்தால், அவ்வேலை எல்லாம் விளையாட்டுப் போலவே—விளையாட்டாகவே—ஆய்விடும். பிள்ளைகள் செய்யும் வேலை பொருட் பயனைத் தரத்தக்கதாய் (objective utility production) அமைந்தால் இன்பத்தைத் தர வல்லதாகும். இவ்வாறு அமையும் வேலையெல்லாம் உடலுக்கும் உள்ளத்துக்கும் வேலையை அளித்து உடலையும் உள்ளத்தையும் வளர்க்கும் ஆற்றலுள்ளது. இவ்வளவு இலக்கணங்கள் பொருந்திய வேலை, விளையாட்டா வேலையா என்றால் விளையாட்டுந்தான், வேலையுந்தான். விளைவிக்கும் ஆட்டமாக அமைந்து அது விளையாட்டாகத் திகழ்கிறது. பள்ளியில் நடக்கும் வேலைகளெல்லாம் வாழ்வதற்கு இன்றியமையாதனவாக அமைந்து, விளைவிக்கும் ஆட்டமாகவும் அமையுமாறு செய்தலே கல்வியில் வேலையும் விளையாட்டும் ஒன்றுபோல் நிகழுமாறு செய்யும் வழி. இதை ஆதாரக் கல்வி இயக்கம் நன்கு வலியுறுத்துகிறது.

'கலைக்காகக் கலை......!'

"கலைக்காகக் கலை", "அறிவுக்காக அறிவு" (Art for art sake, knowledge for knowledge sake) என்கிற கூற்றுக்களைக் கலைஞர்களும், அறிஞர்களும் அவ்வளவாக இப்போது போற்றுகிறதில்லை. கலையை மறந்து விலையை மதித்த காலத்திற்கு எதிர்ப்பாக எழுந்த எழுச்சியே கலைக்காகக் கலை என்கிற கூக்குரல். ஆனால் உண்மையில் வாழ்க்கையில் பயனுள்ள கலையையே சிறந்த கலையாக எல்லாக் கலைஞர்களும் கருதுகிறார்கள். அவ்வாறேதான் அறிவும். வாழ்க்கை வாழ்வதைச் சிறப்பிக்கக்கூடிய அறிவுதான் அறிவாகுமே ஒழிய, அறிவு என்ற ஒரு தனிப்பொருளை வாழ்க்கையிலிருந்து பிரித்து அறிய முடியுமா? அப்பேர்ப்பட்ட உயர்ந்த—'எட்டாத' அறிவால் யாது பயன்?

'விளையாட்டுக்காக விளையாட்டு!'

இவற்றைப்போல விளையாட்டுக்காகவே விளையாட்டு என்று கூறுவதையும் பயனற்ற குரலாகவே கருத வேண்டும். இந்திய கிரிக்கெட் கோஷ்டி இங்கிலாந்தில் விளையாடி வரும் இச்சமயத்தில் ஆங்கில விளையாட்டு எனக கூறப்படும் கிரிக்கெட்டைப்பற்றி வேவல் பிரபுவும், ஜார்ஜ் பெர்னாட் ஷாவும் என்ன கூறினார்கள் என்று இங்கு நினைவூட்டாவிடில் எழுதுபவருக்குக் கோட்டி பிடித்திருப்பதாகத்தான் 'கிரிக்கெட் விசிறிகள் சிறி விசிறும்'! அது ஒரு புறம் கிடக்க, விளையாட்டுக்காக விளையாட்டு என்பதில் என்ன பயன் இருக்கிறது என்பதை அறிஞர்கள் ஆராய வேண்டும். விளையாடுவதால் உடலும்,

உள்ளமும் வளர்ச்சியுற நல்ல வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதை மறுக்கவில்லை; ஆனால் வெறும் விளையாட்டை விளையாடிக்கொண்டேயிருந்தால்—இந்த விளையாட்டைத் தவிர வேலையே கிடையாதென்றால் நிலை என்னாவது என்று நினைத்த நிலையிற்றான் படைத் தலைமையும், நாட்டுக் காவல் தலைமையும் பூண்டிருந்த வேவல் பிரபுவும், பெரும் புலவரும் கலைஞருமான பெர்னார்ட்ஷாவும் அந்த மாதிரியான விளையாட்டைப் பற்றி அவ்வளவு சீறிவிழுந்து பேசினார்கள். (Cricket is a game in which one fool hits a ball and eleven fools run after it — G. B. Shaw) கிரிக்கெட்டை ஓர் எடுத்துக்காட்டாக எடுக்கவாய்ந்தது தற்செயலாக நேர்ந்ததே. எந்த விளையாட்டு என்றாலும் 'விளையாட்டுக்காக விளையாட்டு' என்ற நிலை மாறவேண்டும். விளைவிப்பதற்காக விளையாட்டு என்ற நிலை வர வேண்டும். விளைவிப்பதற்காக என்றால், பொருள் விளைவைமட்டும் குறிப்பிடவில்லை. உடல் உள்ளம், இவற்றை விளைவிப்பதெல்லாம் விளையாட்டுத்தான். ஆனால்.... வேலை வேறு, விளையாட்டு வேறு என்ற நிலையை நிலைநாட்டும் நிலை கூடாது. அந்தச் சீர்குன்றிய நிலையை நிலைநாட்டக்கூடிய எந்த விளையாட்டும் தவறானதாகும்.

"வேலை, விளையாட்டு இவற்றிற்கிடையே வேறுபாடு கற்பிக்கும் நிலையானது நம் சமூகத்திலும், ஆன்மிகத்துறையிலும் ஏற்பட்டுள்ள குழப்பத்தைக் காட்டும் அறிகுறியாகும்; உண்மையிலேயே வேலை வேறு, விளையாட்டு வேறு அல்ல" என்று டாக்டர் இர்வின் எட்மன் கூறும் கூற்றை உற்று நோக்குதல் வேண்டும்.

சமூகச் சீர்கேடு ஒழிய வேலை வேறு விளையாட்டு வேறு எனக் கருதும் நிலை மாறவேண்டும்; அதற்கு அடிப்படை, கல்வித் திட்டத்திலேயே அமைய வேண்டும். ஆக்க வேலை செய்து, அதன் மூலம் கல்வி பெறுமாறு செய்து, அந்த ஆக்க வேலையே விளைவிக்கும் ஆட்டமாக அமைகிற நிலையில் உண்மையான விளையாட்டாக அமைந்து வேலைக்கும் விளையாட்டிற்கும் வேறுபாடில்லாத நிலையை உண்டாக்கும். வேலையை விளையாட்டாகச் செய்து, விளையாட்டு வேலையாக அமைந்து உருவாவதை நாம் வரவேற்றால் நன்மை விளையும். இதை ஆதாரக் கல்வி இயக்கத்தார் சுட்டிக் காட்டுகின்றனர். நல்வழி பிறக்குமா?

ஆதாரக் கல்வியில் விளையாட்டு:

ஆதாரக் கல்வியில் வேலைதான் விளையாட்டா? 'வெறும்' விளையாட்டே கிடையாதா? அந்த விளையாட்டும் உண்டு; பல உள. கூட்டு விளையாட்டுக்கள், ஆடல் பாடல்கள், கும்மி, கோலாட்டம் முதலியன எல்லாம் உண்டு. இவற்றில் முக்கியத் தன்மைகள் இரண்டு. 1. மிகுந்த பணச் செலவும் பிரமாதமான கருவிகளும் இல்லாத நிலை. 2. எல்லோரும் சேர்ந்து விளையாடுதல். சுற்றுப் புறத்தில் கிடைக்கக்கூடிய பொருள்களைக் கொண்டே விளையாடுதலில் பெரும் செலவு கிடையாது. ஆனால் மகிழ்ச்சிக்குக் குறைவில்லை. மற்றொரு நிலையையும் நாம் கவனிக்க வேண்டும். விளையாடுவதில் எல்லோரும் ஒருவர் தவறாமல் (நோயாளி தவிர) - ஆசிரியரும் சேர்ந்து ஆடுவார்கள்; கூடிப் பாடுவார்கள். இங்கே ஆடுகின்ற கட்சி ஒன்றாகவும் ஆடுவதைப் பார்த்துக் கொண்டு 'ரசிக்கிற' கட்சி மற்றொன்றாகவும் இராது; இருக்கக்கூடாது. இந்த 'இருமை' நிலை இருக்கும் வரை விளையாடுவது ஒரு கட்சி, அந்த விளையாட்டைப் பார்த்து அனுபவிப்பது மற்றொரு கட்சியாக இருக்கும். அப்படியிருந்துவிட்டால் பார்ப்பவர்கட்காக ஆடுகிற நிலை வந்துவிட்டால்— அந்த ஆட்டம் விளையாட்டா? வினையாட்டா?

“ஸ்ப்ரே பெயின்டிங்”

திரு. அ. இராமகோபால்

★

“பெயின்டிங்” எனப்படும் வர்ணம் பூசும் தொழில் நம் நாட்டில் நெடுங் காலமாக நடந்து வருகிறது. வர்ணம் பூசத் தூரிகை என்னும் ஒருவகை மயிர்க்குச்சமே பயன்படுகிறது. ஆனால் சமீப காலத்தில் மேலை நாடுகளிலும் நம்நாட்டிலும் வர்ணம்பூசச் சிலநவீன முறைகள் புகுந்துள்ளன. அவற்றில் ஒன்றுதான் “ஸ்ப்ரே பெயின்டிங்” (spray painting—பீச்சு வர்ணம்)

சலூன்காரர்கள் முகத்தைக் கழுவவும் மயிரைப் படியவைக்கவும் “ஸ்ப்ரே” அடிப்பதைப் பார்த்திருக்கலாம். நகராட்சி அலுவலாளர்கள் மலேரியா ஒழிப்பு, பிளேக் ஒழிப்புக்காக டி. டி. டி. (D. D. T.) “ஸியனோகாஸ்” (cyanogas) ஸ்ப்ரேக்கள் அடிப்பதையும் பார்த்திருக்கலாம். இதே போல் வர்ணங்களை ஸ்ப்ரே அடித்துப் பூசும் முறையையே பீச்சு வர்ணம் எனக் கூறுவது.

வர்ணங்களில் (paints) பலவகைகள் உண்டு. அவற்றில் “நைட்ரோ செல்லுலோஸ்” (Nitro-cellulose paints) “சிந்தடிக் எனுமல்” “ஆடோ எனுமல்” (Synthetic and Auto Enamel paints) மூன்றுமே ஸ்ப்ரே பெயின்ட் செய்ய ஏற்றவை. எனுமல் பெயின்டுகள் இரண்டும் வெயில், காற்று, மழை தூசி எதற்கும் அசைந்து கொடுக்காம லிருப்பவை. வர்ணம் பூசியுள்ள பகுதி அடிபட்டாலும் ஒடிந்தாலும் வர்ணம் அப்படியே இருக்கும். உதிரவோ, கீறல் ஓடவோ செய்யாது. வர்ணம் பூசியவுடன் மிக விரைவில் காய்ந்து போகவும் கூடாது. போலிச் சரக்குகள் மலிந்திருப்பதால் பெயின்ட் வாங்கும் போது பெயர் பெற்ற கம்பெனியுடைதாகப் பார்த்து வாங்குவது நல்லது.

வேண்டிய சாதனங்கள்:

இத்தொழிலை நடத்தக் கீழ்க்கண்ட சாதனங்கள் தேவைப்படும்.

1. காற்றை அழுத்தும் சாதனம் (Air compressor)
2. மின்சார மோட்டார் (Electric Motor)
3. காற்று நிரப்பும் தொட்டிகள் (Air tanks)

(4) ஸ்ப்ரே அடிக்கும் சாதனம் (Spray gum)

(5) ரப்பர்க் குழாய்கள் (Spray Hoses)

மேற்படி சாதனங்கள் அனைத்தும் ஒரே அடுக்காக வாங்கலாம். அவற்றிக்கு “ஸ்ப்ரே பெயின்டிங் செட்” எனப்பெயர். இச்“செட்”டுகளில் அநேக வகைகள் உண்டு. இவற்றைப் பற்றி விவரம் வேண்டுவோர் கிரீவ்ஸ் காட்டன் (Greaves Cotton & Co.,) ஜான் பிலமிங் (John Fleming & Co.,) போன்ற கம்பெனிகளுக்கு எழுதினால் விவரங்கள் கொடுப்பர். உபயோகிக்கும் முறைகளையும் விவரமாக அவர்களிடமிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

கட்டிடம்:

இத்தொழிலை ஆரம்பிக்க விசேடமான கட்டிடம் எதும் தேவையில்லை. வர்ணப்பூச்சு நன்றாகக் காய்வதற்கு முன் அதன்மீது தூசி படிதல்

கூடாதாகையால் தூசி பறக்காத இடமாக இருத்தல் வேண்டும். பெரிய நகரங்களாக இருந்தால் பெரிய மாளிகைகளின் பின்புறம் உள்ள மோட்டார் கொட்டடிகள் (garages) போதுமானவை. அவற்றில் காற்றும் சூரிய வெளிச்சமும் தாராளமாகப் புகவழி செய்து கொள்ளவேண்டும். வர்ணம் பூசும் போது சகிக்க முடியாத டர்பன்டைன் நாற்றம் வீசுமாகையால் அதைப் போக்க மேலே கூரையில் துவாரங்கள் அல்லது காற்றுப்போக்கிகள் கட்டுவதோடு காற்று உறிஞ்சும் விசிறிகள் (Exhaust fans) பொருத்துவதும் நல்லது.

வர்ணம் பூசுமுன்

வர்ணம் பூசத்தொடங்குமுன் முதல் வேலையாக வர்ணம் பூசவேண்டிய பொருளின்மீதுள்ள பழைய வர்ணத்தைப் போக்கிவிடவேண்டும். வர்ணத்தைப்போக்க வர்ணம் போக்கி (Paint Remover) என ஒருவிதக் கலவை இக்காலத்தில் விற்கிறது. இதன் உதவியால் பழைய வர்ணங்களை எளிதில் போக்கி விடலாம். காஸ்டிக் சோடா கலந்த நீரின் (Caustic Soda Strong Solution) உதவியாலும் வர்ணத்தைப் போக்கலாம். கூர்மையான கத்தியின் உதவியால் சுரண்டியும் எடுத்துவிடலாம். பிறகு 1-ம் நம்பர் ஓ. கே. கறுப்புக் காகிதத் (O. K. Black Paper No 1) தால் நன்றாய்த் தேய்க்க வேண்டும். இப்படிச் செய்தால் வர்ணம் முழுவதும் நீங்கிவிடும். தைலப்பசை மாத்திர மிருக்கும். இதைப் போக்க 150-200 எண்ணுள்ள நீர் உறிஞ்சா மினுப்பூட்டும் தாளால் (150-200 grade water proof polish paper) நன்றாகத் தேய்க்க வேண்டும். இப்படித் தேய்க்கும்போது சாதாரண நீர் அல்லது சோப்பு நீரைக் கடற் பஞ்சு அல்லது துணியின் உதவியால்விட்டுக் கொண்டே தேய்க்க வேண்டும். தேய்த்துமுடித்த பாகத்தை உடனுக்குடன் தண்ணீர் விட்டுக் கழுவிச் சுத்தம் செய்துவிட்டுத்தான் பிறகு அடுத்த பகுதியைத் தேய்க்க ஆரம்பிக்கவேண்டும். இப்படிச் செய்தால் சிறிது நேரத்தில் தைலப்பசையும் நீங்கிவிடும். தண்ணீர் விட்டுக் கழுவிய இடங்களை உடனுக்குடன் ஈரப்பசை சிறிதுமில்லாமல் நன்றாகத் துடைத்து விடவேண்டும். இப்படிச் செய்யத் தவறினால் துரு ஏற ஆரம்பித்து விடும். துரு ஏறின இடங்களில் எப்படித்தான் வர்ணம் பூசினாலும் பிரயோசனப்படாது. வர்ணம் பூச ஆரம்பிக்குமுன் வர்ணம் பூசவேண்டிய பொருளின்மீது தைலப்பசை, துரு, ஈரம், சுரண்டிய பழைய வர்ணத்தின் தூசிகள் ஏதும் சிறிதுமில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிக மிக அவசியம்.

முதல் வர்ணம்

"ஆன்டிட் கரோஸிவ் பிரைமர்" (Anti Corrosive Primer) என்னும் வர்ணத்தைக் கலக்கி அதோடு 5 லிருந்து 10% வரை "தின்னர்" (Thinner) கலந்து இலேசாக்கி ஸ்ப்ரே கன்னில் நிரப்பிக்கொள்ள வேண்டும். காற்றின் அழுத்தம் 40 லிருந்து 50 பவுண்டு வரை இருக்கும்படி வைத்துக் கொள்ளுவது நல்லது. வர்ணத்தை மாறி மாறி இடப் புறமிருந்து வலப் புறமும், வலப் புறமிருந்து இடப்புறமும் பீச்சிக்கொண்டே செல்லவேண்டும். வர்ணப் பூச்சு மிகவும் இலேசாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். வர்ணம் எவ்விடத்திலாவது திட்டுத் திட்டாக நிற்கும்படியோ அல்லது வழியும்படியோ அடிக்கக் கூடாது. இப்படி முதல் வர்ணம் அடித்து முடித்ததும் அதைக் காயவிட வேண்டும். சுமார் எட்டு மணி நேரத்தில் இது நன்றாகக் காய்ந்துவிடும். இவ்விடைக் காலத்தில் வர்ணம் பூசிய

பொருள்மீது தூசிபடியாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிக மிக அவசியம்.

பில்லர் பூசுதல்:

வர்ணம் பூசும் பொருளின்மீது ஏதாவது சந்துபொந்துகள், பள்ளங்கள் இருந்தால் அதைச் சரிக்கட்ட பில்லர் புட்டி (Filler Putty) என ஒரு வகைச் சாந்து விற்கிறது. அதை வாங்கிச் சிறிது டர்பன்டைன் எண்ணெய் விட்டுக் குழப்பிக் கைவிரல் அல்லது இரும்புத் தகட்டினால் அவசியமான இடங்களில் பூசவேண்டும். பூசிய புட்டி நன்ருக உலர்ந்ததும் 240-320ம் நம்பர் வாடர் புரூப் பேப்பரால் (நீர் உறிஞ்சாத தாள்) மெதுவாகத் தேய்த்து மற்றப் பகுதிகளோடு ஒரே சமமாக மேடுபள்ளம் எதுமின்றிச் செய்துவிட வேண்டும். நெட்டு வசத்தில் தேய்த்துச் சமப்படுத்திஞல் மேலே பூசும் வர்ணம் அதிகப் பளபளப்பாகக் காணப்படும். காகிதத்தால் தேய்த்து முடிந்ததும் தேய்த்த பகுதிகளைத் துணியால் துடைத்துச் சுத்தம் செய்துவிட வேண்டும். பில்லர் புட்டியில் (சாந்துகளில்) பல நிற வர்ணங்கள் உண்டு. அவற்றில் வெள்ளை அல்லது சாம்பல் (grey) நிறப் புட்டிகளே இப்படிப் பூச ஏற்றவை.

இரண்டாவது வர்ணம்:

சாந்து பூசி முடிந்ததும் "பிரைமர் ஸர்பேசர்" (Primer surfacer முதல் படுகை) என்னும் வர்ணத்தைக் குலுக்கி அதோடு 5% தின்னர் அல்லது டர்பன்டைன் எண்ணெய்விட்டுக் கலந்து கொள்ளவேண்டும். முதல் படுகை வர்ணத்தில் பல் நிறங்கள் உண்டு. கடைசியாக நாம் எந்த நிற வர்ணமடிக்க விரும்புகிறேமோ அதே நிறமுள்ள முதல் படுகையைத் தேர்ந்தெடுப்பது நல்லது. தின்னர் அல்லது டர்பன்டைன் விட்டுக் கலந்த பிரைமர் சர்பேஸரை ஸ்ப்ரே கன்னில் (பீச்சுக் குழாயில்) விட்டு ஆன்டி கரோஸிவ் பிரைமரைப் பூசியது போலவே இதையும் பூசவேண்டும். அதேபோல் திட்டுத் திட்டாக இருக்கும்படியோ வழியும்படியோ அடிக்கக்கூடாது. காயும் போது தூசி படியாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். நன்ருகக் காய்ந்ததும் 240-280 எண்ணுள்ள நீர் உறிஞ்சாத மினுப் பூட்டும் காகிதத்தால் வர்ணம் பூசிய பகுதிகளைத் தேய்த்துப் பிறகு சுத்தமாகத் துணியால் துடைத்துவிடவேண்டும். இப்படிச் செய்வதால் சரியாக ஒட்டாத வர்ண அணுக்கள் வெளி வந்துவிடும்.

எனுமல் வர்ணம்:

முதல் படுகை வர்ணம் நன்ருகக் காய்ந்ததும் செயற்கை (சிந்தடிக்) அல்லது ஆட்டோ எனுமல் வர்ணத்தில் 5-10% தின்னர் விட்டுக் கலந்து பீச்சுக் குழாயில் நிரப்பிப் பூசவேண்டும். ஒரே தடவையில் கனமாகப் பூசுவதைவிட முதலில் லேசாகப் பூசி அது நன்ருகக் காய்ந்ததும் மறுபடியும் இலேசாகப் பூசிக் காயவிடுவது நல்லது. முன் கூறியபடியே திட்டுத்திட்டாக நிற்காமலும் வழியாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். காயும்போது தூசி படியாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். எனுமல் வர்ணம் காய்ந்ததும் வர்ணம் பூசிய பொருள் பார்க்கப் பளபளப்பாக இருக்கும். அதைவிட இன்னும் அதிகமான பளபளப்பு வேண்டுமானல் "கிளியர் வார்னிஷ்" (clear varnish) எனுமல் வர்ணத்தின் மீது பூசலாம். குறைவான பளபளப்பு வேண்டுமானல் "வாக்ஸ் வார்னிஷ்" (wax varnish) பூசி மிருதுவான துணி அல்லது கறுப்புத் தோல் (Black Leather) உதவியால் நன்ருகத் தேய்க்கவேண்டும். இப்படிச் செய்தால் பளபளப்புக் குறையும்.

முக்கியக் குறிப்புகள்:

(1) ஒரே பொருள்மீது இரண்டு மூன்று நிற வர்ணங்கள் பூச வேண்டியிருந்தால் முதலில் பூசிய நிறத்தின்

மீது காகிதத்தை ஒட்டவைத்து விட்டு மற்ற வர்ணத்தைப் பூசலாம். கைபிடி, கண்ணடி போன்றவைகள் மீது கிரீசைத் (grease) தடவி விட்டு வர்ணம் பூசினுல் அவற்றின் மீது வர்ணம் படியாது. அப்படித் தப்பித் தவறிப் படிந்தாலும் டர்பன்டைன் எண்ணெய் அவற்றைப் போக்கிவிடும்.

(2) வர்ணம் நாள்பட்டதானுல் அதை மிகவும் நன்ருகக் கலக்கி அதில் கொஞ்சம் "டிரையர்" (drier) சேர்ப்பது நல்லது. பிரைமர் சர்பேஸர், ஆன்டி கரோஸிவ் பிரைமர் இரண்டையும் கூடுமானவரை அதிக நேரம் கலக்குவது நல்லது.

(3) ஒரே கம்பெனி வர்ணமாகவும் ஒரே இனத்தைச் சேர்ந்ததாகவும் இருந்தால் இரண்டு மூன்று நிற வர்ணங்களை ஒன்று சேர்த்துக் கலக்கி நூதன வர்ணங்கள் தயாரித்துக் கொள்ளலாம். வெவ்வேறு கம்பெனி வர்ணமாகவோ அல்லது வெவ்வேறு இன வர்ணமாகவோ இருந்தால் இப்படிக் கலப்பு நிறம் தயாரிப்பது பயன்படாது.

(4) வர்ணங்களைப் பீச்சுக் குழாயில் நிரப்புமுன் அவற்றை நன்ருக வடிகட்டிவிடவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் சாதாரணமாக வர்ணங்களில் உள்ள கரையாத கட்டிகள் காய்ந்த வர்ணப் பக்குகள் முதலியவை பீச்சுக் குழாயின் துவாரங்களை அடைத்துக்கொண்டுவிடும்.

(5) வாடர் புரூப் காகிதம் கிடைக்காத சமயங்களில் அதற்குப் பதில் கடல்நுரைக் கட்டிகளை உபயோகிக்கலாம்.

(6) வர்ணம் பூசி முடிந்ததும் தாமதிக்காமல் பீச்சுக் குழாயில் உள்ள வர்ணத்தைக் கொட்டிவிட்டு அதைச் சுத்தம் செய்துவிடவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பீச்சுக் குழாய் சீக்கிரம் கெட்டுப்போகும்.

கார்கள், பஸ் பாடி, இரும்புப் பெட்டிகள், அலமாரிகள், பீரோக்கள், டிரங்க் பெட்டிகள், சூட்கேஸ்கள், சைக்கிள் பாகங்கள், இயந்திரங்கள் இன்னும் இவை போன்று எத்தனையோ வகையான பொருள்களுக்கு ஸ்ப்ரே பெயின்ட் செய்யலாம். இத்தொழிலை மேற்கொண்டு நல்ல வருவாயைச் சுலபமாகத் தேடிக்கொள்ளலாம்.

'குரைத்தால்தான் சாப்பிடுவேன்'

நல்ல நாய் வளர்க்கவேண்டும் என்று ஒருவருக்கு நெடுநாளாக ஆசை. ஒரு நாள் உயர்ந்த இனத்தைச் சேர்ந்த நாய்க்குட்டி வாங்கி வந்தார். அதைப் பல வகையிலும் 'பழக்க' எண்ணினுர். சாப்பாடு வேண்டும்போதெல்லாம் நாய் குரைக்கவேண்டும் என்று நினைத்து, அதற்காக நாயைப் பழக்கத் தொடங்கினுர்.

உணவுத் தட்டை நாய்க்குட்டிக்கு அருகில் — ஆனுல் எட்டிவிட முடியாத இடத்தில் — வைத்துக்கொண்டார். கொஞ்ச நேரம் அவர் குரைப்பார்; பிறகு தட்டை எடுத்துக் குட்டிமுன் வைத்துவிடுவார். இப்படிப் பழக்கிவிட்டால் உணவு வேண்டும்போதெல்லாம் நாய் குரைக்கும் என்று எண்ணினுர்.

ஆனுல், முடிவு எப்படி ஆயிற்று, தெரியுமோ?

சில நாள் கடந்தது. உணவுத் தட்டை முன்னுல் வைத்தாலும் நாய்க்குட்டி சாப்பிடுவதில்லை. 'எஜமான்' குரைத்தால்தான் சாப்பாடு என்று நிலைமை மாறிவிட்டது.

சங்க காலப் பாண்டியர்கள்

திரு. தி. வை. சொக்கப்பா, M. A., L. T.

கல்வியும் கலைகளும்: மக்கள் முன்னேற்றத்திற்குக் கல்வி இன்றியமையாதது என்பதை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் போன்ற மன்னர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். ஊர்தோறும் கல்வி பயிற்றக் கணக்காயர் இருந்தனர். குலந் தொழில் வேறுபாடின்றி இரு பாலாரும் கல்வி கற்றனர். புலவர் பெருமக்களைப் புரவலர் பெரிதும் போற்றி ஆதரித்தார்கள். நூலாராய்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் நாட்டில் அமைதி நிலவவேண்டும் என அறிந்து அதனை நிலைநாட்டினர். மதுரையின்கண் இருந்த பட்டிமண்டபத்தில் சமய வாதங்கள் நிகழ்ந்தன. அங்கிருந்த கழகததில் பல அரிய நூல்கள் அரங்கேறின. அவற்றில் தொல்காப்பியமும் திருக்குறளும் தலைசிறந்தவை. முத்தமிழ்க் கல்வி, சமய அறிவு எவ்வாறு வளர்ந்தனவோ அவ்வாறே கலைகளும் அரசர் ஆதரவுடன் வளர்ந்தோங்கின. புலவர்க்கும் கலைஞர்க்கும் நிலம் இறையிலியாக அளிக்கப்பட்டது. விறலியர் பாணருடன் பற்பல இசைக் கருவிகள் தாங்கி அரசர், குறுநிலமன்னர், வேளிர் முதலியோர் அவைக் களங்களில் ஆடிப்பாடி அவர்களை மகிழ்வித்தனர். கூத்தர், பாணர், பொருநர், விறலியர், யாழோர் என இசைவாணர்களும், நாட்டிய வல்லுநரும் நாடெங்கும் சுற்றித் திரிந்து அவ்விரு கலைகளையும் பரப்பினர். ஆடல் பாடலைத் தொழிலாகக்கொண்ட இக்கூட்டத்தில் சிறந்த கலைஞர்களும் கவிகளும் இருந்தனர். அவர்கள் சிறிது புறக்கணிப்பையும் பொறார்; தங்கள் கலைத்திறத்திற்கு எப்பரிசிலும் ஈடில்லையென்று எண்ணினர். அரசவையில் மட்டுமன்றி, விழா முதலிய காலங்களில் பொதுமக்களும் கண்டு மகிழுமாறு மகளிர் நாட்டியமாடினர்.[1]

கொற்கை[2]: இது பொருநையாறு கடலொடு கலக்குமிடத்தில் அமைந்து பாண்டிய இளங்கோ இருந்து அரசு செய்யும் நகராயும் கடற்கரைப் பட்டினமாயும் திகழ்ந்தது. இன்றும் ஒரு சிற்றூராக உள்ளது. அதுவே தென்னாட்டுப் பெருந்துறை. இத்துறைக்கருகில் உள்ள கடலில் நன்முத்துக்களும் வலம்புரிச் சங்குகளும் மிகுதியாய்க் கிடைத்தன.[3] இக்கரை முத்துக்கரை (Fishery Coast) என அழைக்கப்படுகிறது. தண்டனைபெற்ற குற்றவாளிகளைக்கொண்டு கொற்கைத் துறையில் முத்துக் குளித்தனர். அங்கே கிடைத்த விலையுயர்ந்த ஆணி முத்துக்களால் பாண்டிய அரசிற்கு ஆண்டுதோறும் பெரும் பொருள் கிடைத்தது. காளடைவில் கொற்கைத்துறை தூர்ந்து போகவே காயல் சிறந்த துறைமுகமாயிற்று. காயல் பட்டினம் சோனகர் (அராபியர்) பட்டினம் என்று இன்றும் வழங்குகிறது. வாணிபத்தின் பொருட்டு யவனரும், சோனகரும் பாண்டிய நாட்டில் குடியேறினர். உவரி, தொண்டி, பெருந்துறை (ஆவுடையார் கோவில், அறந்தாங்கித் தாலுகா) பாண்டிய அரசின் மற்றக் கடற்றுறைப் பட்டினங்களாகும். கப்பல்கள் கடலில் திசை தடுமாறாமல் வந்து சேரக் கொற்கை,

---

1: குறுந்தொகை, 31. 2: இது கபாடபுரம் அல்லது திருச்சீர் அலைவாயாக இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். 3: அகம்—201.

தொண்டி முதலிய இடங்களில் கலங்கரை விளக்குகள் கட்டப்பட்டிருந்தன.

சமூக நிலை: சங்க நூல்களில் அரசியலைக் காட்டிலும் சமூக நிலைதான் சிறக்கச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அக்காலத் தமிழர் ஓர் இனமாக வாழ்ந்தனர். எத்தகைய வேறுபாடுமின்றி அவர்களுக்குள் காதல் மணம் நிகழ்ந்தது. அன்புடை நெஞ்சம் ஒன்றுபடுவதில் குலமோ செல்வமோ தடையாயில்லை[4] மங்கையர் கச்சணிந்து தங்கள் கூந்தலுக்குச் சந்தனப்புகையும், அகிற்புகையும் ஊட்டி அதைப் பின்னிவிட்டிருப்பர்; காதில் குழை, கழுத்தில் ஆரம், கைகளில் ஆம்பல் தண்டாற் செய்த தொடி, வளை, விரல்களில் மோதிரம், இடையில் மேகலை, காலில் நூபுரம், சதங்கை முதலிய அணிகள் பூண்டிருந்தனர். இளஞ்சிறார் கிண்கிணி, குழை, முத்துமாலை அணிந்தனர். சங்கு வளையல், பொன்னரிமாலை, முடிபதக்கம், மகரக்குழை, வீரதண்டை முதலிய அணிப்பட்டியலைப் பார்க்கும்போது பெண்களன்றி ஆண்களும் அணிகலன் பூண்டனர் எனத் தெரிகிறது. சில கற்புடைய மகளிர் கைம்மை மேற்கொள்ள அஞ்சி, கணவர் இறந்தபின் தீப்பாய்ந்து உயிர் நீத்தனர். ஓரையாடுதல், கழங்கு, அல்லிக் கூத்து, குரவைக் கூத்து இன்னோரன்ன விளையாட்டுக்களில் பெண்கள் திளைத்தனர். மழை பெய்தவிடத்துப் புதுநீர் விழாக்கள், கடலாட்டு, குன்று விளையாட்டு செண்டாட்டு முதலிய விளையாட்டு, விழாக்கள் அவ்வப்போது நடைபெற்றன. விருந்தோம்பல், நன்றியறிவு, ஈகை, வாய்மை, நடுநிலை, மானம், மறம் முதலியன தமிழரின் தலையாய பண்புகள்.

பாண்டிய நாட்டில் பல தொழிற்கூடங்கள் ஆங்காங்கு அமைக்கப்பெற்றுத் தொழில் வளர்ச்சியும், அதனால் நுகர்ச்சிப் பொருட் பெருக்கமும், வாழ்க்கைத்தர உயர்வும் ஏற்பட்டன. தலைநகரில் நுண்ணிய பருத்தி நூலினாலும், எலி மயிரினாலும், பட்டு நூலினாலும் ஆடைகள் நெய்யப்பட்டன.[5] அழகிய மணிகளைத் துளையிடுவாரும், சித்திரகாரிகளும் மதுரையில் இருந்தனர். முத்துக்குளித்தல், உப்பு விளைவித்தல், மீன் பிடித்தல், நூல் நூற்றல், ஆடை நெய்தல், சங்கறுத்து வளையல் செய்தல், மணி இழைத்தல் பாண்டிய நாட்டில் நடைபெற்ற கைத்தொழில்களில் ஒரு சில. எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய நான்குவகை அளவைகளும் செவிடு, ஆழாக்கு, உரி, நாழி குறுணி முதலிய முகத்தல் அளவைகளும், காணம், கழஞ்சி, பலம், துலாம் எனும் நிறைகளும் அக்கால வழக்கிலிருந்தன. காணம், கழஞ்சு, காசு, பொன் போன்ற பொன, வெள்ளி, செம்பு நாணயங்கள் செலாவணியிலிருந்தன. மீன் உருவந் தாங்கிய பண்டைய பாண்டியர்களின் பொற்காசுகள் சில கிடைத்துள்ளன.

சமயம்: தமிழர் சமயத்தில் மெய்க்கொள்கையின் அறிவே வற்புறுத்தப்பட்டதன்றி, வழிபாட்டுமுறை அவரவர் கருத்திற்கேற்ப வகுத்துக் கொள்ள இடமளிக்கப்பட்டிருநதது. சமயக் கொள்கை தனிப்பட்டோர் உரிமை; அதன் வேறுபாடு குடும்பத்தைப் பிரிக்கவில்லை; நாட்டைக் குலைக்கவில்லை. வட நாட்டிலிருந்து சாக்கியமும், சமணமும் தென்னாட்டிற்கு வந்து இங்கிருந்த சைவ, வைணவ சமயங்களோடு சச்சரவின்றிக் கலந்தனவென்று மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற நூல்களால் தெளிவாகிறது. அச்சமயங்களின் அறவோரும் துறவோரும் தமிழ் நாடெங்கும் எவ்விதத் தடையுமின்றிச் சமயப் பிர

4: யாயும் ஞாயும் யார் ஆகியரோ? எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்? குறுந்தொகை — 40.

5: சிலப்பதிகாரம். ஊர் காண்காதை வரிகள் 205 — 207

சாரஞ் செய்தனர். தமிழகம் அடையாத வாயிலகமாய்த் திகழ்ந்தது. சிவன் கோயில்களும், விண்ணகரங்களும், புத்தப் பள்ளிகளும், அருகன் கோட்டங்களும் ஆங்காங்குக் கட்டப்பட்டு, சமயப் பொறையுடைய பாண்டிய மன்னர்களால் ஆதரிக்கப்பெற்று நிபந்தங்கள் பெற்றன. கி. மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து தென்தமிழ் நாட்டில் சமண மதம் இருந்தது; கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் அது பெருக்கமுற்றது. மகாயான பௌத்தமே தமிழ் நாட்டில் பரவியிருந்ததென்றும், இம்மகாயானம் சைவ சமயக் கொள்கைகளோடும் வழிபாட்டு முறைகளோடும் பெரிதும் ஒத்திருந்தமையால், அவைகளுக்குள் யாதொரு பகையுமில்லையென்றும், மணிவாசகர், இப்பௌத்தத்தையே "மிண்டிய மாயா வாதம்' எனக் குறிப்பிடுகிறார் என்றும் மறைமலை அடிகளார், 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்னும் நூலில் எழுதியுள்ளார். கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் துவக்க முதல் தமிழ் நாட்டில் பெருவாரியாய்வந்து குடியேறிய பௌத்தர் சமணர்களின் வழியே தமிழில் வடமொழிக் கலப்பு உண்டாயிற்று. கி. பி. 3-ஆம் நூற்றாண்டின் ஈற்றிலிருந்து பௌத்தம் ஒளி மழுங்கி ஒடுங்கியது. அதன் பின்னர்ச் சமணம் தலைதூக்கியது. அக்காலமே மணிவாசகர் காலமெனவும் மறைமலை அடிகள் அறுதியிட்டுள்ளார். கி. பி. மூன்றாம் நூற்றாண்டினிடையில் பாண்டிய அரசைக் கைப்பற்றிய வடுகக் கருநாடர் (களப்பிரர்) சமண சமயத்தினரே.

கடல் வணிகம்: கி. மு. 3000 முதல் கடல் கடந்த நாடுகளுடன் தமிழகம் வாணிபஞ் செய்தது என மார்க்கோப் போலோ எழுதுகிறார். கி. மு. இரண்டாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் சீனத்தை ஆண்ட ஹான் ஆட்சிக் காலந்தொட்டே தமிழகத்திற்கும் சீனத்திற்கும் பெருங்கடல் வணிகம் நடந்துவந்ததெனப் (Pan-kou) பான்கூ என்றசீன எழுத்தாளர் கூறுகிறார். கிறித்துகாலத்திற்கு நெடுங்காலமுந்தியிருந்தே பாண்டிய நாட்டுக் கலங்கள், மேற்கில் பாரசீக வளைகுடாவிற்கும் கிழக்கில் சீனத்திற்குஞ் சென்று வாணிபஞ் செய்தன. இந்தோனீசியத் தீவுகளில் உள்ள வணிகர் தமிழ் நாட்டில் இருந்து வந்த பொருட்களைச் சீனப்பொருள்கட்கு மாற்றாக வழங்கினர். மலேயாவிற்கும் தமிழகத்திறகும் நெருங்கிய வணிகத் தொடர்பு இருந்ததற்குச் சான்றாக அந் நாட்டில் தமிழ்ச் சொற்கள் பல வழக்கிலுள்ளன. கப்பல் என்ற தமிழ்ச் சொல்லாலேயே அந்நாட்டில் கலங்களைக் குறிக்கின்றனர். மேலை நாடுகளோடும் வணிகம் விரிவாக நடந்திருக்கவேண்டும். தொண்டி, முசிறித துறைமுகங்களில் கப்பல்கள் நிறைந்திருந்தன வெனப் பெரிப்ளூஸ் நூலில் காணக் கிடக்கிறது. பொருள்களைச் சுமந்து இந்தியாவிற்குச் செல்லும் நூற்றிருபது கப்பல்களை (Strabo) ஸ்ட்ராபோ கண்டதாக எழுதியுள்ளார். உரோமப்பேரரசிற்கும் இந்தியாவிற்கும் நடைபெற்ற வாணிபத்தில் ஆண்டுதோறும் ஐந்து லட்சம் உரோமப்பொன்னை நம் நாடு 'விழுங்கிவிடுகிறதென'ப் பிளினி வருந்துகிறார். உரோம நாட்டுடன் பாண்டிய நாட்டுக் கடல் வணிகம் சிறப்பாய் நடைபெற்றது என்பதற்குச் சான்று மதுரை, கொற்கை முதலிய நகரங்களிலும் அவற்றின் அண்மையிலும் நிலத்தின் கீழிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட உரோமக் காசுகளே. கி. பி. முதல், இரண்டு, மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையிலுள்ள பொன் வெள்ளிக்காசுகள் தென்னாடு முழுவதும் ஆங்காங்கு[6] ஏராளமாய்க்

6: ஏராளமான உரோம நாணயங்கள் கிடைத்த வேறு சில இடங்கள். தலைச்சேரிக்குப் பக்கலுள்ள கோட்டயம், மதுரை மாவட்டத்தில் கலியன்புத்தூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி, திருச்சி மாவட்டத்தில் கரூர், வெள்ளலூர், புதுக்கோட்டை.

கிடைக்கின்றன. அக்காலத்திற்குப் பின் உரோமக் காசுகள் கிடைக்காததிலிருந்து உரோமப் பேரரசுடன் நடைபெற்ற வணிகம் ஏறக்குறைய கி. பி. 250இல் ஏதோ சில காரணங்களால் தடைப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. பாண்டிய மன்னர் உரோமானியச் சக்ரவர்த்தி அகஸ்டசிற்கு கி. மு. 26-இலும் கி. பி. 6-இலும் தூதர்கள் அனுப்பி இரு நாடுகளுக்குமிடையே நட்பையும் வணிகத்தையும் வளர்த்தனர். தமிழகத் துறைமுகங்களிலும் உண்ணாட்டுப் பெருநகரங்களிலும் உரோமானிய வணிகர்கள் குடியேறி வசிக்க அரசியல் ஒப்பந்தங்களும் ஏற்பட்டிருக்க வேண்டும். யவன வீரர்களும் பெண்களும் தமிழகத்திற்கு வந்தனர். யவன மகளிர் பாண்டியருக்குப் பணிப் பெண்களாயிருந்தனர். மேலைநாட்டிலிருந்து அழகிய பேழைகள் (யவனச் செப்பு) பாவை விளக்கு, 'தண்கமழ் தேறல்'[7] முதலியவற்றைத் தமிழகம் பெற்றது. மேலும் குதிரைகளும்[8] கண்ணாடிச் சாமான்களும் கொற்கைப் பெருந்துறையில் வந்திறங்கின.

யவனர் தந்த வினைமா ணன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
— அகநானூறு

யவனர்கள் ஈயம், பித்தளை, தகரம், கண்ணாடி, சாராயம் முதலியன இங்கு விற்று மிளகு, மணப்பொருள்கள், சல்லாத்துணி, பட்டு, தந்தம், முத்து, இரத்தினம் முதலியவை வாங்கிச் சென்றனர். உரோமானியப் பேரரசி (செயசின் மனைவி) தலை, கூந்தல், காது, கழுத்து, கை, விரல்களில் நம் நாட்டு முத்தும் மணியும் அணிந்திருந்தனள். உரோம நாட்டுப் பெண்கள் அணிந்த பாலாவி போன்ற பட்டாடைகள் தமிழகத்திலிருந்து சென்றன. பாண்டிய நாட்டு அங்காடித் தெருக்களில் கீழைக் கடல் முத்து, சங்கு, ஈழத்துப் பொருள்கள், சீனத்துக் கர்ப்பூரம், பனிநீர், குங்குமம், பொதியமலைச் சந்தனம், குடகுமலைமிளகு, கங்கைக்கரை விளைவுகள், கடாரத்து நுகர்ச்சிப் பொருள்கள், மேருமலைப் பொன், மேலைநாட்டுக் குதிரைகள், மதுவகைகள் — இவை போன்ற பல பொருள்கள் விற்கப்பட்டன.

வணிகரில் சிறந்தோருக்கு 'எட்டி' என்ற பட்டம் தமிழ் வேந்தரால் வழங்கப்பட்டது. பெருங் கூட்டமாய்ச் செல்லும் வணிகக்குழு வாணிகச்சாத்து எனப் பெயர் பெற்றது. கோவேறு கழுதைகளிலும் வண்டிகளிலும் பண்டங்களை ஏற்றிச்சென்று உள்நாட்டு வணிகம் நடந்தது. எகிப்தியர், சாலடியர், சோனகர் முதலிய மேலைநாட்டவருடன் பண்டை நாட்களில் பண்டமாற்றுச் செய்தகாரணத்தால் பாண்டியன் 'மாறன்' (பண்டம் மாற்றுபவன்) எனச் சிறப்புப் பெயர் கொண்டனன் போலும். வணிகப் பொருள்களின் மீது விதிக்கப்பட்ட சுங்கவரியால் பாண்டியன் மிகுதியான வருவாய் பெற்றனன.

பரந்த தமிழகமும் அயல்நாடுகளுக்குத் தமிழகத்தின் தொண்டும்:—வாணிகத்தின் பொருட்டு அயல் நாட்டார் தமிழகத்தில் வந்து குடியேறியது போன்று தமிழர் கடல் கடந்த நாடுகளில் குடியேறினர். கி. மு 4-ஆம் நூற்றாண்டிலே அவர்கள் கீழைத் தீவுகளில் குடியேறி இருக்கலாம். கலிங்கத்திலிருந்து சாவகத்திற்கும், சோழ பாண்டிய நாடுகளிலிருந்து இந்தோசீனத்திற்கும், தமிழர் பண்பாடு பரவியுள்ளது. நில அமைப்பால் (geogr phically) ஒரு தீவக்குறை (Peninsula) யாயிருக்கும் இந்தோ-சீனம் (Indo-china) பண்பாட்டு முறையில் நம் நாட்டின் ஒரு கிளை (off-shoot) யாகவே இருப்பது குறிப்பிடத் தக்கது. மலேயா, சுமத்ரா, சாவகம், போர்னியா, பாலி (Bali) செலிபீஸ் (Celebes) முதலிய தீவுகளில்

7: புறம் - 56. 8: மதுரைக் காஞ்சி 321 - 323.

தமிழ் மொழியையும் தமிழர் நாகரிகச் சின்னங்களையும் இன்றும் காண்கிறோம். மலேயாவில் தமிழருடைய நாகரிகச் சின்னங்களையும் இன்றும் காண்கிறோம். மலேயாவில் தமிழருடைய நாகரிகம் நன்கு பரவியுள்ளது. மலைவளம் மிகுந்த அந்நாட்டிற்கு மலையநாடு (Malaya) எனப் பெயரிட்டது தமிழரே. சோமாலி மொழிக்கும் தமிழுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. சையாம், காம்போடியா நாடுகளின் எழுத்துக்கள் தமிழ் எழுத்தையே பின்பற்றி, பண்டைத் தமிழையே தாயாய்க் கொண்டுள்ளன. ஆதலால் மொழியற்றவர்க்குத் திராவிடம் மொழி அளித்துள்ளது.[9] சுமத்ரா (சுமதுரை)வின் (Batak) மக்களிடையில் திராவிடக் குலப் பெயர்கள் (சோழியர், பாண்டியர், மலையாளி) காணப்படுகின்றன. சாவகத் தீவு முதலில் பாண்டிய மன்னரால் கொள்ளப்பட்டது. அதன் தலைநகரை மதுரையென அக்காலத்தில் அழைத்தனர். இன்றும் அதற்கு மதுரைத் தீவே தலைநகர். பாண்டியன், பாண்டியவாசப், புகார் முதலியன சாவகத்தின் பெருநிலப் பெயர்களாயும், குறிஞ்சி, செங்கரை ஆங்குள்ள குளங்களின் பெயர்களாயும் இன்றும் நிலைபெற்றுள்ளன. அந்நாட்டுக் கிராம மக்கள் கூட்டங்களின் நிகழ்ச்சிகள் சோழ மன்னர்கள் பட்டயங்களில் விவரிக்கப்பட்டுள்ள கிராம மன்றங்களின் நிகழ்ச்சிகளை நமக்கு நினைவூட்டுகின்றன.[10] சாவகம், சுமத்ரா முதலிய தீவுகளில் காணப்படும் கல்வெட்டுக்கள் தமிழர் குடியேற்றத்தையும். ஆட்சியையும் விவரிக்கின்றன. அந்நாடுகளில் சில நூற்றாண்டுகள் தமிழ் ஆட்சி மொழியாயுமிருந்தது. இந்தோனீசியத் தீவுகள் ஒன்றில் ஓடும் பேராற்றுக்குப் பாண்டிய நாட்டுப் பொருநையின் பெயரை அளித்து அவ்வாறு ஓடுங் காரணத்தால் அத்தீவிற்குப் போர்னியோ என்ற பெயரைத் தந்துள்ளனர் பாண்டிய நாட்டுமக்கள்.

தந்தை வழியில் வங்கத்தோடும் தாய் வழியில் கலிங்கத்தோடும் தொடர்புடைய விசயன் என்னும் இளங்கோ, யக்ஷர்களைத் தோற்கடித்து இலங்கைத் தீவை கி. பி. 5ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கைப்பற்றினான்.[11] பின்னர் விசயன் பாண்டிய அரசிளங்குமரியை மணந்தான். அவளுடன் சென்ற பாண்டிய நாட்டு மங்கையர் பலர் இலங்கையில் குடியேறிச் சிங்களர்களை மணந்தனர். கி. மு. நான்காம் நூற்றாண்டினிறுதியில் (மௌரியப் பேரரசு ஏற்பட்ட போது) வங்காளத்திலிருந்தும் தமிழகத்திலிருந்தும் மக்கள் இலங்கையின் வடபகுதியில் குடியேறி இருக்கலாமென டாக்டர் எஸ். கே. அய்யங்கார் எழுதுகிறார்.[12]

பல்லவர்களுக்கு நெடுங்காலமுன்னரே தமிழர்களின் குடியேற்ற நாடுகள் தோன்றிவிட்டன. தமிழர் பண்பாடு, தமிழ்மொழி, தமிழ் நாட்டின் பொருள்கள் மேற்கில் இதாலி முதல் கிழக்கில் சீனம் வரை சென்றிருப்பது பெருமகிழ்ச்சிக் குரியது. மேற்கில் சிந்து சமவெளி, சுமேரியா, எகிப்து, கிரீட் முதலிய பல பழைய நாடுகளின் கைத்தொழில்களிலும் கலைகளிலும் சமூக சமயத் துறைகளிலும் தமிழர்களின் வாழ்வியற் கூறுகள் தெளிவாகக் காணப்படுகின்றன. கிழக்கிலுள்ள பல நாடுகளுக்குத் தமிழர்கள் தங்கள் எழுத்தையும் மொழியையும் கல்வியையும் கலைகளையும், நாகரிகத்தையும் பண்பாட்டையும், ஈந்து பரந்த தமிழகத்தை (Greater Tamilakam) நிறுவினர்.

---

9. Can we say that the service of Dravida was to give the tongue to the tongue-less?—V. R. Dikshitar.
10. South Indian influnces in the Far East: Page 135. K. A. Neelakanta Sastri.
11. இது பௌத்த வரலாற்று நூல் மகாவம்சத்தில் காணப்படுகிறது.
12. Some contributions of South India to Indian Culture: Dr. S. K. Ayyangar.

நாய்க்குடை

திரு. எஸ். சிவசுப்பிரமணியன், B. Sc.

நாம் "நாய்க்குடை" என்று குறிக்கிறோமே, அது ஒரு தாவர வகையைச் சேர்ந்தது. அது ஒரு சதையுள்ள காளான் (Fleshy fungus). காளான் வகைத் தாவரங்களுக்குச் சாதாரணச் செடிகளைப் போலப் பச்சையம் (Chlorophyll) கிடையாதென்றும், அவைகளுள் கொள்ளை உயிரிக் காளான் (Parasitic fungus) என்றும் சாறுண்ணிக் காளான் (saprophytic fungus) என்றும் இருவகையுண்டென்பதை முன்னே ஒரு முறைக் கண்டோம். நாய்க்குடை இரண்டாவது வகையைச் சேர்ந்தது; அதாவது மடிந்து மட்கிப்போன தாவரம் அல்லது விலங்கினப் பொருள்களை உணவாகக் கொண்டு உயிர் வாழும் காளான்.

நாய்க்குடைகள் நம் வீட்டுக் கொல்லைப் புறங்களிலும் தோட்டங்களிலும்—முக்கியமாக மழைக் காலத்தில்—மலிந்து முளைக்கின்றன. இன்னும் அழுகிப்போன மரத்துண்டுகளிலும், மரங்களின் அடிப்பாகங்களிலும், மட்கு நிரம்பிய ஈரநிலங்களிலும் இவை சாதாரணமாகக் காணப்படுகின்றன. நாய்க்குடைகளில் பல நாம் உண்ணக் கூடிய பொருள்கள். சிலர் இதை மிகவும் சுவையுடைய பொருளாகச் சாப்பாட்டோடு சேர்த்துச் சாப்பிடுவதுண்டு. சதைப் பற்றான காளான்களில் சுமார் இருநூறு வகைகள் இருக்கின்றன. இவைபோக இன்னும் பலவகைக் காளான்கள் உண்ணக் கூடியனவல்ல. சில கொடிய நஞ்சுள்ளவை. சில நாய்ச்குடைகள் இருக்கின்றன. அவைகள் தின்போரைக் கொல்லா விட்டாலும் வாந்தி முதலிய இடையூறுகளை உண்டு பண்ணும். இன்னும் சில நச்சு நாய்க்குடைகள் சிலரை மட்டும் பாதித்து மற்றவர்கள் தின்றால் கேடு ஒன்றும் விளைவிப்பதில்லையாம். ஒரே இனத்தைச் (Genus) சேர்ந்த நாய்க்குடைகளிடையே தின்னக் கூடியவைகளும் நச்சுள்ளவைகளும் இருப்பதால, இவைகளில் நச்சுள்ளவை எவை, உண்ணக் கூடியவை எவை என்று பிரித்தறிவது கடினம். பொதுவாகச் சொன்னால், நல்ல நிறமுள்ளவைகளும், சிவந்த நிறமான (Pink) விதைத் தாள்கள் உண்டு பண்ணுகிறவைகளும், "குடை"க்கு அடியில் கிண்ணம் போன்ற உறுப்புள்ளவைகளும் நச்சுள்ளவை.

நாய்க்குடையின் உருவ அமைப்பு வேடிக்கையானது. 'நாய்க்குடை' என்று நாம் குறிக்கும் சதைப்பற்றான வெள்ளை நிறமுள்ள குடைபோன்ற அமைப்பு இத்தாவரத்தின் முழு உருவமன்று. அதன் முக்கிய உடல் நிலத்தினுள் அல்லது அது வளரும் அடிப்படைப் பொருளினுள் ஊடுருவி நிற்கும். குடை போன்று வெளியே நிற்கும் பாகம் அதனுடைய இனப்பெருக்க உறுப்பு (Reproductive part) ஆகும். நிலத்தினுள்ளிருக்கும் உடலம் கிளைத்து வளரும் நுட்பமான காளான் நூல்களால் (hyphae) ஆனது. இக்காளான் நூல்கள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு அடித்தலத்தில் வளரும். ஒவ்வொரு காளான் நூலும் ஒரு மெல்லிய குழல் போன்றது. குழல், குறுக்குச் சுவர்களால் பல சிற்றறைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு அறையிலும் உயிர்ப் பொருளாகிய உயிரணு (Protoplasm) நிரம்பியிருக்கும். இக்குழல்கள் அடித்தலத்தில் ஊடுருவிப் பரவி ஜீர்ண காடியங்களைச் சுரந்து அங்குள்ள உணவுப் பொருள்

களைச் செரித்துச் சத்தை உறிஞ்சிக் கொள்ளும். இப்படி உணவு பெற்று உடல் நன்கு வளர்ந்ததும் தன் இன விருத்தி செய்யும் பொருட்டு இனப் பெருக்க உறுப்புகள் உண்டாகும். இனப் பெருக்க உறுப்புகள் முதலில் சிறு பொத்தான்களைப் (Buttons) போன்ற உருவங்களுடன் கொஞ்சங் கொஞ்சமாக நிலத்திற்கு மேலே வளர்ந்துவந்து, பிறகு முதிர்ந்தவுடன் குடை போன்ற அமைப்புடன் நிமிர்ந்து நிற்கும். இந்தக் குடை அநேக காளான் நூல்கள் பின்னி இணைந்து மேல் நோக்கி வளர்வதனால் ஏற்படுவதே.

ஒவ்வொரு குடைக்கும் ஒரு செங்குத்தான காம்பும் (Stipe) அதன் உச்சியில் ஒரு குல்லாயும் (Pileus) இருக்கின்றன. இளம் பருவத்தில் அதாவது பொத்தான்கள் போல் காணப்படும்போது குல்லாயின் விளிம்பையும் காம்பின் உச்சியையும் ஒரு மெல்லிய தோல் இணைத்துக் கொண்டிருக்கும். இதற்குத் "தோல் மூடி" (velum) என்றுபெயர். முதிர்ச்சியடைந்ததும் மேல் பாகம் தோல் மூடியைக் கிழித்துக்கொண்டு வளர்ந்து குடைபோல் விரிந்து நிற்கிறது. இதன் மேல் மூடியின் கிழிந்து மிகுதிபட்ட பாகம் பிறகு கம்பியைச் சுற்றி ஒரு வளையம் போல் காணப்படும். குல்லாய் சதைப் பற்றுசவும் அதன் மேல் புறம் மிருதுவாகவும் குவிந்துமிருக்கும். ஆனால் அதன் கீழ்ப்புறத்தில் செவுள்கள் (Gills) போன்ற உறுப்புகள் இருக்கின்றன. இவைகள் தகடுகள் போன்றவை. நாம் உபயோகிக்கும் குடையில் அதன் மத்தியிலிருந்து புறப்பட்டு ஓரத்தை இணைக்கும் ஆரக்கம்பிகளைப் போன்றே இவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த செவுள்களெல்லாம் குல்லாயிலிருந்து கீழ்நோக்கி நீண்டுள்ள காளான் நூற்பின்னல்கள் தான். ஒரு செவுளைக் குறுக்குமுகமாக வெட்டி, வெட்டப்பட்ட ஒரு சீவலை அணுப்பெருக்காடியில் வைத்துப் பார்த்தால் அதன் உள்ளமைப்பு புலப்படும். செவுள்கள் குறுக்கு வெட்டு முகத்தில் பின்னல் பாகம் (Trama) என்னும் மத்திய பாகமும், அதைச் சுற்றியுள்ள உற்பத்திப்படை (Hyminium) என்னும் விதைத்தூள் உண்டாகும், உற்பத்திப்படை என்னும் விதைத்தூள் உண்டாக்கும் பாகமும் காணப்படும். உற்பத்திப் படை என்பது நுனியில் தடித்த விரல்கள் போன்ற காளான் குழல்கள் மத்திய பின்னல் பாகத்திலிருந்து வெளி நோக்கி வளர்ந்து நெருக்கமாக நிற்பதாலே உண்டாகிறது. ஒவ்வொரு விரல் போன்ற குழலின் நுனியிலும் வெளிப்புறத்தில் நான்கு காம்புள்ள விதைத்தூள்கள் (Spores) காய்க்கின்றன.

இவ்விதைத் தூள்கள் மிகச் சிறியனவாகவும் இலேசாயும் இருப்பதால் காற்றினால் எளிதில் செவுள்களிலிருந்து நீக்கப்பட்டுப் பலவிடங்களுக்கும் பரவுகின்றன. ஒவ்வொரு நாய்க்குடையும் உண்டாகும் விதைத்தூள்களின் எண்ணிக்கையைக் கேட்டால் நம்பத் தயங்குவோம். ஒரு பெரிய நாய்க்குடை 10,000,000,000 விதைத்தூள்கள் உண்டு பண்ணக்கூடியது என ஒரு பேராசிரியர் கணக்கிட்டிருக்கிறாராம்! ஒரு தாவரம் இவ்வளவு அதிக விதைத்தூள்கள் உண்டு பண்ணக் காரணம் என்னவென்றால், அநேக தூள்கள் பரவும் போது எளிதில் மடிந்துவிட நேரிடுகிறது; மிகவும் அதிகத் தூள்கள் உண்டு பண்ணப்பட்டால்தான் பரவுதலில் மடிந்தது போகச் சிலவேனும் முளைத்து வளரும்.

இவ்விதைத் தூள்களில் ஒன்று ஈரமுள்ள நிலத்திலோ அல்லது ஈரமான மரக்கட்டை முதலிய பொருள்களின் மேலோ விழுந்தால், அது முளைத்து நாய்க்குடையின் உடலான காளான் நூல்கள் வளரும்.

தூசி

திரு. நா. கி. நாகராசன், M. A.

●

இயந்திர நாகரிகத்தில் தோன்றியுள்ள தொல்லையில் தூசியும் ஒன்று. அதுவும் கோடை காலத்தில் தூசியினால் விளையும் இன்னல் மேலும் அதிகமாகிறது. புழுதியைக் கிளப்பிக் கொண்டு ஓடும் மோட்டார்களையும், புகையை உமிழ்ந்துகொண்டு செல்லும் மோட்டார் சைக்கிளையும் பழங்காலத்தவருக்குக் காணக்கொடுத்து வைக்கவில்லை! அதனால் அவர்களுக்குத் தூசியின் மகிமையைப் பூரணமாக உணர வழியில்லாது போயிற்று. நகராண்மைக் கழகங்களிலோ தெருக்களின் தூசியைக் குறைக்கும் வழிகள் விரிவாக விவாதிக்கப்படுகின்றன. ஆனால் தூசி தோன்ற ஆயிர வழிகள் இருக்க அவற்றைக் குறைப்பது அவ்வளவு எளிதா என்ன?

மண், மரம், தாதுப்பொருள் முதலியவை மிக நுண்ணிய தூள் வடிவில் எளிதில் படியாதவாறு காற்றில் மிதப்பதைத் தூசி என்கிறோம். கதிரவனது கதிர்கள் அறைக்குள் விழும் போது இத்துகள்கள் சிற்றுயிர்கள் போல் இங்குமங்கும் அலைவதைக் காணமுடிகிறது. ஆண்டவனுக்கு அடுத்தாற்போல் தூசி ஒன்றே எங்கும் நிறைந்தது. உயரமான ஆல்ப்ஸ் (Alps) மலையின் உச்சிக்குச் சென்று சோதனைகள் நடத்தியதில் அங்குங் கூட ஒரு கன அங்குலக் காற்றில் ஆயிரக் கணக்கான தூசித் துகள்கள் இருப்பது தெரியவந்தது! தற்காலச் சுகாதார வசதிகள் நிறைந்த லண்டன் நகரின் காற்றிலும் ஓர் அங்குலத்திற்குச் சுமார் பதினைந்து லட்சம் தூசித் துகள்கள் காணப்படுகின்றன. சென்னையை யொத்த நகரிலோ இது பன்மடங்கு அதிகமாக இருக்கும். நாம் ஒவ்வொருமுறை மூச்சை இழுக்கும் போதும் சுமார் 30 கோடி தூசித் துகள்கள் உள்ளே புகுகின்றன. இவற்றில் பல லட்சம் துகள்கள் நுரையீரலை அடைந்து அவற்றில் படிகின்றன.

நகரங்களின் தூசி பல பொருள்களால் ஆனது. ஒரு பெரிய தெருவை நோக்கி இருக்கும் என் வீட்டிற்குள் படியும் தூசியில் உலோகத் தூளும், கரித் துகள்களும், சாம்பலும், நூல், மயிர், கம்பளி, மரம் முதலிய பொருள்களின் துகள்களும் காணப்படுகின்றன. சிறிது தொலைவிலுள்ள மாவு மில்லில் மிளகாயை அரைக்கும்போது அதன் நெடி மூக்கை உறுத்தி - தன்னைப் பார்க்க முடியாவிட்டாலும் - தானும் காற்றில் இருப்பதை எனக்கு உணர்த்துகிறது! இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாகத் தோன்றிக் காற்றிலே மிதந்து வந்தவை.

நாம் சாதாரணமாகப் புழுதி என்றழைக்கும் தூசி வறண்ட பிரதேசங்களில் காற்றினாலும், நீரினாலும் பாறைகள் தேய்வதால் தோன்றும் நுண்ணிய தூள். இத்தூளைக் காற்று பல்லாயிர மைல் அடித்துக் கொண்டு போகலாம். கடினமான நிலத்தின் மேல் இது படிந்து புவியின்மேல் மண்ணாகிறது. தாதுப் பொருள்களும், தாவர மட்கும் மலிந்த இத்தூள் தாவரங்கள் வளரும் மேல்-மண்ணாகிறது. தாவரங்கள் உள்ள மண் அவற்றால் நிலைநிறுத்தப்பட்டு அரிபடாமல் தப்புகிறது. ஆனால் வரம்பு மீறிய

சாகுபடியினாலும், தாறுமாறான மேய்ச்சலினாலும் தாவரங்கள் அழிந்துபோய் மண்ணானது விரைவில் அரிபட்டுப் போகிறது. தாவரங்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாத மேல் மண்ணானது காற்றில் கலக்கும் தூசியாகிவிடுகிறது. இதனால் வளமுள்ள நிலம் பாலைவனமாகிறது. வடமேற்கு இந்தியாவில் இந்த விளைவு தொடர்ந்து நடைபெற்றுப் பாலைவனப் 'பெருக்கம்' நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது.

தொழிற்சாலையிலிருந்து வரும் புகையானது காற்றிலுள்ள தூசியின் அளவை அதிகமாக்குகிறது. லண்டன் நகரில் மட்டும் ஒரு நாளுக்குப் பல நூறு டன் நிறையுள்ள புகை காற்றிலே பரவுகிறது என மதிப்பிடப் பட்டுள்ளது. இவ்வகையில காற்று மண்டலத்தை அடையும் புகையின் அளவு இடத்திற்கு இடமும், பருவத்திற்குப் பருவமும் மாறுபடும். நாட்டுப்புறக் காற்றில் புகைத் துகள்கள் அதிகமாக இரா. புகையாகத் தோன்றும் காற்றில் பரவும் தூசி கரியாகவோ, கரிமப் பொருள்களாகவோ இருக்கும்.

உலகிலுள்ள எரிமலைகளாலும் மாற்று மண்டலத்தின் தூசி அதிகமாகிறது. எரிமலைகளில் நிகழும் அதிர்ச்சிகளால் அதனுள் இருக்கும் மேகள் பொடியாகின்றன. பிரமாண்கற்ான அழுத்தத்துடன் கற்குழம்பு கடலே பீச்சும்போது அது நுண்ணிய துளிகளாகச் சிதறிக் காற்றில் இறுகுகிறது. கற்பொடியும், கற்குழம்புத் துளிகளும் காற்றில் சிறப்பு வகையான தூசியாகின்றன. இவ்விளைவு தொன்றுதொட்டே நிகழ்ந்து வருவதால் காற்றிலே எங்கெங்கும் எரிமலைத் தூசி காணப்படுகிறது. ஜாவாவிலுள்ள கிராகடோவா (Krakatoa) என்னும் எரிமலை 1853-ம் ஆண்டில் வெடித்தது. அப்போது வெளிவந்த தூசி உலகம் முழுதும் பரவி இரண்டாண்டுகள்வரை அதுவரை காணாத வர்ண விசித்திரங்களை வான வெளியில் தோற்றியது. 1913-ம் ஆண்டில் அமெரிக்காவில் காட்மாய் (Katmai) என்னும் எரிமலை கற்குழம்பையும், தூசியையும் ஏராளமாகக் கக்கியது. அத்தூசி இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள அமெரிக்க நகரங்களை அடைந்து படிந்தது!

எரிநட்சத்திரங்களும் காற்று மண்டலத்தின் தூசியை அதிகமாக்குகின்றன. வான வெளியிலே மிதந்து வரும் பொருள்களான எரிநட்சத்திரங்கள் சில சமயங்களில் புவியின் காற்று மண்டலத்தில் புகுந்து விடுகின்றன. மிக விரைவாகச் செல்லும் இக்கற்கள் காற்றின் உராய்வினால் சூடேறி ஒளிர்கின்றன. பெரும்பாலும் சூடு அதிகமாகி அவை புவியை அடையுமுன்னரே ஆவியாகிவிடுகின்றன. இந்த ஆவி தூசியாகப் பரவுகிறது. இவ்வாறு தோன்றும் தூசி இரும்பு போன்ற தாதுப்பொருள்களால் ஆனது. நுண்ணிய தூசியானது வானிலிருந்து தானாகத் தரையில் படியாது. ஏனெனில் இத்தகைய தூசித் துகள் ஒன்று நூறு அடி உயரத்திலிருந்து கீழே இறங்கச் சுமார் முந்நூறு மணி நேரம் பிடிக்கும்! இப்போது அத்துகளின் மேல் மெல்லிய காற்று வீசினால் அது இந்தப் பொழுதில் சுமார் மூவாயிரம் மைல் தொலைவிலுள்ள இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே தரையை அடையும்! ஓரிடத்தில் தோன்றும் தூசியானது வெகு தொலைவிலுள்ள வேறு இடங்களுக்கு எப்படிப் பரவுகிறது என்பது இந்த மேற்கோளிலிருந்து தெளிவாகும். மணலைப் போன்ற பெரிய துகள்கள் விரைவில் படிந்து விடுகின்றன. ஆகையால் அவை அதிகத் தொலைவு பரவுவதில்லை. சீனாவின் உயிர் நாடியாக விளங்கும் நதிக்கரைப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான அடி ஆழத்திற்குப் படிந்திருக்கும் 'காற்றடி மண்'

(Loess) என்ற நுண்ணிய மண் இவ்வாறு காற்றினால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் கொண்டு சேர்க்கப்பட்ட தாதுத் தூளேயாகும். 'கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்த' கதையாக மத்திய ஆசியப் பகுதிகளிலிருந்த தாதுப் பொருள்களைச் சீனத்தில் கொண்டு சேர்த்து அதை வளமாக்கிய பெருமை காற்றைச் சேரும்.

கதிரவனது கதிர்கள் காற்று மண்டலத்தை அடையும்போது அதிலுள்ள தூசித் துகள்கள் அக்கதிர்களைச் சிதற அடிக்கின்றன. இச்சிதறலின் தன்மை தூசித் துகள்களின் பருமனைப் பொறுத்திருப்பதால், வானத்தின் நிறமும் இதைப் பொறுத்தே அமைகிறது. கிராகடோவா எரிமலை வெடித்தபோது அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வானம் பல மாதங்கள் வரை பழுப்பு நிறமாக விளங்கியது. கதிரவனது மறைவின் போது கண்ணைக் கவரும் அழகிய வண்ணங்களுக்கும் இத்தூசி காரணமாகியது. சூரிய ஒளியில் கண்ணுக்குப் புலப்படாத புறவூதாக் கதிர்கள் (ultra-violet rays) உள்ளன. இவை தகுந்த அளவு உடலின்மேல் விழுந்து உடல் நலத்தைப் பாதுகாக்கின்றன. காற்று மண்டலத்தின் தூசி இவற்றை எளிதில் சிதற அடித்துவிடும். ஆகையால் தூசிநிறைந்த பகுதிகளில் கதிரொளியில் இக்கதிர்கள் போதிய அளவு இல்லாமல் அவ்விடங்களில் உள்ளோரது உடல் நலம் கெடலாம்.

வேறுவகையிலும் தூசியானது உடல்நலத்தைப் பாதிக்கக்கூடும். கல் உடைக்கும் இடங்களிலும், சில தொழிற்சாலைகளிலும் மிக அதிகமான தூசி வெளிவருகிறது. தக்க முறைகளால் இது தடைசெய்யப்படாவிட்டால் அங்கு வேலை செய்யும் தொழிலாளரது நுரையீரல் விரைவில் கெட்டு, நோய் விளையும். கல் உடைப்போருக்கும், சிமென்ட் தொழிலாளிகளுக்கும் இந்த ஆபத்து இன்னும் அதிகம். ஆகையால் தூசித் தொல்லையைத் தடுக்க அவர்களுக்கு முகமூடிகளும் வேறு பாதுகாப்புகளும் அளிக்கப்படவேண்டும். தாவரங்களின் மகரந்தம் காற்றில் பரவும்போது சிலரைப் பாதித்துப் புல்-காய்ச்சல் (Hay-fever), காசம் முதலிய பல நோய்களை விளைவிப்பதுண்டு.

தூசியினால் தொழிற்சாலையில் வேறொரு ஆபத்தும் நேரக்கூடும். எளிதில் தீப்பிடிக்காத சில பொருள்களும் நுண்ணிய தூள்வடிவில் விரைவில் பற்றி எரியலாம். மாவு அரைக்கும் ஆலைகளிலும், பஞ்சாலைகளிலும், நிலக்கரிச் சுரங்களிலும், உலோக வேலைகளைச் செய்யும் இடங்களிலும் காற்றுடன் நுண்ணிய தூசியும் கலந்திருந்திருக்கும். இயந்திரங்கள் சுழல்வதால் தோன்றும் நிலைமின்சாரமோ, சிறு தீப்பொறியோ இக்கலவையை எளிதில் பற்றவைத்துக் கோரமான வெடி விபத்துக்குக் காரணமாகலாம். தொழிற்சாலையின் ஒரு பகுதியில் இந்த வெடி நிகழ்ந்தால் அது மற்றப் பகுதிகளுக்கும் பரவிப் பெருஞ் சேதத்தை விளைவிக்கலாம். உடனுக்குடன் தூசியை அகற்றும் விசிறிகளும், தோன்றிய மின்சாரத்தைக் கடத்திச் செல்லும் கம்பிகளும், தீ அணைக்கும் சாதனங்களும் இந்த விபத்தைத் தடுக்கின்றன.

கோடை காலத்தில், தரையானது நன்றாகச் சூடேறியுள்ள நிலையில, சில சமயங்களில திடீரென்று சிறு சுழல்கள் தோன்றித் தரையிலுள்ள தூசி சுழன்றுகொண்டே மேலே செல்வதைப் பார்க்கிறோம். நிலம் சூடேறுவதால் காற்றில் வெப்ப ஓட்டங்கள் தோன்றி இச்சுழல்களைத் தோற்றுகிறது. இச்சுழல் சில அடி விட்டமே இருக்கும். அபாயமற்ற இவ்வானிலை

விளைவின் விஞ்ஞானப் பெயர் மட்டும் பயங்கரமானது. இது "தூசிப்பேய்" (Dust Devil) எனப்படும்!

ஆனால் இதைவிடப் பெரியதும், உண்மையிலேயே கொடியதுமான ஒரு விளைவும் உண்டு. இது தூசிப் புயல் எனப்படும். மழை குறைவான வடமேற்கு இந்தியாவில் இவ்விளைவு தோன்றுவதுண்டு. வெயிலின் கொடுமை உச்சநிலையை அடையும் நாட்களில் இடிமழை தோன்ற ஏற்ற வானிலையில் தூசிப்புயல் விளையலாம். நிலத்தின் மேல் மண் நிலையாக இல்லாத பகுதிகளிலும், பாலைவனங்களிலும் இது தோன்றும். நல்ல வெப்பமான நாளில், இடியும் மின்னலும் அடிக்கடி தோன்றியபின் சலனமற்றுக் கிடந்த வானில் மென்காற்றுத் தோன்றித் திசைமாறி அடிக்கத் தொடங்குவது தூசிப்புயலுக்கு முன்னறிவிப்பு. சிறிது நேரத்திற்குள் வானத்தில் பெரும் சுவர் எழுப்பியது போல் பழுப்பு நிறமான தூசிப்படலம் முன்னேறிவரும். இதுவே புயலின் துவக்கம். விரைவான காற்றின் கொடுமையினாலும், அதிலுள்ள தூசி கண்ணிலும், மூக்கிலும் புகுந்து சித்திரவதை செய்வதாலும் இப்புயலில் அகப்பட்டுக் கொள்வோர் உயிர் பிழைப்பதே அருமையாய் விடுகிறது. இப்புயலின் போது ஆயிரக்கணக்கான டன் நிறையுள்ள மண் ஈராயிரம் மைல் வரை கொண்டு செல்லப்படலாம். சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் வீசிய ஒரு புயலின் போது ஐந்நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள ஓரிடத்தில் ஒவ்வொரு சதுர மைலின் மீதும் 120 டன் தூசி படிந்ததாம். வட ஆப்பிரிக்கப் பாலைகளிலும், தூசிப் புயல்கள் தோன்றி மத்திய தரைக்கடற் பகுதிகளுக்கு ஏராளமான செந்நிற மண்ணைக் கொண்டு செல்கின்றன. கடலின் மேல் வீசுவதால் ஈரத்தையும் ஏற்கும் இக்காற்று, நிலப் பகுதியை அடையும்போது அங்கே மழையை விளைவிக்கும். பாலைவன மண்ணின் கலப்பினால் இம்மழை நீர் செந்நிறமாக இருக்கும். ஆகையால் இது 'இரத்த மழை' எனப்படும். பழங்காலத்தில் இவ்விளைவு மக்களுக்குப் பெரும் பீதியை விளைவித்தது! 1903-ம் ஆண்டில் இரண்டு நாள் பெய்த இரத்த மழையால் சுமார் இருபது லட்சம் டன் நிறையுள்ள செம்மண் ஐரோப்பியக் கடற்கரையை அடைந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

தூசியானது மனித வாழ்க்கையை இன்னும் பல வகைகளில் பாதிக்கிறது. குற்றவாளியின் ஆடையிலும், உடலிலும் உள்ள தூசித் துகள்களும் குற்றம் நடந்த இடத்தில் உள்ள தூசித் துகள்களும் துப்பறிதலில் முக்கியமான காரணங்களாகும். பழங்காலத்தில் புவியின் பெரும் பகுதி பனிக்கட்டிகளால் மூடப்பட்டிருந்தது. பின்னர் வானிலை மாறியது. பனிக்கட்டிகள் மறைந்து அப்பகுதிகள் வெப்பநாடுகளாக மாறின. புவியின் வரலாற்றிலே இத்தகைய மாறுதல்கள் பலமுறை நிகழ்ந்திருக்க வேண்டும் எனத் தரை நூலறிஞர் தெளிவாக்கியுள்ளனர். எரிமலைகளிலிருந்து ஏராளமான தூசி தோன்றி இத்தகைய வானிலை மாற்றங்களை விளைவிக்கிறது என்று கருதப்படுகிறது. தூசினும் 'கடையேன்' என்று மிக இகழ்வுடன் கூறப்படுகிறது. ஆனால் இத்தூசி புவியின் தோற்றத்தையே மாற்றியமைக்கும் திறமை பெற்றிருப்பது விந்தை யல்லவா?

இதயச்சுழலிலே.....

திரு. டி. கே. பி. வரதராசன், B. Sc., (Hons.)

★

இரவுக்கும் நல்ல தூக்கம் போலும்! இல்லையேல் அவ்வளவு அமைதி நிலவி இருப்பது ஆச்சரியந்தான்! மூலையில் எரிந்து கொண்டிருந்த ஒரு விளக்கு தான், அந்த அறையில் கொஞ்சம் உணர்வு கொண்டதாக இருந்தது. அவ்விளக்கருகே ஒரு கட்டில். அக்கட்டிலின் மீது கண் விழிக்காது கிடந்தான் கண்ணன். சென்ற ஐந்து நாட்களாகவே அவனுக்குக் கடும் ஜுரம். நான்கு நாட்களாக இரவு கண்விழித்து, கண்ணனைக் கவனித்து வந்ததினால் ஏற்பட்ட அசதி, அவனது பெற்றோர்களை—சுந்தரம் முதலியாரையும், பார்வதி அம்மையாரையும் — ஐந்தாம் நாள் இரவு அடியற்ற மரங்களாகி விட்டது. கட்டிலிற்குக் கீழே, உதிர்ந்த பூப்போல, உணர்வற்றுக் கிடந்தனர் அவர்களிருவரும்.

கண்ணனுக்குப் பக்கத்தில், கட்டிலின் ஓரத்தில், கவலை தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தாள் ராணி. களையிழந்த அம்முகத்தின் ஒளி இழந்த கண்கள், கண்ணனது முகத்தையே உற்று நோக்கிக்கொண்டிருந்தன. அவனது நெற்றியின் மீது இருந்த ஐஸ் பையை சரிப்படுத்திக்கொண்டிருந்தன, அவளுடைய அரும்பு விரல்கள்.

“டணார்......டணார்......” மணி இரண்டு. மருந்தை டம்ளரில் ஊற்றி, கண்ணனது வாயில் ஊற்றினாள். வாயினுள் மருந்து சென்றதோ இல்லையோ, கண்ணனது கைகள் அவளுடைய முன் கைகளை ஊராய்ந்து செல்வது போன்ற ஒரு உணர்ச்சி—அதை பொட்டி அவளுடைய முகத்தை எதுவோ இழுப்பது போன்ற எண்ணம்—அடுத்த வினாடி அவளுடைய முகம் அவனது நெஞ்சில் புதைக்கப்பட்டிருந்தது. கண்ணனுடைய கை விரல்கள், அவளது கன்னத்தின் மீது நண்டோட்டம் ஓடிக்கொண்டிருந்தன.

அம்மாவாவது அப்பாவது—ஆம், இப்படித்தான் அவள் சுந்தரம் முதலியாரையும், பார்வதியையும் கூப்பிடுவது. திடீரென்று கண் விழித்துக் துத் தன்னை இக்கோலத்தில் கண்டுவிட்டால்! இந்த எண்ணம், அவள் முன் ஒரு கரும் பிசாசுபோல எழுந்தது. ஆனால்... அவளது இதயத்தில் படர்ந்திருந்த அவ்வின்ப உணர்ச்சி அவளைச் சக்தியற்றவளாக்கி விட்டது. மது வருந்தினவள் போல. அவள் அவனுடைய மார்பகத்தின் மேல் மயங்கிக் கிடந்தாள்.

ஏதோ முனகல் சத்தம்—உற்றுக் கேட்டாள். “லலிதா...லலி...லலி...” ஆம், அவனது உதடுகளிலிருந்துதான் இவ்வார்த்தைகள் வந்தன. மணமான மறுகணமே மணமகள் மாரடைப்பால் மாண்டால், அவளை மணக்கப் பலகாலம் காத்திருந்த மாப்பிள்ளையின் மனநிலை எந்நிலையோ—அந்நிலைதான் அப்பொழுது அவள் நிலையும். யாருடைய இதயத்தைத் தன்னுடைய இன்பலோகம் என எண்ணினாளோ, அந்த இருதயம் லலிதா என்னும் பெண்ணுக்கு ஏற்பட்டக் கோவில் எனக் கண்டாள். அழுகை, அவளையும் அறியாது மீறிக்கொண்டு வந்தது. அக்கல் நெஞ்சத்தைத் தன

கண்ணீரால் கரைத்துவிடலாம் எனக் கனவுதான் கண்டாளோ — அல்லது அவனது ஸ்பரிசத்தில் அவள் கண்ட இன்பம் அடுத்தொரு சமயம் கிடைக் காது என்ற எண்ணம் தான் கொண் டாளோ—அந்நெஞ்சில் பதித்த கன் னம் அப்படியே இருந்தது. கண்ணீர் மாத்திரம், கரும்பு ஆலையில் ஓடிவரும் சாறுபோல, வழிந்து ஓடிக்கொண் டிருந்தது.

மணி நான்கு அடித்தது. யாரோ தலையில அடிப்பது போன்ற உணர்ச்சி போலும்! வாரிச் சுருட்டிக் கொண் டெழுந்தாள் பார்வதி அம்மாள். கண் கள் கட்டிலின்மேல் பாய்ந்தன. கண் ணனும், அவனது நெஞ்சின்மேல் தலையை வைத்தவாறு ராணியும் தூங் கிக்கொண்டு இருந்தனர். கண்ண னுடைய கை அவளுடைய முதுகின் மேல் குறுக்கே கிடந்தது. அழுது வீங்கிப்போன அவளுடைய முகமும், கண்களின் ஓரத்திலே துளித்துக் கொண்டிருந்த கண்ணீரும், பார்வதி யின் உள்ளத்தைத் தொட்டன. "ஹாய்" என்ற ஒரு பெருமூச்சு. அதையடுத்து "ஒரே வயிற்றில் பிறந்த குழந்தைகள்கூட இப்படி உயி ருக்குயிராய் இருப்பதில்லை! அண்ண னுக்கு சௌக்கியமாவதற்குள், இவள் அழுதழுதே செத்துவிடுவாள் போல இருக்கே" என்றது அவள் வாய். பக்கத்தே சென்று ராணியின் தோளைத் தொட்டாள். 'சில்'லென்று யாரோ முள்ளால் குத்துவதுபோன்ற ஒரு உணர்ச்சி! அலறி எழுந்த ராணி அம்மா முன் நிற்பதைக் கண்டாள். வெட்கம் அவளைத் தலைகுனிய வைத் தது. "போம்மா. போய் நல்லா முகத்தை அலம்பு" என்ற வார்த்தை கள் அவளது செவியில் விழுந்தன. அடுத்த நிமிடமும் மின்னலா அங் கேயே நிற்கும்!

* * *

25 வருடங்களுக்கு முன்னர் சுந் தர முதலியார் ஒரு சாதாரண வியா பாரி. அப்பொழுதுதான் கண்ணன் பிறந்ததுகூட. திடீரென்று ஒரு நாள் அவரிடம் வந்து சேர்ந்தார் அவ ருடைய பால்ய நண்பர் கோபால முதலியார். இரங்கூன் வாழ்க்கையில் இனிமை காணாது, அங்கிருந்த சொத் துக்களை எல்லாம் விற்றுவிட்டு, கையில் ஏகப்பட்ட ரொக்கத்துடன் கோபால முதலியார் சுந்தரத்திடம் வந்து சேர்ந்தார். கையில் காசு இருக் கும்போது, கருத்து ஒரு துறையில் தானா நிற்கும்? இருவரும் சேர்ந்து பல கூட்டு வியாபாரங்கள் ஆரம்பித் தனர். சில வருடங்களிலேயே சுந்தர முதலியார் அந்த வட்டாரத்திற்கே ஒரு பெரும் பணக்காரராகிவிட்டார்.

தாய் நாட்டு மண்ணின் தன்மை தானோ என்னவோ, தன்நாடு வந்து சேர்ந்த ஐந்தாவது வருடத்தில் கோபால முதலியாருக்கு ராணி பிறந் தாள். ஆனால் அதிர்ஷ்டம் தான் அதிக நாள் நில்லாதே! ராணி பிறந்த ஆறுவது ஆண்டில், அவளுடைய தாய் தந்தையர்களைக் காலரா என் னும் காலன் கவ்விச் சென்றான். அன்றிலிருந்து ராணியும் அவளுடைய சொத்துக்களும், சுந்தர முதலியாரின் சொந்த உடமைகளாயின. பெண் இல்லாதக் குறை, அன்று வரை பார் வதிக்கு ஒரு பெரும் குறையாக இருந்தது. ஆனால் ராணி தன் வீட் டுக்கே வந்து சேர்ந்ததிலிருந்து அக் குறை அவளுக்குத் தோன்றவே இல்லை. ராணியும் கண்ணனும் அந்த நாளிலிருந்தே ஒரே கொடியில் பூத்த இரு பூக்கள் ஆயினர். "அண்ணா! அண்ணா!!" என்று ஒரு நாளைக்கு ஆயிரந் தடவையாவது அழைத்து விடுவாள் அவள். "ராணி, ராணி" என்று இரவில் கூட பிதற்றுவான் கண்ணன். பிரிவு என்பது அவர் களுக்கு ஒரு பெரும் பிசாசுபோல. எண்ணத்தில் மட்டுமல்ல; செய்கை யில் கூட அவர்கள் சேர்ந்தே தானி ருந்தனர்.

வருடங்கள் பல உருண்டோடின. ஆயிரம் சமாதானத்திற்குப் பின்னர் தான், அவளைப் பிரிந்து அவனால் காலேஜ் வாசலில் கால் வைக்க முடிந்தது—பிரிவு என்பது தான் அவளுக்குப் பெரும் வேதனை ஆயிற்றே!

"ஹானர்ஸ்" பரீட்சைக்குக்கடைசி வருடம் அது. வருடத்துவக்கத்தில் காலேஜுக்குச் சென்ற கண்ணன், வருட முடிவு வரை வீட்டிற்கு வரவேயில்லை—ஏதோ அதிகமாகப் படிக்க வேண்டியிருப்பதால், கால் வருட அரை வருட விடுமுறைகளில் வீட்டிற்கு வருவதற்கு இல்லை என எழுதி விட்டான். இந்த ஓராண்டு காலம், அவளுடைய உடலில் மாத்திரமல்ல, உள்ளத்தில் கூட ஒரு புதுமையைப் பூக்க வைக்க எண்ணியது போலும்! பருவம் ஒரு பாய்மரம் போல—எண்ணப் படகை எங்கேயோ இழுத்துச் சென்று விடும்! வசந்தம் வந்தது; அத்துடன் அக்கிராமத்திற்கு வசந்த காலத்தின் மலர்ச்சியும் வந்தது, ஆனால் அவ்விரண்டும் அவளுடைய உள்ளத்தில் ஒரு புது எழுச்சியைத் தான் உண்டு பண்ணின. எண்ணமே ஒரு பெரும் ஆற்றுச்சுழல்—அதில் அகப்பட்ட துரும்பு ஆற்றுப் போக்கிலா போக முடியும்? அவளுடைய கருத்துக்கள் கண்ணனையே சுற்றி சுற்றி வந்தன. இல்லாத பொழுதுதானே ஏக்கமும் அதிகமாகும். முடிவு...... அவளுடைய இருதயக் கோவிலில், அவன் உருவம் இறைவனாயிற்று. கண்ணன் வந்ததும் தன்னுடைய காதலைத் தெரிவித்து விடுவதென இருந்தான். மனோரஞ்சிதமா நறுமணத்தை மறுத்துவிடும்? இவ்வெண்ணம் தோன்றியதும், அவளிடத்தில் பூரிப்பும் புன்னகையும் கைகோர்த்து விளையாடின.

லீவும் வந்தது; கண்ணனும் விடு வந்து சேர்ந்தான். ஆனால் ராணியைப் பார்ப்பதுங்கூட அவனுக்குக் கஷ்டமாகத் தானிருந்தது. வெட்கம் ஒரு வேதனை கலந்த சுகம்—இல்லையேல் எங்கி இருந்த பொருளைக் கண்டதும் இவள் ஏன் இப்படியே ஓடி ஒளியவேண்டும்?

வீட்டிற்கு வந்த பதினைந்தாம் நாள் கண்ணனுக்கு உடம்பு கதகத வென்று இருந்தது, இரண்டு நாட்களில் அது கடும் ஜுரமாகி விட்டது; ஸ்மரணையே கிடையாது. நாட்கள் நழுவி ஓடின. ஆனால் கண்ணன் நிலை எல்லோரையும் கலங்க வைத்தது. மனிதன் என்ன இயந்திரமா? நான்கு நாளைய இடை விடா விழிப்பிற்குப் பிறகு, ஐந்தாம் நாள் இரவு சுந்தரம் முதலியாரும் பார்வதி அம்மையாரும் கண்களைத் திறக்கக்கூட முடியாத அளவிற்குக் களைத்து விட்டனர். இரவு சுமார் எட்டு மணி இருக்கும். கட்டிலிற்கருகே பெற்றோர்களிருவரும் சோர்வினால் படுத்து விட்டனர். ஆனால் ராணி......தூக்கம் துயரத்திடமா போட்டி போடமுடியும்—ஆகவே தூக்கம் தூரமாக ஒதுங்கி நின்றது. கட்டிலின்மீது உட்கார்ந்து கண்ணனையே கவனித்துக்கொண்டு இருந்தாள்.

இந்த இடம் தான் இக்கதையின் ஆரம்பம்.

சுமார் 15 நாட்கள் ஓடி மறைந்தன. அந்திநேரம் அது. அவ்வீட்டின் பின்புறமே ஒரு அழகான தோட்டம். மரத்திலே சாய்ந்த வண்ணம் மறையும் சூரியனைப் பார்த்துக்கொண்டிருந்தாள் ராணி. யாரோ கண்களைப் பொத்தினது போலத் தோன்றியது. ஒரு துள்ளு துள்ளி கைகளை விலக்கினாள்—விலக்கினதும் திரும்பினாள். எதிரே நின்றது கண்ணனே! உடனே அவளுடைய கண்கள் கால் பெரு விரலை நோக்கிப் பாய்ந்தன.

"ஏது ராணி, என்னோட பேசவே மாட்டேங்கிறியே. கோபமா உனக்கு....."

"................"

ஹூம்......உனக்கு நான் இங்கு வந்தது பிடிக்கலையாக்கும். சரி நான் போயிடறேன்."

பெண்களின் உள்ளத்தை இழுக்கக் கள்ளத்தனம் தான் கடைசி ஆயுதம் போலும்! பாசாங்குக்காக சடாரென்று திரும்பினான். 'பட்' டென்று மரத்தின் மீது கை மோதியது. 'அம்மா...' என்று அலறிக்கொண்டே கீழே உட்கார்ந்து விட்டான். உள்ளங் கையிலே ஒரு கீறல் — அதிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டு இருந்தது. அடுத்த வினாடி கீறல் பட்ட இடத்தில், தன் இதழ்களை அழுத்தி இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தாள் ராணி. இரத்தத்தில் இன்பத்தைத் தான் கண்டாளோ, அல்லது இனிப்பைத் தான் சுவைத்தாளோ—வெகுநேரம் வரையில் இதழ்கள் அந்த இடத்தில் அழுந்தியே இருந்தன.

"எது எது! என் இரத்தம் அவ்வளவையுமே உறிஞ்சிவிடுவே போல இருக்கே" என்றான் கண்ணன், தன் குறும்புப் புத்தியோடு.

'டக்'கென்று ராணி எழப் பார்த்தாள். ஆனால் தூண்டிலில் விழுந்த வாழை மீன் துள்ளினாலும் தப்பியா விடமுடியும்? கையை நீட்டி, கண்ணன் அவளை ஒரு இழு இழுத்தான். அடுத்த வினாடி அவன் பக்கத்தில் ராணி விழுந்தாள்.

"அடிபட்டதா ராணி, அப்படீன்னு சொல்லு. குறைஞ்சு போன இரத்தத்தைக் குடிச்சுடறேன்."

அவளது மொட்டு வாய் வெடித்து விட்டது. இருவருமே சிரித்தனர்.

"ஏன் ராணி இப்பெல்லாம் பேசவே மாட்டேங்கறே?" என்றான் கண்ணன்.

"ஒண்ணுமில்லே" யாராரோ உங்களுக்குப் பெண் கொடுப்பதாக அப்பாகிட்ட வந்தாங்க" என்றாள் ராணி. வெட்கம் அவள் முகத்தை சிவக்க வைத்தது.

"எல்லாம் பைத்தியங்க. அவங்க சொல்ற பெண்ணைக் கட்டிக்கு வேன்னு, கனவு கண்டுகிட்டிருங்காங்க போலிருக்கு"

கருவானில் மின்னல் தோன்றினால் போல்— அவள் கண்களிலே ஒளி மிதந்தது.

"அப்போ..." அவள் புருவங்களில் வானவில்லின் வளைவுகள் இருந்தன.

"ஆமாம்... அவங்க சொல்ற பெண்ணைக் கட்டிக்க மாட்டேன். கட்டினா என்னோடே காலேஜிலே படிக்கிற லலிதாவைத்தான் கட்டுவேன். இல்லாட்டி....நீ படிச்சதிலே காதல்.... காதல்.....காதல்......காதல்போயின் சாதல்...சாதல்...சாதல்"

அம்பொழுது தான் மலர்ந்த ரோஜா மீது ஒரு நெருப்புக் கங்கு பட்டால்.........அவளது முகத்தில் ஆயிரம் சுருக்கங்கள் தோன்றின. அணையை உடைத்த ஆற்று வெள்ளம் போல, கண்ணீர் குபுகுபு வெனப் பொங்கி ஓடிற்று.

"ஏன் ராணி அழறே" என்றான், அவளது முன் மயிரை விலக்கிக் கொண்டே.

"அப்படீன்னா நான்......நான்..." இதற்கு மேல் அவளால் பேசவே முடியவில்லை. சடாரென்று அவனுடைய தோளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விசிக்க விசிக்க அழுதாள்.

கண்ணனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"அப்படீன்னா நான் சாகவேண்டியதுதானா, கண்ணா? உனக்காக, உன் அன்புக்காக நான் எவ்வளவு வருடங்களாக ஏங்கிக்கொண் டிருக்கிறேன். என் நினைவு உனக்கு இல்லவே இல்லையா கண்ணா?". பொங்கி வழிந்த கண்ணீர் அவனுடைய சட்டையை நனைத்துத் தோளைச் சுட்டது.

சட்டென்று கண்ணன் அவளுடைய தலையைத் தூரத்தள்ளிப் பிடித்தான். "என்ன ராணி பைத்தியமா உனக்கு! நான் உனக்கு அண்ணனல்ல?", கோபம் அவனை வார்த்தை தடுமாற வைத்தது.

சாந்தம் அவளுடைய சரீரத்தில் தான் பிறந்தது போலும்! கண்களை மெல்ல உயர்த்தினன்—உயர்த்தி கண்ணன் முகத்தின் மேல் பதித்தாள். "நம் வீட்டிலுள்ளவர்களைத் தவிர வேறு யாரும் இதுவரை அப்படிக் கூறினதே இல்லை. நமக்குள் மணம் நடந்தால், அதைப்பற்றி நம் வீட்டிலுள்ளவர்கள் கூட குறை கூறுவதற்கில்லை; நாம் என்ன ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளா அல்லது நம் தகப்பனுர்கள் தான் சகோதரர்களா? என் அன்பையும் ஆசையையும் அண்ணன் என்ற ஆழியில் அமுத்திவிடாதீர்கள். என்னுடைய வாழ்வை ஒளி இழந்த உலகமாக்கிவிட வேண்டாம்." நடுநடுவே அவள் குரல் விம்மியது.

இதற்குமேலும் கேட்டுக்கொண்டிருக்கக் கண்ணன் விரும்பவில்லை; எழுந்து ஓடியே விட்டான்.

இரண்டு மாதகாலம் ஓடிப்பறந்தது. செல்லக் குழந்தை யென்றால் அதன் சொல்லுக்கா மதிப்பிருக்காது? கண்ணனுக்கும் லலிதாவுக்கும் திருமணம் நடந்தது. கலியாண தினத்தன்று கண்ணன் ராணியின் கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலியைத் தன் கலியாணப் பரிசாக அணிவித்தான்.

ஒரு மாத காலம் ஓடி மறைந்தது.

காவேரியில் தண்ணீர் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. காவேரிக்குச் சென்ற ராணி, மத்தியானம் ஆகியும்கூட திரும்பிவரவே இல்லை. எங்கெங்கோ யாராரோ தேடச் சென்றனர். ஏதோ காரியமாகத் தன் பீரோவைத் திறந்த கண்ணன், அங்கே தன் போட்டோவும் அதன் மீது ஒரு காகிதப் பொட்டலமும் இருப்பதைப் பார்த்தான். அவசர அவசரமாக அப்பொட்டலத்தைப் பிரித்தான். அதில் அவன் ராணிக்கு அளித்த கல்யாணப் பரிசும், ஒரு கடிதமும் இருந்தது. கடிதத்தைப் படித்தான்.

"என துயிர் கண்ணு!

என் உணர்ச்சிகளை உள்ளது உள்ளபடிக் கூறினல், ஆயிரம் பக்கத்திலும் அடங்காது. ஆனல், அப்பழம் பாடத்தையே திரும்பவும் படிக்க எனக்கு மனமில்லை.

காதல் - காதல் - காதல் காதல் போயிற்சாதல்-சாதல்-சாதல் என்று நீங்கள் அன்று மாலை கூறினீர்களே! கசந்து போன வாழ்விற்கு இவ்வார்த்தைகள் இப்பொழுது அமுதமாகத் தான் படுகின்றன. உங்கள் அன்புக் கரங்களில் அடைக்கலம் புக விருப்பினேன். அதற்காக உங்களையும் கெஞ்சினேன். ஆனல்...நம்மிருவர் எண்ணங்களும் இரு துருவங்களாயின.

இந்த வாழ்வில் இனிமேல் எனக்கு இன்பம் கிடையாது; இத்துன்பச் சுமையைத் தாங்கிக் கொள்ளும் சக்தியும் எனக்கில்லை. காவேரியாவது இக்கனத்தைக் கரைத்து விடுவாள் என்று நம்புகிறேன். ஒளி இழந்த இவ்வுலகிலிருந்து விடுதலை பெற விரும்பி நிற்கும் என்னைக் காவேரி கைநீட்டி அழைக்கின்றாள்; நான் போகின்றேன். என்னுடைய இந்த முடிவு, உங்களுடைய திருமணத்திற்கும், இன்ப வாழ்விற்கும் ஒரு தடையாய் இருக்கக்கூடாதே என்பதனல் தான் இவ்வளவு காலம் தாழ்த்த வேண்டி வந்தது.

என் வாழ்விலேயே நான் அனுபவித்தது இரண்டு மணிநேர இன்பந் தான்—அது நீங்கள் கடுஞ் ஜுரத்தில் கண் விழிக்காதிருந்த சமயம். அடுத்த பிறவியிலாவது எனக்கு ஒரு சாசுவதமான இன்பம் கிடைக்குமானல், அதுவே போதும். வருகிறேன்."

இப்படிக்கு,
தங்களின் இருதயத்தை கவர இயலா,
ராணி.

அவனுடைய கைகள் நடுங்கின; உலகமே சுழன்றது: தடாரெனறு கீழே விழுந்து விட்டான்.

இது சித்திரை இதழில் வெளிவந்த 'எரிமலை' என்ற கட்டுரையின் தொடர்ச்சி.

எரிமலை

[வீ. இராசமாணிக்கம், (B. A. Hons.,]

எரிமலைகள் உண்டாகும் இடங்களைப் பற்றியும், அவைகள் எவ்வாறு உண்டாகின்றன என்பதைப் பற்றியும், அவற்றின் தன்மைகளைப் பற்றியும் சென்ற கட்டுரையிலே கண்டோம். எரிமலைகளின் பல்வேறு அமைப்புகளையும், அவைகள் பொங்கா வண்ணம் தடுக்கும் முறைகளைப் பற்றியும் இவ்விதழிலே காண்போம்.

கால்டராக்கள் (Calderas)

எரிமலைகளின் அமைப்புகளிலே கவர்ச்சியுடையது கால்டரா என்பதாம். இவை திறந்த ஆழமான அகன்ற குழிகள். இவைகள் பெரும்பாலும் பல மைல்கள் குறுக்களவுடையன. எரிமலைகளின் வாய்ப்பாகங்கள் நாளடைவில் இடிந்து விடுவதால் இவ்வகைக் கால்டராக்கள் உண்டாகின்றன. சில வேளைகளில், எரிமலைகள் வெடித்து கற்பாறைகளை வெளியாக்கும் பொழுது அம்மலைகளின் மேல் பாகமும் சேர்ந்து பிய்த்துக் கொண்டு செல்லப்படுகின்றன. அப்பொழுதும் இதுபோன்ற கால்டராக்கள் உண்டாகின்றன.

எரிமலைகளுக்கு ஏன் இவ்வித அழிவு ஏற்படுகின்றது? எரிமலைக் குழம்பாலும் வெடிக்கப்பட்ட பாறைத் துண்டுகளாலும் ஆக்கப் பெற்ற வாய்ப்பாகம், எரிமலைக் குழம்பையும் சாம்பரையும் கக்கக்கூடிய மிகச் சக்திவாய்ந்த வெடிகள் உண்டாகும் பொழுது, எரிமலையின் மேல் பாகம் முழுவதும் இடிந்து பூமிக்குள்ளே அமிழ்ந்து விடுகின்றது. ஆனால், அம்மலையின் சுற்றுப்புறம் அழியாது அவ்வாறே உறுதியாக நின்று, நடுவே பள்ளமாகிய இடத்திற்குக் கரையாய் அமைந்து விடுகின்றது. நாளடைவில் அது ஒரு பெரிய ஏரியாக மாறிவிடுகிறது. "The Majestic Crater Lake of Oregon" இவ்வழியில் அமைந்ததே. இப்பொழுது மௌண்ட் மஸாமா என்றழைக்கப்படும் குன்று ஒரு காலத்தில் 12000 அடி உயரமான ஒரு மலையாக இருந்தது. சுமார் 6500 ஆண்டுகட்கு முன், அது எரிமலையாக மாறி 10 கன மைல்கள் அளவுள்ள எரிமலைக் குழம்பைப் பூமியினின்று வெளியாக்கியது. அதன் பிறகு அந்த மலை ஆறு மைல்கள் குறுக்களவுள்ளதும், 4000 அடி ஆழமுள்ளதுமான ஒரு கால்டராவாக மாறியது.

இப்பொழுதுள்ள வெசூவியஸ் (Vesuvius) என்ற எரிமலை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இதைவிட மிக்க உயரமாக இருந்தது. அது, அதன் உச்சிவரை பசுமையான திராட்சைக் கொடிகள் வளர்ந்து படரும் வரை நீண்ட காலமாக உறக்கத்திலிருந்தது. இந்த நீண்டகால அமைதியில் இம்மலைக்கடியிலிருக்கும் அனற்குழம்பின் தேக்கத்தில், வாயுவின் அமுக்கம் மிகுதியாயிற்று. எனவே கி. பி. 79ல் திடீரென, மிகத் தீவிரமாக அனற்குழம்பைக் கக்கத் தொடங்கியது. முதலில் சிறு அளவில் வெளியான

வெண்மையான எரிமலைப் பொருள்கள் அருகில் இருந்த பாம்ப்பே (Pompei) எனும் நகரத்தை மூடிவிட்டன. அதன் பின்னர், உண்மையிலேயே பாழ்செய்த, கனமுள்ளதும், கருநிற முள்ளதுமான அனற்குழம்பு வெளிப்பட்டது. உலைச்சிட்டம் (clinker) போன்ற இப்பொருள்கள் மலையினின்றும் சரிந்து வந்து, ஹெர்குலோனியம் என்ற பட்டணத்தைப் பாழாக்கியது. இந்தக் குறுகிய காலத்தில் அம்மலையின் அடிபாகத்திலிருந்த அனற்குழம்பின் தேக்கத்தினின்று பெருவளவிற்கு, அனற்குழம்பு வெளியாக்கப்பட்டு, அம்மலையின் வாய்ப்பாகம் உடைத் தெறியப்பட்டு, அரைவட்ட வடிவமுள்ள ஒரு பெரிய பள்ளத்தை உண்டாக்கியது. இதவும் இப்பொழுது ஒரு கால்டராவாக அமைந்திருக்கிறது.

எப்பொழுதாகிலும், பூமிக்கு மிக ஆழமான இடத்தில் வன்மையான வாயுக்களின் வெடி யுண்டாகும். அவ்வெடிகள் மிக ஆழமான இடத்தில் ஏற்படுவதால் தரைமட்டத்தின் வரை துளைத்துக்கொண்டு வரும் சக்தியற்றன வாகின்றன. இவ்வித எரிமலைகள், அனற்குழம்பையோ சாம்பரையோ, வெளியாக்காவிடினும் பூமியின் மட்டத்தைப் பாழ்படுத்தி விடுகின்றன. அதாவது, தரைமட்டம், இரண்டிலிருந்து நான்கு மைல்கள் அகலத்திற்கு, உள்முகமாகவும், வட்டமாகவும் அமிழ்ந்து விடுகிறது.

நீராவி வெடிகள்:

பெரும்பான்மையான எரிமலைகளில், நிலத்திற்கடியில் நீர் முக்கியமானதொரு பங்கெடுத்துக் கொள்கிறது. அதிசூட்டுப் பொருளான அனற் குழப்பு வெளிவருங்கால் நீருடன் சேர்கிறது. அப்பொழுது நீர் வெம்மையுற்று, ஆவியாக மாறி, தீவிர மான வெடிகள் உண்டாகக் காரணமாகிறது. கி. பி. 1924ம் ஆண்டு மே மாதம் ஹவாய் பட்டணத்தில் தொடர்ந்து ஏற்பட்ட வெடிகட்கு இதுவே காரணமாகும். அனற்குழம்பானது எரிமலையின் ஓரங்களிலே ஏற்பட்ட பிளவுகளின் வழியாக வெளிவந்து விடுகிறது. அதே நேரத்தில் மலைமேல் மூடிக்கொண்டிருந்த பனிப்பாறைகள் நடுவே ஏற்பட்ட பெரிய பள்ளத்தில் வந்து விழுகின்றன. அதோடு, நிலத்திற்குள்ளிருக்கும் நீரும், வெறுமையாக இருக்கும் அப்பள்ளத்திற்குள் பாய்கிறது. நீர் ஆவியாக மாறுவதால் அடைப்புகளைத் தகர்த்துக் கொண்டு வெளிவரும் அளவிற்கு அமுக்கம் அதிகரிக்கிறது. இவ்வகை வெடிகளால் மலைமேல் மூடிக்கொண்டிருக்கும் பனிப்பாறைகள் சிதறுண்டு நகரங்களுக்கு அழிவை யுண்டாக்குகின்றன. கி. பி. 1880ல், ஜப்பானில் பண்டய் (Bandai) என்ற விடத்து எரிமலை பல ஆண்டுகளாக அமைதியாகவே யிருந்து, திடீரென்று பெரிய ஒலியுடன் பொங்க ஆரம்பித்தது. இதனால் அவ்வெரிமலை அரைப்பாகம் அழிந்து விட்டது. சுமார் 27 சதுர மைல் நீளம் சிதறுண்ட பனிப்பாறைகளால் பாழ்பட்டது. எரிமலைகள் பொங்கும்பொழுது, பொங்குதல் தீவிரமா யிருந்தால் மென்மையான சாப்பற்றாள்கள் 30 மைல் உயரத்திற்குச் செல்கின்றன. தீவிரமற்ற பொங்குதல்களிலே 5 முதல் 10 மைல்கள் வரை செல்கின்றன.

எரிமலைப் பொங்குதல், பெரிதும் அனற்குழம்பின் நெகிழ்ச்சித் தன்மையைப் பொருத்துள்ளதென்று முன்னர் கண்டோம். எனினும் அந்நெகிழ்ச்சித் தன்மை தானும் அவ்வனற்குழம்பின் கலவைப் பொருள்களையும், சூட்டு நிலையையும் அது கொண்டிருக்கும் வாயுவின் அளவையும் பொருத்திருக்கிறது. பொங்குவதற்குப் பெரிதும் காரணமாயமைந்தது அதில் சேர்ந்துள்ள வாயுவே யாகும். வாயுவின்றேல் வெடித்தலும், பொங்குதலுமின்றி சாதாரண மலைகளைப் போலவே இருக்கும்.

அனற்குழம்பில் கலந்திருக்கும் வாயுக்கள் எவையென்றறிய வேண்டாவோ? அனற்குழம்பில் கலந்துள்ள முதன்மையான வாயு 'ஹைட்ரஜன் வாயு'. அதற்கடுத்து, 'கார்பன் மானாக்சைட்' (Carbon - monoxide) 'நைட்ரோஜென்' எனும் வாயுக்கள் கலந்துள்ளன. மற்றும், சிறிதளவு, 'கந்தக வாயு', 'க்ளோரின் வாயு', 'ஃப்ளோரின் வாயு' ஆகியவையும் கலந்துள்ளன. ஆனால் எரிமலையினின்றும் வெளியாகும் வாயுத் தொகுதியில், நீரிய வாயுவே 90% கலந்திருக்கிறதெனக் கணக்கிட்டுள்ளனர். அதற்கடுத்து மிகுதியாகக் கலந்துள்ள வாயு, கரியாவியாகும் (carbon-di-oxide). கி. பி. 1912ல் "பத்தாயிரம் புகைகள்" என்ற பெயருடைய பள்ளத்தாக்கு (Valley of Ten thousand Smokes), எரிமலைப் பொங்குதலுக்குப் பின்னர், பனிப்பாறைகளால் மூடப்பட்டு நெடுங்காலத்திற்குப் பின்னும், அனற்குழம்புகள் ஒரு வினாடிக்கு 60,00,000 காலன்கள் நீராவியையும், 12,50,000டன் ஹைட்ரோ க்ளோரிக் அமிலத்தையும், 2,00,000 டன் ஹைட்ரோ ஃப்ளோரிக் அமிலத்தையும் வெளிப்படுத்தி யிருக்கின்றன.

உண்மையிலேயே, அனற்குழம்பின் வெப்பத்தை ஒருநிலையில் நிறுத்தவும், எரிமலைகளை உயிருள்ளனவாகச் செய்யவும், உறக்கத்தி லிருக்கும் எரிமலைகளைச் சுறுசுறுப்புள்ளனவாகச் செய்யவும், அதில் உண்டாகும் வாயுக்கள் பெரிதும் பயன்படுகின்றன. எரிமலையின் உலைக்களம் (Furnace), எரியத்தக்க வாயுக்கள் எரிந்து கொண்டிருப்பதால், எப்பொழுதும் நீங்காத வெப்பத்துடனேயே யிருக்கிறது.

பின்னிகழ்வதை முன்னறிதல்

விஞ்ஞானத்தின் முக்கியமான வேலையாவது, பின்னர் நிகழப்போவதை முன்னரே அறியும் ஆற்றலை வளர்ப்பதாம். எப்பொழுது, எங்கே எரிமலை பொங்கும் என்று நம்மால் கூறமுடியுமா? ஓரளவிற்குக் கூறலாம். அண்மையில் தோன்றிய மலைப் பகுதிகளிலும், அடிக்கடி நில நடுக்கம் உண்டாகும் நிலப்பகுதிகளிலும் எரிமலைகள் உண்டாகும் எனக் கூறலாம். ஆனால், 'எப்பொழுது' என்று கூறுவதுதான் முடியாது.

நில நடுக்கங்களை யறிவிக்கும் கருவிகளைக் (Seismograph) கொண்டு நாம் எச்சரிக்கையா யிருக்கலாம். கி. பி. 79ல் வெசூவியஸ் எனும் எரிமலையுண்டாவதற்கு 16 ஆண்டுகட்கு முன்னர், அம்மலையைச் சார்ந்த இடமெல்லாம், தொடர்ந்து பலமுறை நில நடுக்கத்தால் தாக்குண்டிருக்கின்றன. கி. பி. 1943ல் மெக்ஸிகோவில் பாரிகுடின் (Paricutin) உண்டாவதற்கு 20 நாட்களுக்கு முன்னர், அதைச் சூழ்ந்த நிலமெல்லாம் நடுக்கங் கண்டிருக்கிறது.

அதைக் காட்டிலும், அமைதியுற்ற எரிமலையின் சுற்றுப்புறத்தில் உண்டாகும், அசைவுகளே சரியான எச்சரிக்கையாகும். பூமியின் உள்ளிருக்கும் அனற்குழம்பின் ஓட்டத்தினால் தரைமட்டத்தை மேடுபள்ளமாகச் செய்து விடுகிறது.

அடுத்தபடியாக, எவ்விடங்களில் பூமியின் காந்தத்தில் நிலையற்ற தன்மை ஏற்படுகிறதோ, அவ்விடங்களில் கண்டிப்பாக எரிமலைகள் பொங்கத் தொடங்கும் என்று கூறிவிடலாம். இந்தக் காந்தத்தின் நிலைமாற்றம், மிக வெப்பமுள்ளதும், காந்த சக்தியற்றதுமான எரிமலைக் குழம்பு பூமியினடியி லிருந்து குழாய்களின் வழியாக உயர்வதாலும், அதன் பக்கத்திலுள்ள கற்பாறைகளின் ஓரங்கள் வெப்பமுறுவதாலும் ஏற்படுகிறது. அதோடல்லாது, பூமியினடியி லுள்ள மின்சார ஓட்டத்தாலும் மாற்றம் ஏற்படுகிறது.

எரிமலைப் பொங்குதலைத் தடுக்கும் வழி

ஓரளவு எச்சரிக்கை செய்த பிறகு எரிமலைப் பொங்குதலினால் ஏற்படும் அழிவைக் குறைக்க வழிவகைகளைச் செய்து கொள்ளலாம். கி. பி. 1669ல் சிசிலியில், கெடானியா என்ற பட்டணம் மௌன்ட் எட்னா எனும் எரிமலையின் அருகிலே இருந்தது. எனவே, அவ்வூர் மக்கள் அம்மலையினின்று பொங்கி வழியும் குழம்பை வேறுவழியில் திருப்பிவிட நீளமான குழிகளை வெட்டினார்கள்.

விமானத்தில் பறந்துசென்று, எரிமலையின் வாய்ப்பாகத்தில் வெடிகுண்டுகளைப் போட்டு, எரிமலையாலேற்படும் அழிவுகளைத் தடுக்க அமெரிக்காவில் புதிய வழியொன்றைக் கண்டுபிடித்துள்ளனர். எரிமலைக் குழம்பின் ஒழுக்கை நிறுத்தவே, இம்மாதிரிக் குண்டு பொழியப்படுகிறது. இது பொங்குதலின் தன்மையையும், சூழ்நிலையையும் பொருத்திருக்கிறது. மூடிபோல் மூடப்பட்டிருக்கும் பாறையின் கீழ்ப் பாகத்திலிருந்து பல சிறு குழாய் போலும் வழிகளில் அனற்குழம்பானது பீறிட்டுக்கொண்டு வெளியேறும்போது, அப்பாறையின் மீது குண்டு போடப்பட்டால், அப்பாறை பிளவுபட்டு, உள்ளிருக்கும் அமுக்கம் குறைந்து பொங்கி வழிதல் நின்றுவிடுகிறது.

சாவக நாட்டில், கிராமங்களிலிருந்தும், பயிரிடும் நிலங்களிலிருந்தும் எரிமலைக் குழம்பை வேறுவழியில் திருப்பப் பெரிய அணைகள் கட்டப்பட்டுள்ளன. மற்றும் பேரழிவைத் தரும் எரிமலைகளைக்காட்டும் படம் ஒன்றும் இருக்கிறது. எரிமலைச் சுவரின் ஓரமாக, மின்பொறியொன்று பொருத்திவைக்கப்பட்டிருக்கிறது. எரிமலை பொங்கும் நேரத்தில், பொங்குவதற்குத் தயாராகவிருக்கும் அனற்குழம்பின் சூட்டினால் மின்கம்பிகள் சூடடைந்து, மின்பொறி மணியடிக்கிறது. இதைக்கொண்டும் எரிமலைகள் எப்பொழுது பொங்கும் எனக் கூறமுடியும்.

பயன்

இவ்வளவு கொடிய அழிவுச் சக்தியைக் கொண்டிலங்கும் எரிமலைகளால் மனித வர்க்கத்திற்குப் பயன் காணமுடியுமா? முடியும். எரிமலையிடம் காணப்படும், அச்சக்தியைப் பயன்படுத்த முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இத்தாலி, ஐஸ்லாண்டு போன்ற இடங்களில் ஒரு சிறு அளவிற்குப் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. ஐஸ்லாந்தில் உள்ள கட்டிடங்கள், எரிமலை நீராவியால் சூடாக்கப்படுகின்றன. இத்தாலியில், 1904-ம் ஆண்டிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய இந்த நீராவி பயன்படுத்தப்படுகிறது. டஸ்கெனி எனற நிலப்பகுதியில் மிக ஆழத்திலிருந்து பிளவுகளின் வழியாக வெளிவரும் அனற்குழம்பு செயற்கைமுறையால் கிணறுகளில் நிறைத்து வைக்கப்பட்டு கிறது. ஒரு சாதாரணக்கிணறு, ஒரு சதுர அங்குலம் 63 பவுண்டு நிறையுள்ளதாகவும், 400 டிகிரி ஃபாரன்ஹீட் சூட்டில் ஒரு மணிக்கு 48,500 பவுண்டு நீராவியை யளிப்பதாகவும் தெரிகிறது. 1941-ல் இவ்வூரில் இந்த நீராவியானது 1,00,000 கிலோவாட் மின்சாரத்தை உண்டாக்கியிருக்கிறது. அதோடு பெருவளவிற்கு போரிக் ஆஸிடையும் (Boric Acid) அமோனியம் கார்போனேட்டையும், கரியாவியையும் (Carbon-di-oxide) மற்றும் சில வேதிப்பொருள்களையும் அளித்துள்ளது.

இவ்விதமாக, அாதச் சக்தியில் மிகச் சிறிதளவே பயன்படுத்தப்படுகிறது. பெருவளவிற்குப் பயன்படுத்துவதில் பல துன்பங்களும் நிறைந்துள்ளன என்பது உண்மையே. ஆனால், இந்தத்துன்பங்களில் பெரும் பகுதியும் காலப்போக்கில் எளிதில் நீக்கப்பட்டுவிடும் என்பதும் உண்மையே.

திரு. என். இராமகிருஷ்ண.

"அழகெனும் அழகும் ஓர் அழகு பெற்றதே..."
(குடந்தையில் சீதை)



திரு. D. I. சந்தாமியான்.

போக்கும்......



திரு. D. I. சந்தாமியான்.

……வரவும்



பிரிட்டிஷ் இன்பர்மேஷன்.

மரைகளின் (Screw threads) அளவைக் கணக்காகச் சற்றும்
பிசகின்றி அளந்து காட்டும் இயந்திரம்.

கிப்ஸ் கருவி

'குப்ஸ்'

கல்லூரி மாணவர்கள் அனைவருக்குமே 'கிப்ஸ் அபரேட்டஸ்' என்றால் என்னவென்று தெரியும். ஜலவாயு கரியமில வாயு, ஹைட்ரஜன் சல்பைடு (hydrogen sulphide) போன்ற வாயுக்களை உற்பத்தி செய்ய ஏற்ற சாதனம் அது. வேண்டிய போது வேண்டியபடி, சிக்கனமாகவும் எளிதாகவும் மேற்கண்ட வாயுக்களைத் தயாரிப்பதற்கு அதற்கு ஈடான வேறு முறைகள் இல்லை எனலாம்.

ஜலவாயு (hydrogen) தயாரிக்க வேண்டுமென்று வைத்துக் கொள்வோம். வேண்டியபோது அமிலம் இறங்கித் தொழிற்பட்டு வாயு உற்பத்தியாகும். மூடிவிட்டால் துத்தநாகத்தை விட்டு அமிலம் பிரிந்து மேலேறி வாயு உற்பத்தியாவதும் தானே நின்று விடுவதால் வாயு சேதமடைவதில்லை. இந்த உபாயத்தை நினைத்து என்றேனும் ஒவ்வொரு மாணவனும் ஆச்சரியப்படாமலிருந்ததில்லை.

தற்போது ரசாயனத் துறையில் வழக்கத்தை விடச் சிறு அளவு பருந்துகளைக் கொண்டே பல சோதனைகளும் ஆராய்ச்சிகளும் நடத்தக் சற்று வருகிறார்கள். சோதனைக் குழல் முதற் கொண்டு பல கருவிகளும் மிகமிகச் சிறியனவாய் 'வாமன' உருப் பெற்று விட்டன. இது கொண்டு ஒரு சிறிய, ஆனால் மிகவும் எளிய முறையில் ஒரு கிப்ஸ் கருவியை நீங்களே செய்து கொள்ளும் வழியை விளக்குவது இங்கு பொருத்தமாகத் தக்கது தான்.

சாதாரண அளவுள்ள ஒரு சோதனைக் குழலின் (test-tube) அடிப்புறத்தை வாயு விளக்கில் காட்டிச் சூடேறியவுடன் நீண்ட குச்சியால் உட்புறமிருந்து அழுத்தினால் கண்ணாடி இளகி வால்போல நீண்டு பொத்துக் கொள்ளும். ஆறிய பின் கரியைத் துடைத்துவிட்டு இக் குழலின் அடிப்புறம் சிறிதளவு கண்ணாடி இழைகளாலான மஞ்ஜி (glass wool) வைத்து அதற்கு மேல் துத்தநாகத் துண்டுகளைப் போடவேண்டும்.



சோதனைக் குழலின் வாயைப் படத்தில் காட்டியபடி வளைந்த கண்ணாடிக் குழாயோடு கூடிய ரப்பர் அடைப்பினால் மூடவேண்டும். கண்ணாடிக் குழாயிற்கு ரப்பர் குழாயும், வேண்டியவாறு திறந்து மூடுவதற்குத் திருகும் பொருத்துவது அவசியம். இச் சோதனைக் குழாயைப் பெருங் குழலின் (boiling tube) மத்தியில் அமைப்பதற்குக் கார்க் பயன்படுகிறது. வெளிக் குழலில் அமிலம் ஏறி இறங்குவதற்குச் சாதகமாக கார்க்கில் சன்னமான துவாரங்கள் இருத்தல் அவசியம். துவாரங்களில்லையென்றால் நாமே ஒரு துவாரத்தை நேர்குத்தாகச் செய்து கொள்ளலாம்.

மத்தியிலுள்ள ரப்பர் அடைப்பைத் தூக்கிச் சிறிது நீர்கலந்த அமிலம் விட்டு அடைப்பைப் பொருத்தலாம். அமிலம் துத்தநாகத்தோடு கலந்து ஜலவாயு உற்பத்தியாகிறது. திருகு திறந்திருந்தால் அதன் வழியே வாயு வெளிப்படும். திருகு மூடப்பட்டால், உற்பத்தியாகும் வாயு அமிலத்தைத் தள்ள, அது வெளிக்குழலில் ஏறி விடுகிறது. வாயு வேண்டியபோது திருகு திறக்கப்பட்டால் அமிலம் உட்குழலை யடையும்; அமிலமும் துத்தநாகமும் தொழிற்பட்டு வாயு மறுபடியும் உற்பத்தியாகும்.

சாதாரண கிப்ஸ் கருவிக்குப் பல உருமாற்றங்கள் தோன்றியுள்ளபோதிலும் மேற்கூறிய வகை செய்வதற்கும், பயன் படுத்துவதற்கும் மிகவும் எளிது. சில திருத்தங்களைப் புகுத்தவும் இது வசதி யளிக்கிறது. உயர்நிலைப் பள்ளியில் படித்த பொழுது, அடியில் பொத்தலான சோதனைக் குழலில் துத்த நாகத்தைப் போட்டு, ஜலவாயு வேண்டிய போது குழாயை அமிலமுள்ள பாத்திரத்தில் வைத்து, வாயு வேண்டாத போது சோதனைக் குழாயை வெளியிலெடுத்துக் கொள்ளலாம் என்று ஆசிரியர் குறிப்பிட்டார். கல்லூரிப் படிப்பின் போது பெருங் குழலைக் (boiling tube) கண்டதும் மேற்கூறிய கருவி உருப்பெற்றது.

'கலைக்கதிர்'

ஆண்டுச் சந்தா 6—0—0

கலையின் களஞ்சியம் சிந்தனைச் செல்வம்

பல சரக்கு

குரும்பு

எங்கள் தமிழாசிரியர் தமிழகம் போற்றும் ஒரு பெரிய ஆராய்ச்சியாளர். ஒரு நாள் அவருக்கு வாழ்க்கையே புளித்துப் போய் விட்டது. காரணம் வேறொன்று மில்லை. இந்தக் காலத்தில் 'எவனெவன்களோ' ஆராய்ச்சி பண்ணக் கிளம்பி விட்டதைக் கண்டுவிட்டார். பழந்தமிழ் நூல்களி லெல்லாம் துருவித் துருவிச் சான்றுகள் காட்டி ஆராய்ச்சி முடிவுகளை வலியுறுத்திய தம் காலம் போய் விட்டதே என்று ஒரு பாடு கையறு நிலை பாடிவிட்டுத் தலையிலே கையை வைத்து உட்கார்ந்து விட்டார். நூல் வழக்கு, உலக வழக்கு ஆகிய இரண்டு வகைப்பட்ட சான்றுகள் கிடைக்கா விட்டால், அவர் எதையும் எற்றுக் கொள்ளவே மாட்டார்.

ஒரு நாள் அவருடைய குறிப்புப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தேன். அருமையான ஆராய்ச்சிக் குறிப்பு ஒன்று கிடைத்தது. அவருக்குத் தெரியாமல் 'காப்பி' யடித்துக் கொண்டேன். நீங்களும் அதைத் தெரிந்து கொள்ளுங்கள் :

வள்ளுவப் பெருந்தகை ஓர் இடத்தே பெருமை என்பது யாதெனத் தெள்ளிதின் அறைந்துள்ளார்.

'பெருமை பெருமிதம்
இன்மை'

என்பது அவர்தம் திருவாக்கு. அஃதாவது பெருமிதம் இன்மையே பெருமை எனப்படுவதாம். ஆடவர்க்குரியன எனத் தொல்காப்பியனார் விதித்த இரண்டு பண்புகளுள் இப் பெருமையும் ஒன்று என்பது ஈண்டு நினைவுகூர்க. என்னை? பெருமையும் உரனும் ஆடூஉ மேன என்றாராகலின்.

இனி, பெருமை பெருமிதம் என்று கூறியவிடத்துப் பெருமிதமாவது யாதெனத் துணிவாம். இத் தெளிவினை ஆசிரியர் தொல்காப்பியனார் அருளிச் செய்தார்.

'கல்வி தறுகண்
இசைமை கொடைஎனச்
சொல்லப் பட்ட
பெருமிதம் நான்கே'

என்ற சூத்திரத்தின்கண் பெருமிதத்துக்கு உரியனவாகிய நிலைக்களன்கள் நான்கு என வகுத்தார். அவையாவன: கல்வி, தறுகண்மை, புகழ், வள்ளன்மை என்பனவாம். இப்போது வள்ளுவர் வாக்கினை நோக்கித் தெளிமின். பெருமை பெருமிதம் இன்மை; அஃதாவது கல்வி, தறுகண், புகழ், என்ற பண்புகள் இன்றியிருப்பதே பெருமையாம். இந்நான்கு பண்புகள் பெற்றார் பெருமை அற்றார் என்பது தமிழ் நூல் வழக்கால் தெளிந்தாம்......

உலக வழக்கினும் இந்நான்கு பண்பும் அற்றாரே பெருமைக் குரியராய் இருத்தல் கண்கூடாம்.

எப்படி! 'ஆராய்ச்சிகளைப் பற்றி இனிமேல் 'சிறிது எச்சரிக்கையாகவே இருக்கவேண்டும்' என்ற நினைவை எனக்கு ஊட்டியவர் அந்த ஆசிரியர் தான். அவர் நினைவில் எழும் இரண்டு பாடல்கள் எப்படியாவது ஒத்திருந்தால்— அவ்வளவுதான் — ஆராய்ச்சி பிறந்துவிடும்.

உலக மக்களின் எண்ணிக்கை (239,99,00,000) இருநூற்று முப்பத்தொன்பது கோடியே தொண்ணூற்றொன்பது லட்சம். இதில் பாதி ஆசியாவின் ஜனத்தொகை-அதாவது சுமார் நூற்றிருபது கோடி. இந்தியாவின் ஜனத்தொகை முப்பத்தைந்து கோடியே அறுபத்தொன்பது லட்சத்து எண்பத் தோராயிரத்து அறுநூற்று இருபத்து நான்கு (35,69,81,624)—அதாவது உலக ஜனத்தொகையில் சுமார் ஏழில் ஒரு பங்கினர் இந்தியர்.

●

ஐக்கிய அமெரிக்க நாடுகளின் ஜனத்தொகை உலகில் 6 சதவிகிதம் தான். ஆனால்,

அவர்கள் உடைமை:

- 70%—மோட்டார் கார்கள்
- 50%—டெலிபோன்கள்
- 45%—வானொலிக் கருவிகள்
- 34%—ரயில் பாதை

அவர்கள் உற்பத்தி:

- 56%—பட்டு
- 53%—காப்பி
- 51%—ரப்பர்

அவர்கள் பயன்படுத்துவன:

- 62%—எண்ணெய்
- 53%—தானியம்
- 50%—பருத்தி
- 34%—நிலக்கரி
- 32%—தாமிரம்
- 30%—இரும்பு
- 32%—உற்பத்தி இயந்திரம்

●

"இவன் குற்றவாளியல்ல; ஆனால், இந்தக் கொலை வழக்கின் மறு விசாரணையின்போது சாட்சியாக வருவதற்காகப் பாதுகாவலில் இருக்கட்டும்" என்று தீர்ப்பளித்தார் நீதிபதி ஹாக்கர். அதோடு அந்த டேவிட் ரீஸ் என்ற நீக்ரோவைப்பற்றி நீதிபதியுள்பட எல்லோரும் மறந்துவிட்டார்கள். நீக்ரோ சிறையிலேயே ஒன்றரை ஆண்டு கழித்தான். குற்றம் ஒன்றும் செய்யாமலேயே சிறையிலிருந்த அவனைப் பற்றித் திடீரென்று நினைவு பெற்ற அதிகாரிகள் விடுதலை செய்தனர். நீக்ரோ தன்னைச் சிறையில் வைத்திருப்பது தவறென்று எதிர்வழக்காடவே இல்லை. வெளியே வரும்போது, "பேசாமல் இங்கேயே இருந்திருக்கலாம். வெளியே இருந்தால் கட்டாய ராணுவ சேவைக்கு இழுத்துக்கொண்டு போய் விடுவார்களே! அதற்கு இது தேவலை என்று பார்த்தேன். கொடுத்து வைத்தது அவ்வளவுதான்" என்று சொன்னான்.

●

எட்டுக் குழந்தைகளோடு உள்ள ஓர் அம்மையார் (திருமதி ஆக்னீ ரோச்) தம் கணவரிடமிருந்து மணமுறிவு பெற்றார்; வயது 39 "வருமான வரியிலிருந்து தப்பிக்க விரும்பும் அருமையான மனிதா" ஒருவரை மணக்க விரும்புவதாக விளம்பரம் வெளியிட்டார். அவ்வளவுதான்; விண்ணப்பங்கள் குவிந்துவிட்டன.

●

டிசம்பர்-மீ 31-ம் தேதி மாலை 4-30 மணி. ஒரு விமானம் நொறுங்கியது. அதிலே அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த வில்லியம் காம்ப்பெல்லும், அவருடைய ஏழு வயதுப் பெண் ஜூடியும் மடிந்தனர். விமான நிலையத்தில் ஒரு குறிப்பு இருந்தது: "மேரி, என்னையும் என் ஒவ்வொரு அணுவையும் - ஜூடி உட்பட-இன்று இழந்துவிட்டாய். செட் இவ்வளவுக்கும் ஈடு செய்யக்கூடியவன் என்று உனக்குள் சொல்லிக்கொள்ள முடியுமா?—இது காம்ப்பெல்லின் குறிப்பு. மேரி அவருடைய மனைவி. "செட் என்பவர் குடும்பத்துக்கு வேண்டிய நண்பர்; எங்கள் மீது வீணாகக் காம்ப்பெல் ஐயப்பட்டார்" என்று மேரி கூறினார்.

●

சிலம்பிசை

திரு. எஸ். ஆர். குப்புசாமி, B. A., M. Mus.

★

சிலப்பதிகாரமும் இசையும்:

தமிழ் ஐம்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரம் ஒன்று என்பதும் அது சேரன் செங்குட்டுவனின் தம்பியாகிய இளங்கோவடிகளா லியற்றப்பட்டது என்பதும் தமிழன்பர்கள் அறிந்ததே. இதனை இயல, இசை, நாடகம் என்ற முத்தமிழ்க் காப்பியம் என்று பொதுப்படச் சொன்னாலும் இதில் இசைச் சிறப்பியல்புகள் சுவையொடு சிறந்து விளங்காத இடமில்லை. இடையிடையே வருகின்ற இசைப்பாட்டுகள் கேட்போருள்ளத்தைப் பிணித்துக் குழைக்கும் தன்மையன.

இந்நூல் பழமை சான்றது. தமிழ் வளமை மிக்கது. கானல்வரி, வேட்டுவவரி, ஆற்றுவரி, ஊசல்வரி, கண்புகுவரி முதலிய இசைப்பாட்டுகள் நிறைந்தது. இது சங்கம் சார்ந்த நூல்களுள் ஒன்றாகும். இதை இயற்றிய இளங்கோவடிகளின் காலம் கி. பி. இரண்டாவது நூற்றாண்டின் பிற்பகுதி என்பது ஆராய்ச்சியாளர்களின் துணிபு.

சிலப்பதிகாரக் கதை ஆரம்பமானது காவிரிப்பூம்பட்டினம் என்னும் சோழ நாட்டின் தலைநகர். இந்நகரிலே பெருங்குடி மரபிலுதித்த கண்ணகி, அவள் கணவன் கோவலன் ஆகியவர்களுடைய வரலாற்றைக் கூறும் வாயிலாக இக்காப்பியம் அக்காலத்தில் செங்கோலாச்சிய மன்னர்களின் முறைமைகளையும், மக்களின் ஒழுக்கம், ஊக்கம், உழவின் மேம்பாடு, தொழில், சமயநிலை, கல்விநிலை, கூத்து, பாட்டு முதலிய திறங்களையும் இனிது இயம்புகிறது. அக்காலத்திய சோழவேந்தன் கரிகாலன் என்பர். நெடுஞ்செழியன் பாண்டிய வேந்தன். அவன் காலத்தில் கலை, வாணிகம், நாகரிகம் முதலியவை செழிப்புற்றிருந்தன. சேரன் செங்குட்டுவனோ இமயஞ் சென்று பத்தினிக் கடவுளுக்குப் படிமம் சமைக்கக் கல்லெடுத்துக் கனவிசயர்கள் என்ற வடநாட்டரசர்கள் முடித்தலையிலேற்றிக் கங்கையில் நீர்ப்படை செய்வித்தவன். வடநாட்டிலும் அவந்தி, மகதம், மாளவம் முதலிய நாடுகள் செழித்தோங்கியிருந்தன, குப்த அரசர்கள் காலத்தில் இசை மிகச் சிறப்புற்றிருந்தது. வரகவி காளிதாசன் வாழ்ந்து இசைத்தொண்டாற்றிய காலம் சற்று முன்பின் இருந்திருக்கக் கூடும். இப்படிப்பட்ட கலைமணிகளின் அரசியலில் பொங்கிய இசை ஒளியைத்தான் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம்.

தமிழிசையின் பெருமையும் பழமையும்:

தமிழிசையின் பெருமை பழமை சான்றது. வெகுகாலத்திற்கு முன்பு தமிழகம் லெமூரியா என்று பெயர் கொண்ட ஒரு பெரிய கண்டத்தின் பகுதியாக இருந்தது. இந்த லெமூரியா இந்து மகா சமுத்திரத்தில் சந்தாத் தீவுகளிலிருந்து ஆசியாக் கண்டத்தின் தென்கரை வழியாக நெடுகச் சென்று ஆப்பிரிக்காக் கண்டத்தின் கிழ்க்கரை வரைக்கும் எட்டியிருந்தது. நாகரிகம், கல்வி, கேள்விகளில் இது சிறப்புற்றிருந்தது. இங்கு வழங்கிய மொழி தமிழே. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்த் துறையிலும் லெமூரியா மேம்பாடடைந்திருந்தது. தார்ஸ்டன் போன்ற மேலைநாட்டறிஞர்கள் ஆதிமனிதப் பிறப்

பிடமாக லெமூரியா இருந்திருக்கலாம் என்று கருதுகின்றனர். இக்கண்டம் கடல் கொள்ளப்படவே, இதன் பெரும் பாகங்கள் கடலில் மூழ்கி, தென்னிந்தியா, இந்து சீன தீபகற்பம், இலங்கை, சந்தாத் தீவுகள், கிழக்கிந்தியத் தீவுகள் முதலியவைகள் தான் எஞ்சிய பாகங்களென்றும், லெமூரியாவி லிருந்தவர்கள் இவண் குடியேறினர் என்றும் எஸ். வி. தாமஸ் அவர்களின் "விய சங்க" ளிலிருந்து அறிகிறோம்.

தமிழகத்தின் தொன்மை மொழியாகிய தமிழின் இலக்கணத்தைப் பற்றிக்கூறும் நூல் தொல்காப்பியம். இது நிலந்தருதிருவிற் பாண்டியன் காலத்தில் அகத்தியர் மாணாக்கரான தொல்காப்பியரால் இயற்றப்பட்டது. (Vide Mannual of Administration of the Madras Presidency). வைத்தியம், இயல், இசை, நாடகம் முதலியவற்றில் திறம் வாய்ந்த அகத்தியர் 80,000 சூத்திரங்களில் விளக்கிய பேரகத்தியம் என்னும் முத்தமிழ் நூலைத் தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள் ஆகிய எல்லைகளோடு 8000 சூத்திரங்களில் சுருக்கியிருக்கிறார். இந்நூலே பிற்காலத்திய இடைச் சங்கத்தார்களுக்கு ஆதாரமாயிற்று. சங்க காலத்தில் இசையைத் தொழிலாகக் கொண்ட வகுப்பினர் இருந்து அரசர்களாலும் பிரபுக்களாலும் ஆதரிக்கப்பட்டு வந்தனர் என்று உயர் திரு. ஆபிரகாம் பண்டிதர் முதலியவர்கள் கருதுகின்றனர். சங்கீதத்தை எழுத்து மூலமாக விளக்கும் முறையை ஆசிரியர்கள் தமிழ்நாட்டிலிருந்து தெரிந்துகொண்டதாகத் திரு. எஸ். வி. வேங்கடேச்வரா போன்றவர்கள் கருதுகின்றனர். (Vide Indian Culture through the Ages) தமிழிசைப்புலவர்கள் சங்கம் வீற்றிருந்து அனேக பேரிசை நூல்களை இயற்றியிருக்கின்றனர். அகத்தியம், இசை நுணுக்கம், இந்திரகாளியம், குணநூல், கூத்தநூல், சயந்தம், செயிற்றியம், தாளவகையோத்து, இசை மரபு, சொக்கபரதம், பஞ்சபாரதீயம், பஞ்சமரபு, பரதசேனாபதீயம், பரதம், பெருங்குருகு, பெருநாரை, மதிவாணர் நாடகத்தமிழ்நூல், முறுவல் முதலிய பல தமிழிசை நூல்களிருந்திருக்கின்றன.

நமது நாட்டு இசை பாரசீகம், அரேபியா, கிரேக்கம் முதலிய தேசங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக ஹண்டர் போன்ற மேலைநாட்டறிஞர்கள் கருதுகின்றனர். கைடோடி அரெஸ்ஸோ (Guido de Arezzo) என்பவர் ஐரோப்பிய சங்கீதத்திற்கு நமது சங்கீதத்தின் சுரசாகித்திய முறையை (Notation) கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டில் உபயோகித்ததாக மேலைநாட்டறிஞர்கள் கூறியிருக்கின்றனர். (Vide Introduction to the Study of Musical Scales by Dali-alon). வில்லினால் வாசிக்கப்படும் வயோல் (Viol) என்ற கின்னர வாத்தியம் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அதைப் பக்கவாத்தியமாகக் கொண்டு புத்தர் பிரான் தமது மதப் பிரசாரம் செய்துவந்தார் என்றும் ஹண்ட்டின் சங்கீத சரித்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றது. 1000 தந்திகள் பூட்டிய பேரியாழ் என்ற வாத்தியத்தை இராவணன் தன் 20 கைகளாலும் வாசித்ததாகத் தெரிகிறது. பரதர், காளிதாசர்களின் காலத்திற்கு முன்பு, மற்ற சாஸ்திரங்களைக் காட்டிலும் இசை நூல் மிகுதியாகப் பயிலப்பட்டதாக ஆனந்தகுமாரஸ்வாமி கூறுகிறார். சுமார் கி. மு. ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்கீதத்தைச் சுர முறையாய் எழுதுவது வழக்கத்திலிருந்ததாகத் தெரிகிறது. (vide Hindu Music and the Gayan Samaj p. 36)

முச்சங்கமும் தமிழிசையும்:

முதல் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் ஆகிய முச்சங்கங்களும் தமிழ் வளர்ச்சியி லீடுபட்டு,

இயல், இசை, நாடகம் ஆகியவற்றை வளர்த்த விவரம் அனேக பிற்காலத் தமிழ் நூல்களில் காணக் கிடக்கின்றன. பௌத்த மத சம்பந்தமானவற்றை அறிந்துசெல்ல வந்த சீன யாத்திரிகரான ஹியூன் த்சாங் என்பவர் தென்னிந்தியக் கலைகளின் உன்னத நிலையைப்பற்றி எழுதி வைத்திருக்கிறார். அவர் சென்ற காஞ்சி பல்லவ அரசர்களின் தலைநகர். அது ஒரு கலை நகரமாகவே அக்காலத்தில விளங்கியிருக்கிறது. அவண் முத்தமிழ் வல்லவர்கள் நிறைந்த இசைக் குழுவினர் ஆங்காங்கு இசைத் தொண்டாற்றி வந்தனர். தர்மபாலர், தேவர் முதலிய தமிழ்ப் பெரியார்கள் அயல்நாட்டுப் புலவர்களை வாதத்தில் வென்றதாகவும் சீன யாத்திரி எழுதிவைத்திருக்கிறார். அக்காலத்துச சங்கக் கலையின் தரம் உன்னதமாயிருந்திருக்கிறது என்றும் பொதுவாகப் படித்துத் தெரிந்தவர்கள் கூடச் சங்கங்களைச் சேர்ந்துதான் அறிவு விளக்கமடைய வேண்டியிருந்ததென்றும் தெரிகிறது. முதல் சங்கத்தின் பெருமையைச் சிலப்பதிகாரம் வேனிற் காதையுரை கூறுகிறது. "முதலூழியிறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச் சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் முடியின் கிழவனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பாடலும், முதுநாரையும், முது குருகும் களரியா விரையுள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பத்திற்றியாண்டு இரீயினார்." புலவர்கள் பரிபாடலில் இன்னிசைப் பண்கள் சமைத்துச் சங்கம் வீற்றிருந்து இசைப் பணியாற்றி வந்தனர். இச்சங்கம் 4445 ஆண்டுகளிருந்து பிறகு கடல் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

இடைச் சங்கமாகிய இரண்டாவது சங்கம் கபாடபுரத்தில் நிகழ்ந்தது. அகத்தியனார், தொல்காப்பியனார், இருந்தையிற் கருங் கோழி மோசி, வெள்ளூர்க் காப்பியர், சிறுபாண்டரங்கர், திரையன்மாறன், துவரைக்கோமான், கீரந்தை முதலிய மூவாயிரத்து எழுநூற்றுவர் முக்கியம் பெற்றவர். கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலையகவல முதலியவை புலவர்களால் பாடப்பட்டவை. அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசைநுணுக்கம், பூதபுராணம் முதலியவை இச்சங்க வெளியீடுகள். இது சுமார் 3700 ஆண்டுகள் இருந்த பிறகு கடல் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. இதிலிருந்து தப்பியவர்கள் உத்திர மதுரையில் (தற்கால மதுரையில்) குடியேறினர்.

மூன்றாவது சங்கமாகிய கடைச் சங்கம் மதுரையில் நக்கீரர் தலைமையில் நடைபெற்றது. இதில் 449 புலவர்களடங்கி யிருந்தனர். நெடுந்தொகையும் ஐங்குறுநூறும், பதிற்றுப் பத்தும், கலியும், பரிபாடலும், கூத்தும், வரியும், பேரிசையும் சிற்றிசையும் புலவர் பாடி யிருக்கின்றனர். இது 1950 ஆண்டுகள் நிகழ்ந்ததாகத் தமிழ் மொழியின் வரலாற்றிலிருந்து அறிகிறோம். சங்க காலத்தில் உன்னத நிலையிலிருந்த இசை, பிற்காலத்தில் தாயற்ற சேயின் கதியையடைந்தது. இதற்குப் பௌத்தர்களும் சமணர்களும் காரணமாயிருந்தனர் என்று தெரிகிறது. வடநாட்டிலிருந்து ஆரியப்படையெடுப்பு, எதிர்மதப் பிரசாரம், உள்நாட்டுக் கலகம் எல்லாம் சேர்ந்து இசை நிலையை ஓங்கவிடாது தடுத்தன.

தமிழ் இசையின் மாண்பு:

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்தவர்கள் ஆடலாலும், பாடலாலும் மகிழ்வுற்றிருந்தனர் என்பதைப் "பாடலோர்த்தும் நாடகங்களும் நயந்தும்" என்ற பட்டினப் பாலையடி தெரிவிக்கிறது. சிலப்பதிகாரத்திலே மாதவி ஆடல், பாடல், அழகு முதலியவை

நிறைந்தவள் என்பது "ஆடலும் பாடலும் அழகும் என்று இக் கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல்" என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும் "கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ் செல்வம், போக்கும் அது விளிந்தற்று" என்பது திருவள்ளுவரின் செய்தி. கபிலர் அகநானூற்றில்,

'ஆடமைக்குயின்ற அவிர்துளை மருங்கிற்
கோடை அவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீ ரின்னிசை
தோடமை முழவின் துதைகுர லாகக்
கணக்கலை யிகுக்குங் கடுங்குரற் றூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டி யாழ் ஆக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத்தியலி யாடுமயில்
நனவுப் புகுவிறலியிற் றோன்று நாடன்"

என்று இசையொடு கலந்த ஆடரங்கு ஒன்றை வர்ணித்திருக்கிறார். மணிமேகலை இயற்றிய கூலவாணிகன் சாத்தனாரும் "கோம்பர்த்தும்பி குழலிசை காட்டப் பொங்கர் வண்டினம் நல்யாழ் செய்ய வரிக்குயில் பாட மாமயிலாடும் விரைப் பூம்பந்தர்" என்று இசையின் பத்தைச் சுவைத்திருக்கின்றார். சோலைகளில் வண்டுகளிசை பாடப் போது கண் மலருவதை "புதலும்வரி வண்டூதே வாய் நெகிழ்ந்தனவே" என்று குறுந்தொகை கூறுகின்றது. அக்காலத்து மக்கள் பரிக்கோல், குத்துக்கோல் முதலிய ஆயுதங்க ளில்லாமல் வீணையி னிசையினால் மதயானையை அடக்கியிருக்கின்றனர் என்பதைக் "காழ் வரையில்லாக் கடுங்களிற் றொருத்தல் யாழ்வரைத் தாங்கி யாங்கு" என்று கலித்தொகை அறிவிக்கின்றது. பெருங்கதையில் "அணியிழை மகளிரும் யானையும் வணங்கும் மணியொலி வீணையும்" என்றும், மேரு மந்தர புராணத்தில், "மகரயாழ்வல்ல மைந்தன் ஒருவனைக் கண்ட மத்தப்புகா முகக் களிற்றின்" என்றும் இசையின் பெருமை சிறப்பிக்கப்பட் டிருக்கிறது. பசியொடு தினைக் கதிரை உண்ணவந்த யானை, தினைக் காவல் புரியும் பெண் பரண் மேல் நின்றுகொண்டு உற்சாகத்துடன் குறிஞ்சிப் பண் பாடியதைக் கேட்டு இசை வயப்பட்டுப் பெரும் பசியையும் மறந்து தினைக் கதிரையுண்ணாமல் சென்ற செய்தியை

"ஒலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
பாடஅப் பைங்கண் பாடு பெற்றொய்யென
மறம்புகன் மழகளி றுறங்கு நாடன்"

என்ற அகநானூற்று அடிகள் சாற்றுகின்றன. பெருங்கதையில் உதயணன் நளகிரி என்ற மதம் பிடித்த யானையை வீணை வாசித்து அடக்கிக் குருவினிடம் பக்திகொண்ட சீடனைப்போல் படியவைத்தா னென்பதை,

"வீணை யெழீஇ விதியி னடப்ப
ஆணையாசாற் கடியுறை செய்யும்
மாணி போல மதக்களிறு படிய"

என்ற அடிகள் அறிவிக்கின்றன. ஆயர் குலத்துதித்த கண்ணன் மாலைப் பொழுதில் பலவிடங்களில் மேய்ந்து கொண்டிருந்த ஆநிரையை ஒன்று கூட்டக் குழல் ஊதினார் என்பதைச் சில பாடல்கள் தெரிவிக்கின்றன. அசுணம் என்ற பறவை இன்னிசை கேட்டால் களிக்கும்; இன்னா இசை கேட்டால் மூர்ச்சிக்கும். இதைப்

பிடிக்க யாழ் வாசிப்பவர்கள் மறைவிலிருந்து யாழில் இன்னிசைப்பண் சமைப்பார்கள். இதைக் கேட்டு மயங்கும் அசுணத்தை நயவஞ்சகமாய்ப் பிடிப்பார்கள் என்பதை,

"அசுணங் கொல்பவர்
கை போன்று
இன்பமும் துன்பமு முடைத்தே"

என்று ஒரு நல்லிசைப் புலவர் பாடியிருக்கிறார். பாலை நிலங்களில் கொள்ளையடிக்கும் ஒரு திருடர் கூட்டம் பாலைப் பண்ணைக் கேட்டு மகிழ்ந்து தங்கள் வன்தொழிலை விட்டு விட்டதை,

"ஆறலை கள்வர் படைவிட அரு
ளின்
மாறுதலை பெயர்க்கு மருவின்பாலை'

என்ற அடிகள் தெரிவிக்கின்றன.

சிலப்பதிகார இசைக்கூறு:

இவைபோன்றவற்றை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு எழுந்த இசை முறையைத்தான் இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். தமிழ் மொழியின் மூன்று கூறுபாடுகள் இயல், இசை, நாடகம் என்பதே. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐவகை இலக்கண இலக்கியங்களை யுடையது இயற்றமிழ். நுட்பமான அலகுகளையுடைய பாலைகளையும் இவைகளைத் தாங்கி நிற்கக் கேள்விகளையும், இவ்விரண்டின் சேர்க்கையால் வரும் வண்ணம் (பண் அல்லது ராகம்), ஒத்து (பாணி) தாளத்தையும் உடையது இசைத் தமிழ். மேலும் இயற்றமிழுக்குரிய ஐந்து அங்கங்களும் ஓசையை அடிப்படையாய்க் கொண்ட இசைத் தமிழுக்கு முண்டு. ஓசையை அடிப்படையாய்க்கொண்ட இயற்றமிழும் ஒலியை அடிப்படையாய்க் கொண்ட இசைத் தமிழும், அசைவு அல்லது ஆடலை அடிப்படையாய்க் கொண்டதும் சேர்ந்து நாடகத் தமிழாகும். இதனைச் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் அடிகள் விரிவாய் விளக்கியிருக்கின்றார். பாவனை, அலங்காரம் இரசம் என்ற மூன்றும் நாடகத் தமிழுக்குரியவை. ஒரு பண்ணின் பாலைகளைக்கொண்டு இசைப் பாக்களைச் சமைப்பதற்கு இசை என்று பெயர். சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் இசையைப்பற்றி,

"பாவோடணைத லிசை யென்றார்
பண்ணென்றார்
மேவார் பெருந்தான மெட்டானும்
—பாவா
யெடுத்தன் முதலா இருநான்கும்
பண்ணிப்
படுத்தமையாற் பண்ணென்று பார்

என்று குறித்துள்ளது.

"பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்ததால் இசையென்று பெயராம். பெருந்தான மெட்டினும் கிரியைகளெட்டாலும் பண்ணிப் படுத்தலாம் பண்ணென்று பெயராயிற்று". மேலும் இப்பாக்கள் அசை, சீர், அடி அல்லது வரி முதலிய உட்கூறுபாடுகளின் பலவிதச் சேர்க்கையால் பல்வேறு பாக்கள் உண்டாகும். பண்ணோடும் பாணியோடும் நிகழ்பவற்றை இசையளவுபா என்பர். விருத்தம், வெண்பா, அகவல், கலிப்பா ஆகியவை இசைப்பாக்களாகும். பண்ணெனப்படும் பாக்களோடு நிகழும் பாக்களை இசைப்பா என்பர். விருத்தம், வெண்பா, அகவல், கலிப்பா ஆகியவை இசைப் பாக்களாகும். சிந்து, துறை, பெருந்தேவபாணி, சிறு தேவபாணி, தேவாரம் முதலியவை இசையளவு பாக்களாகும். கேள்வி, பாலை ஆகியவற்றின் பல்வேறு சேர்க்கையால் ஆதிகாலத்துத் தமிழ் மக்கள் பதி

னொராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்று பண்களைக் கையாண்டு வந்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

புது உரை வேண்டும்

சிலப்பதிகாரத்தில் வழங்கி வந்த இசை, யாழ், குரல், பண், பாணி, இயக்கு, மிடறு, பற்று, குயிலுவக் கருவிகள், கொட்டு வாத்தியங்கள், வரிப்பாடல்கள், கூத்துவகைகள் முதலியவற்றைப் பற்றி விரிவாகவே இளங்கோ அடிகள் எழுதியிருக்கிறார். இப்பெரும் காப்பியத்திற்கு விரிவுரைகளெழுதிய அரும்பதவுரையாசிரியரும் (12 அல்லது 13-வது நூற்றாண்டு) அடியார்க்கு நல்லாரும் (14-வது நூற்றாண்டு) அநேக இசைத் தமிழ் நூல்களையும் வடமொழியிலெழுந்த இசை நூல்களையும் ஆராய்ந்து இசை வகைகளை விளக்கியிருக்கின்றனர். இருப்பினும் அக்காலத்து இசையைத் தற்காலத்து இசையோடு ஒப்பிட்டுப் பார்த்துச் சிலப்பதிகாரத்தில் விளக்கப்பட்ட இசை நமக்கு எவ்வாறு பயனளித்திருக்கிறது என்பதை தெளிவாக்க வேண்டும். எனவே, இப்பெருங் காப்பியத்திற்கு தற்காலத்திற்கு எற்ற ஓர் இசையுரை இன்றியமையாதது.

பண்டைத் தமிழர் வாழ்வியலில் இசை பெற்றிருந்த சிறப்பு வாய்ந்த இடத்தினை ஒருவாறு தெளிதற்கு இக்கட்டுரைக் கருத்துக்கள் பயன்படும். அத்துணைச் சிறப்பெய்திய இசையியல் நூல்களும் பயன்களும் பிற்காலத்தில் மறையலாயின. சிலப்பதிகாரத்தின் இசைக் கூறுகளை அதன் இரண்டு உரையாசிரியர்களும் மிக முயன்று விளக்கியுள்ளனர். ஆயினும், அந்த உரைகளில் உள்ள இசைக் கலைக் கருத்துக்கள் தற்காலத்தில் எளிதில் விளங்கவில்லை. எனவே, தகுந்த ஆராய்ச்சியாளர்கள் சிலப்பதிகாரத்திற்குப் புதிய இசையுரை வகுத்துத் தமிழர் இசைக்கலையின் தொன்மையையும் அது தற்கால இசையோடு பொருந்துவதையும் நிலை நாட்ட வேண்டும்.

1. அநேக ஆண்டுகளாகத் திருத்த முடியாத தன் மகனை, ஒரு இளம்பெண் தன் இன்முகத்தால் திருத்தி விடுகிறாள் என்பது, தாய்க்கு ஒரு அதிர்ச்சியைத் தரும் என்பதில் வியப்பில்லை.

2. ஒரு தாய் தன் மகனை மனிதனாக்கப் பதினைந்து ஆண்டுகள் செலவழிக்கிறாள். மகன், தான் ஒரு மனிதன் என்பதைத் தாய்க்குக் கற்பிக்க அடுத்துப் பதினைந்து ஆண்டுகள் எடுத்துக்கொள்கிறான்.

உள்ளத்தின் உண்மை

திரு. நா. ஏ. சண்முகம், M. A., M. Litt.

●

குழந்தைகள் அழும்போதெல்லாம் உணவு ஊட்டுவது நலமா அல்லது குறித்த வேளையில் அளிப்பது நலமா? இவைகளோடு பொதுவாக எந்தெந்த உணவுப் பழக்கங்களை உண்டாக்குவது நலம் என்று தெளிவுபடுத்தவும்.

உணவு, குழந்தை வளர்வதற்கும் அது ஆரோக்கியமாக இருப்பதற்கும் மிகவும் அவசியம். இதோடு உணவை உற்சாகமாக உண்ணக் குழந்தைகளைப் பழக்கவேண்டும். குழவி (infancy) குழந்தைப் (child-hood) பருவங்களில் பழகும் பழக்கமே பிற்காலத்தில் குமரப் பருவத்திலும் முதுமைப் பருவத்திலும் ஆணித்தரமாக அமைகிறது. ஒருவனுடைய தற்போதைய உணவுப் பழக்கங்களைக் கொண்டு, அவன் எவ்வாறு குழவி, குழந்தைப் பருவங்களில் உணவு அளிக்கப்பட்டான் என்று கூறலாம். உணவுப் பழக்கங்களில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியனவை: 1. காலம் வரை அறுத்து, அதை அனுசரித்து உணவு அளித்தல். 2. உணவு அளிக்கும் தினம் ஒரே இடமாக இருக்கவேண்டும். அதாவது ஒரு நாள் வீட்டுக்கு வெளியேயும், மறுநாள் வீட்டின் வாராந்தாவிலும் மூன்றாம் நாள் சமையல் கட்டிலும் அளிப்பது நலமன்று. 3. முடியும் வரையில், ஒரே சாமான்களை உபயோகித்தல் நலம். 4. ஏறக்குறைய அந்தந்த வேளைக்குத்தக, உணவு அளித்தல் நலம். சிறிது வளர்ந்த குழந்தைக்கு, காலை வேளையில் கொடுக்கவேண்டிய உணவை மாலையிலும், இடைவேளையில் அளிக்க வேண்டிய உணவை இரவிலும் மாற்றி அளிப்பது சிறந்தனல்ல. 5. அந்தந்தச் சமயத்தில் உணவு அளிப்பது மிகவும் அவசியம். பன்னிரண்டு மணிக்கு அளிக்க வேண்டிய உணவை இரண்டு மணிக்கோ அல்லது 8 மணிக்கு அளிக்கவேண்டிய உணவை 11 மணிக்கோ அளிப்பது நலமன்று. ஏனெனில், வயிற்று உறுப்புகள் பழக்கத்திற்கேற்ப, அந்தந்த நேரங்களில் விரிந்து விரிந்து சுருங்குகிறது. இந்த நிலை வயிற்றில் உணவு இல்லாதபோது ஏற்படுகிறது. சான்றாக ஒரு குழந்தை வழக்கப்படி 1 மணிக்குச் சாப்பிடுவது என்று வைத்துக்கொள்வோம்; அந்த நேரம் வந்ததும் வயிற்று உறுப்புகள் விரிந்து விரிந்து சுருங்க ஆரம்பிக்கின்றன. அது காரணமாக பசி உணர்ச்சி ஏற்படுகிறது. அந்தச் சமயத்தில் உணவு உண்டால் உடலுக்குப் பயன் அளிக்கிறது; உள்ளத்திலும் அமைதி உணர்ச்சி ஏற்படுகிறது. இதன்றி, ஒரு நாளைக்கு 11 மணிக்கு அளித்தால் பசி உணர்ச்சி எழுவது இல்லை; அதன் விளைவாக அதிக உணவும் உண்ண முடிவதில்லை. உடல் நலம் குறைகிறது. அங்ஙனமே 1 மணிக்கு, வேளை தவறி உணவு அளித்தால், பழக்கம் காரணமாக 12 மணிக்குப் பசி உணர்ச்சி ஏற்பட்டு அடங்கி விடுகிறது. உணவு அதிகம் உட்கொள்ள முடிவதில்லை. உடல் நிலை குலைகிறது. எனவே அந்தந்த நேரத்தில் உணவு அளித்துப் பழகுதல் மிகவும் முக்கியம்.

211726

சிறிது வளர்ந்த குழந்தைகளுக்கு, அவர்கள் விளையாடிவிட்டு அயர்ச்சியுடன் வந்த உடன் உணவு அளிப்பது நலமன்று. அவர்களுக்குப் பசி இருப்பதில்லை. அரை மணி நேரமாவது அவர்களை இளைப்பாற வைக்கவேண்டும். அப்போது அவர்களுக்குப் பசி அதிகரிக்கும் பசி வந்தபின் தான் உணவை இன்பத்துடன் அவர்களால் உண்ண முடியும்.

ஒருவனது குணம், பிறவி காரணமாக அமைகிறதா? அல்லது தான் வளர்க்கப்படும் முறையில் ஏற்படுகிறதா?

ஒருவனது குணம் (உண்மை பேசுதல், நேர்மை முதலியவைகள்) ஒருவனது பயிற்சி காரணமாகவே அமைகிறது. இதோடுகூடத் தான் பிறந்து வளர்ந்த சூழ்நிலைக்குத் தகப் பெரும்பாலும் அமைகிறது. திருடனுக்குப் பிறந்தவன் திருட்டுக் குணமுடையவனாக இருக்க முடியாது. ஆனால் திருடன் வாழும் சூழ் நிலையில் பிறந்ததாலும், அவன் முறையில் வளர்க்கப்படுவதாலும் திருட்டுக் குணம் ஏற்படுவது இயற்கை. இந்த உண்மையைக் கீழ்வரும் சான்றிலிருந்து நன்குணரலாம். பஞ்சாப் பிரதேசத்தைச் சார்ந்த காடுகளிலுள்ள ஓநாய்கள், கிராமங்களில் புகுந்து சிறு குழவிகளை எடுத்துச் சென்று வளர்ப்பது வழக்கம். அப்படி வளர்க்கப்பட்ட குழந்தைகள் பல, வேட்டையாடுபவர்களால் பிடிக்கப்படுவதும் உண்டு. அக் குழந்தைகளை ஆராய்ந்தவர்கள் ஓநாய்களுக்கு எங்கெங்குக் குணங்களுண்டோ அவைகளெல்லாம் அந்தக் குழந்தைகளுக்கும் இருப்பதைக் கண்டார்கள். கைகளைக் கால்களைப்போல் உபயோகித்து நாலுகால் பாய்ச்சலில் செல்வது, ஓநாய்களைப் போல ஊளையிடுவது, அவைகளைப் போல் இறைச்சியை நகங்களைக் கொண்டும், பற்களைக் கொண்டும் உண்பது முதலியவைகள் அக்குழந்தைகளிடம் காணப்பட்டன. அவைகளின் உள்ளநிலையும், பக்குவமடையாது இருந்தது. இது போன்றவைகளும், மற்ற ஆராய்ச்சிகளும் ஒருவனது குணம், சூழ்நிலைக்குத் தக அமைகிறது என்று தெளிவுபடுத்துகின்றன.

அட்டைப் பட விளக்கம்.

மருத்துவத் துறையில் அறுவை முறை (ஆபரேஷன்) மிக முன்னேறியுள்ளது. மருத்துவப் பயிற்சி பெறுவோர் நேரடியான அனுபவம் பெறுவதற்குமுன், 'கத்தி எடுத்தால்' உலகத்தின் கதி என்ன ஆகுமென்று சொல்லவா வேண்டும்!...... அறுவை முறை தெரியாமல் கத்தி எடுக்கக்கூடாது; கத்தி எடுத்து அறுக்கப் பழகாமல் அறுவை முறையும் தெரியாது — இது தண்ணீரில் இறங்கப் பயந்தவன் நீந்தப் பழகியதுபோலத்தான். — இந்தச் சங்கடத்தைத் தீர்ப்பதற்காக மருத்துவத் துறையினர் ஒரு முறையைக் கையாளுகின்றனர். நல்ல திறமை பெற்ற வைத்தியர்கள் அறுவைச் சிகிச்சை செய்வதை மருத்துவ மாணவர்கள் கவனிக்க ஏற்பாடு செய்கிறார்கள். இதிலும் பல சமயங்களில் சில இடைஞ்சல்கள் உண்டு. அவற்றைப் போக்க மருத்துவ விஞ்ஞானிகள் ஒரு வழி கண்டுபிடித்தனர். அறுவை நிலையத்தில், (ஆபரேஷன் தியேட்டர்) நடப்பதை அப்படியே தொலைக் காட்சி (டெலிவிஷன்) யில் காட்டலாம் அல்லவா? இந்த முறை முதன் முதலில் 1949ம் ஆண்டு பிரிட்டனில் கையாளப்பட்டது.

[படம் உதவினோர்: பிரிட்டிஷ் செய்திப் பகுதியாளர்]

7. பத்து மணி

சனிக்கிழமை காலை 9-30 மணிக்குச் சிவராமன் படையதிகாரி நீலகண்டனை முன் ஏற்பாட்டின்படி பெருமாள் விடுதியில் சந்தித்தான். சிவராமனைக் கண்டதும் நீலகண்டன் முகம் மலர்ந்தது.

"என் அன்புமிக்க நண்பனே, நீ குறித்த நேரத்தில் தவறாமல் வந்ததைக் குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். படையில் உயர்ந்த பதவி அடைவதற்குரிய பண்புகள் உன்னிடம் நிறைந்து காண்கின்றன. நீ விரைவில் படைத்தலைமை வகிக்கும் பேறு பெறுவாய் என்பது என் உறுதியான நம்பிக்கை. நாமிருவரும் பரசுராம நாயக்கரைப் பத்து மணிக்குக் காண வேண்டும். புறப்படு போகலாம்'' என்றான் நீலகண்டன்.

அப்போது சிவராமன் தான் படையை விட்டு நீங்கிக்கொள்ள விரும்புவதை நீலகண்டனிடம் தெரிவித்து விடலாமா என்று எண்ணினான். ஆனால் அதை அப்போது அவன் வெளிப்படுத்தி விட்டால், தான் பரசுராம நாயக்கர் மாளிகைக்குப் போகும் வழியில் நீலகண்டன் பல இன்ப மொழிகளைக் கொட்டித் தன் மனத்தை மீண்டும் மாற்றி விடக் கூடும் என்று கருதினான். ஆகையால் அவன் நீலகண்டனிடம் தன் உள்ளக் கருத்தை உரைக்கவில்லை.

பின்பு நீலகண்டனும் சிவராமனும் பரசுராம நாயக்கர் மாளிகையை நோக்கி நடந்தார்கள்.

வழி முழுதும் நீலகண்டன் ஒரு போர்வீரன் படையில் அடையும் பேரின்ப வாழ்க்கையைப் பற்றி இடைவிடாமல் சொன்மாரி பொழிந்து கொண்டே சென்றான். ஆனால் அவன் உரைத்த சொல் ஒன்றுகூட சிவராமன் செவிகளில் விழவில்லை. அவன் எண்ணமெல்லாம் தான் நீலகண்டன் பிடியிலிருந்து விடுபட்டதும் தன்னை நோக்கிக் காத்திருக்கும் இன்ப வாழ்வில் ஆழ்ந்திருந்தது.

அவர்கள் பரசுராம நாயக்கர் மாளிகைக்குச் செல்லும் வழிக்குச் சுமார் இருநூறு கஜ தூரத்தில் சிவகாமி

வீடு இருந்தது. அவ்விடத்தை நெருங்கியதும் சிவராமன் தன் முகத்தைத் திருப்பி அவ்வீட்டை ஆவலோடு நோக்கினான். அவ்வீட்டின் ஜன்னலிடத்துத் தன் உள்ளக் கோயிலில் வீற்றிருக்கும் உருவத்தை அவன் கண்டான். சிவகாமி ஜன்னலுக்கு வெளியே தன் மலர்க் கரத்தை நீட்டி அசைத்தாள். அவ்வசைப்பு அவள் உறுதினியின்றும் பிறழவில்லை என்பதை அவனுக்கு உணர்த்திற்று. அவன் உள்ளத்தில் உற்சாகம் மேலும் மிகுந்தது. இநநிகழ்ச்சி முழுதும் கண்ணிமைப் பொழுதில் நடந்து விட்டதால், நீலகண்டன் அதை உணரவில்லை. அவன் தன் அதிகாரப் பண்பினை வெளிப்படுத்தும் முறையில், பார்வையை நேராகச் செலுத்தித் தருக்கி, மிடுக்காக நடந்துகொண்டிருந்தான்.

இருவரும் பரசுராம நாயக்கர் மாளிகையை அடைந்தார்கள். அங்குள்ள பணியாளன் அவர்களை உள்ளே அழைத்துச் சென்று, பரசுராம நாயக்கர் முன்னிலையில் விடுத்தான். நீலகண்டன் இராணுவ முறையில் நாய்க்கருக்கு வணக்கம் செலுத்தினான். சிவராமனும் அவரைக் கண்டதும் வணங்கினான். ஆனால் அவன் வணக்கத்தைப் பரசுராம நாயக்கர் பொருட்படுத்தவில்லை.

அவர் சிவராமனைச் சுட்டிக்காட்டி, 'இவனும் படையில் சேர்ந்து விட்டானா? மிக நல்லது' என்று நீலகண்டனை நோக்கிக் கூறினார். பின்பு சிவராமனை நோக்கி, 'உன்னுடைய பெயரும் உன் தற்போதைய நிலைமையும் எனக்கு நன்கு தெரியும். ஆகவே அவற்றைப் பற்றி நான் உன்னைக் கேட்டறிய வேண்டியதில்லை. ஆனால் ஒன்று மட்டும் நான் கேட்டறிய வேண்டும். அதாவது நீ உன் முழுவிருப்பத்தோடு படையில் சேர்ந்தாயா ?'

'ஆம், ஆனால்.........' என்று சிவராமன் தொடங்கு முன் 'இப்போது ஒன்றும் குறுக்கே பேசாதே. பிறகு நான் உன்னைக் கேட்கும் போது பதிலுரைக்கலாம்' என்று கடுமையான குரலில் பரசுராம நாயக்கர் பேசினார். பின்பு படைக்குரிய சட்டங்களில் முக்கியமான சிலவற்றைச் சிவராமனுக்குப் படித்து விளக்கினார். படையில் சேர்ந்தவர்கள் கலகம் செய்தாலும் படையை விட்டுத் தெரியாமல் ஓடி விட்டாலும் எத்தகைய தண்டனைகள் அவர்களுக்குக் கிடைக்கும் என்பதை அவர் வலியுறுத்தி விளக்கினார்.

அவற்றை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த சிவராமன், "ஐயா, இப்போது தாங்கள் அன்புகூர்ந்து எனக்குப் படித்தருளிய சட்டங்களை அடுத்து முக்கியமான சட்டம் மற்றொன்றும் உண்டு என்று நினைக்கிறேன். அதையும் படித்தருளுமாறு வேண்டுகிறேன்" என்றான்.

சிவராமன் எந்தச் சட்டத்தைக் குறப்பிடுகிறான் என்பதைப் பரசுராம நாயக்கர் நனகு உணர்ந்து கொண்டார். "ஓகோ! அதுவா? அதைப் படிக்க வேண்டிய அவசியமில்லை. அச்சட்டத்தில் அடங்கிய கருத்தை மட்டும் கூறிவிடுகிறேன். அதாவது படையில் வீரனாகச் சேர்ந்த ஒருவன் உடனே அதனின்றும் நீங்கிவிட விரும்புவானானால், அவனைப் படையில சேர்த்ததற்காகச் செலவான ரூபாய் இருபதோடும் அவனைச் சேர்த்த படையதிகாரிக்குரிய கட்டணம் ரூபாய் பததும் சேர்த்து, மொத்தம் ரூபாய் முப்பதும் செலுத்தினால், அவன் படையினின்றும் நீக்கம் பெறுவான்" என்றார் பரசுராம நாயக்கர்.

'அந்தத் தொகையை எந்தக் காலததிற்குள் செலுத்த வேண்டும் என்று அநதச் சட்டத்தில் குறிக்கப்பட வில்லையா?' என்று அடுத்தபடியாகக் கேட்டான் சிவராமன்.

"என் அதைப்பற்றிக் கேட்கிறாய்? நீ படையில் சேர்ந்ததைக் குறித்துத் தடை யொன்றும் எழுப்பமாட்டாய்

என்று நம்புகிறேன். எனினும் அச் சட்டத்தில் குறித்திருப்பதை உனக்குக் கூறிவிடுகிறேன். ஒருவன் தான் படையில் சேர்ந்ததைக் குறித்து பொறுப்புடைய ஒரு பெரியவர் முன்னிலையில் மறுப்புக் கூறுவானானல், அவன் அம்மறுப்பைக்கூறி இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் அதற்காகச் சேரவேண்டிய தொகையைச் செலுத்திவிட வேண்டும். தவறினல் அவன் மறுப்புச் செல்லாது" என்று சற்றுக் கடுமையான குரலில் உரைத்தார் பரசுராம நாயக்கர்.

அதைக் கேட்டதும் சிவராமன் பரசுராம நாயக்கரை நோக்கி "பெருந்தகைமை பொருந்திய ஐயா, நான் நன்கு ஆராயாமல் படையில் சேர்ந்ததைக் குறித்து வருந்துகிறேன். வீணாக நீலகண்டன் அவர்களுக்கும் தொந்திரவு கொடுத்து விட்டேன். அதை நினைந்து என் நெஞ்சம் நோகிறது. நான் படையில் சேர மறுக்கிறேன். அதற்குரிய தொகையைக் குறித்த காலத்திற்குள் செலுத்துவதாக உறுதி கூறுகிறேன்." என்ருன்.

இம்மொழிகளைக் கேட்டதும் நீலகண்டன் உள்ளத்தில் சினம் பொங்கி எழுந்தது. அவன் அதைத் தாங்க முடியாமல் தன் கையிலிருந்த பிரம்புத் தடியை ஓங்கி தரைமீது குத்தினன். பரசுராம நாயக்கர் மனமும் எரிந்தது. தமக்குத் தொல்லையாக இருந்த சிவராமன் படையில் சேர்ந்து தம் ஊரை விட்டு ஒழிவான் என்று அவர் எண்ணிய எண்ணமெல்லாம், இப்போது மண்ணாய்ப் போய்விட்டதே! அதை நினைந்து உள்ளம் பதைத்தார். அவர் நீலகண்டனை விளித்து, 'இதற்குத் தானா நீர் இவனை இங்கு அழைத்து வந்தீர். உடனே இவனை வெளியே அழைத்துச் செல்லுங்கள்' என்று கடுகடுத்துக் கூறினார். பின்பு சிவராமனை நோக்கி "நீ நாளை காலை பத்து மணிக்குள் ரூபாய் முப்பதும் நீலகண்டனிடத்தில் செலுத்த வேண்டும். கொடுக்கத் தவறினல் நீ படையிலிருந்து தப்ப முடியாது" என்று அச்சுறுத்தினர்.

நீலகண்டனும் சிவராமனும் பரசுராம நாயக்கர் மாளிகையை விட்டுத் திரும்பினர். வழி முழுவதும் நீலகண்டன் சிவராமன்பால் மொழிந்த வசைமாரி வரம்பில் அடங்காது. அவனைக் கயவன் என்றும், நீசன் என்றும், நயவஞ்சகன் என்றும் அற்பப்பதர் என்றும் துரோகி என்றும் தூர்த்தன் என்றும், வாயில் வந்தவாறெல்லாம் இழித்தும் பழித்தும் பேசினன். இளங்காளையாகிய சிவராமன் உள்ளம் அவ்வசை மொழிகளைப் பொறுக்கலாற்ருது பதைபதைத்தது. அவ்வன்னெஞ்சன் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவனைக் கீழே வீழ்த்தி நசுக்கிவிடலாமா என்று அவன் நெஞ்சம் துடிதுடித்தது. எனினும் தன் சீற்றத்தை வலிந்து தணித்துக் கொண்டான். படையதிகாரியாகிய நீலகண்டனைத் தான் அடித்து விட்டால் தனக்குக் கடுமையான சிறைத் தண்டனைக் கிடைக்கும் என்பது சிவராமனுக்குத் தெரியும். அத்தண்டனைக்குத் தான் ஆளாகிவிட்டால் தன் ஆருயிர்க் காதலியை மணந்து இன்ப வாழ்வு வாழ வேண்டும் என்று அவன் எண்ணிய எண்ணம் எப்படிக் கைகூடும்? எனவே அவன் அளவற்ற பொறுமையைக் கையாண்டான்.

வழியில் சிவகாமியின் வீட்டை அவர்கள் நெருங்கினர். சிவராமன் அவ்வீட்டின் ஜன்னலிடத்து நிமிர்ந்து நோக்கினன். முன் போலவே அவன் காதலி ஜன்னலின்கண் நின்று தன் மெல்லிய கரத்தை வெளியே நீட்டி அசைத்தாள். அவன் விடுதலைக்குரிய பணம் அவனிடம் விரைவில் வந்து சேர்ந்துவிடும் என்பதை அவளுடைய கைஅசைப்பு அவனுக்கு உணர்த்தியது. அவன் மனம் மிக்க ஆறுதலடைந்தது.

சிவராமனும் நீலகண்டனும் வரதன் வீட்டை நெருங்கினார்கள். அவ்வீட்டு வாயிலை அடைந்ததும் நீலகண்டன் சிவராமனை நோக்கி 'நில்' என்று ஆணையிட்டான். தொகையைச் செலுத்தும் வரை சிவராமன் நீலகண்டன் ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அதுவரை அவன் படையைச் சேர்ந்தவனே ஆவான். ஆகையால் சிவராமன் நீலகண்டன் ஆணைக்கு அடங்கி நின்றான். நீலகண்டன் அவனை "நோக்கி, ஏ, அற்பனே! இவ்வீட்டின் மேல் மாடியிலுள்ள உன் அறையிலேயே நீ நாளைத் தொகை செலுத்தும் வரை அடைபட்டிருக்க வேண்டும். மாடியிலிருந்து நீ கீழிறங்கி வந்தாலும், அல்லது அவ்வீட்டை விட்டு வெளிச் சென்றாலும் நீ குற்றவாளியாவாய். அக்குற்றத்திற்குத் தண்டனை கடுஞ்சிறை என்பதை மறந்து விடாதே. நான் அடிக்கடி இங்கு வந்து உன்னைப் பார்வையிடுவேன். இனி நீ உன் அறைக்குப் போகலாம்" என்று உரைத்து அகன்றான்.

இவற்றைக் கேட்டதும் சிவராமன் திகிலடைந்தான். தான் வெளியிற் செல்லாமல் இருந்தால் எப்படி அன்று மாலைச் சோலையில் தன் காதலியை அவன் சந்தித்துத் தொகையைப் பெறமுடியும்? சிவகாமி வர இயலாமற் போனாலும் அவள் தன் பணிப்பெண் கமலத்தினிடம் அப்பணத்தைக் கொடுத்தனுப்புவதாக உறுதி கூறினாளே! அவளையாவது அவன் சந்திக்க வேண்டுமே! அவ்வன்னெஞ்சன் நீலகண்டன் ஆணையை மீறி தான் வெளியேறினால் அவன் தன்மீது குற்றஞ் சாட்டிச் சிறையில் அடைத்து விடுவான். இதற்கென் செய்வது? இங்ஙனம் அவன் எண்ணி ஏங்கினான். பிறகு, "இன்று மாலை, என்னைச் சோலையில் அவர்கள் காணாமற் போனால், இன்றிரவு எப்படியும் சிவகாமி கமலத்தைப் பணத்தோடு இங்கு அனுப்புவாள். தவறினால், நாளை காலை அத்தொகையை என்னிடம் சேர்ப்பிக்க என் உயிர்க்காதலி தவற மாட்டாள்" என்று நினைத்து மனந் தேறித் தன் அறைக்குச் சென்று அமைதியாக அமர்ந்திருந்தான்.

நீலகண்டன் சிவராமன்பால் வீசிய கடுமொழிகளை வரதன் கேட்டுக்கொண்டிருந்தான். சிவராமன், தன் அறைக்குச் சென்ற பிறகு நீலகண்டன் வரதனை அழைத்து, சிவராமன் படையில் சேர மறுத்துவிட்டதை விவரமாகக் கூறி, அவன் அறையை விட்டு வெளியேறாதபடி காவல் புரியும்படியாக அவனிடம் சொல்லிவிட்டு அகன்றான்.

சிறிது நேரங் கழித்து வரதன் மெல்ல படிகள்மீது ஏறிச் சிவராமன் அறைக்குள் நுழைந்தான். அவன் சிவராமனபால் பேரிரக்கங் கொண்டவன்போல நடித்து, "இதெல்லாம் என்ன, சிவராமா?" என்று பரிவோடு கேட்டான்.

"நான் படையிலிருந்து நீங்கிக் கொள்வதாகச் சொன்னதற்காக அந்த அரக்கனாகிய நீலண்டன் என்னை வாயில் வந்தவாறெல்லாம் இழிவாகப்பேசி, இங்கே சிறைப்படுத்தியும் விட்டான்" என்று உள்ளம் பதைத்துப் பேசினான் சிவராமன்.

"நீ படையிலிருந்து நீங்கிக்கொள்வதற்காகக் கொடுக்கவேண்டிய தொகையைச் செலுத்திவிட்டாயா?" என்று வரதன் வினவினான்.

"இன்னும் இல்லை. வரதா, தாங்கள் எனக்கு முக்கியமான ஒரு உதவியைச் செய்யுமாறு வேண்டுகிறேன்" என்று வரதன்மேல் முழு நம்பிக்கை வைத்துப் பேசினான் சிவராமன்.

"உனக்கு எந்த உதவியும் செய்யச் சித்தமாக இருக்கிறேன், சிவராமா? என்ன வேண்டும்? சொல்"

"இன்றிரவு அல்லது நாளை காலையில் இவகே என் பேருக்கு உறையிலிட்ட கடிதமொன்று வரும். அதை அன்பு கூர்ந்து உடனே என்னிடம் சேர்ப்பிக்க வேண்டுகிறேன். அது மிகவும் முக்கியமான கடிதம்" என்று சிவராமன் வரதனை மிகப் பணிவோடு வேண்டிக் கொண்டான்.

"அது என்ன கடிதம் என்று நான் புரிந்துகொண்டேன் சிவராமா? நீ உன் விடுதலைக்காகச் செலுத்தவேண்டிய தொகைதானே அந்த உறையிலிருக்கும்? உற்ற காலத்தில் உதவுதற்கேற்ற நண்பன் உனக்குக்கிடைக்குதைக் குறித்து மிக்க மகிழ்கிறேன். என்னை உறுதியாக நம்புவாயாக! அந்தக் கடிதம் வந்ததும் உடனே அதை உன்னிடம் சேர்க்கத் தவறவே மாட்டேன். அதற்காக நான் இன்று மாலை நேரத்தில் வெளியே எங்கும் செல்லாமல் அதை எதிர்ப்பார்த்த வண்ணம் வீட்டு வாயலிலேயே காத்திருப்பேன்" என்று மிக நயமாகப் பேசினுன் வரதன்.

"உன் அன்புக்கு நான் என்ன கைமாறு செய்ய வல்லேன், வரதா! அந்தக் கல்நெஞ்சன், நீலகண்டன் என்னை எவ்வளவு துன்புறுத்துகிறுன், பார்த்தாயா?"

"ஆம், சிவராமா, நான்கூட அவன் மிக நல்லவன் என்று நம்பினேன். இவ்வளவு கொடியவனுக இருப்பான் என்று நான் சற்றும் கருதவே இல்லை....... உனக்கு நிச்சியமாகப் பணம் கிடைக்குமா? இல்லையேல் யாரிடமாவது சென்று கடன் வாங்கி வந்தாவது உனக்கு உதவுகிறேன்" என்று வரதன் சிவராமனுக்காக உருதுபவன்போல் பேசினுன்.

"ஆ, ஆ! உன் அன்பே அன்பு, வரதா! உனக்குத் தொந்திரவு வேண்டாம். எனக்கு எப்படியும் பணம் கிடைகரும் என்பது என் உறுதியான நம்பிக்கை."

"அப்படியாயின் மிக நல்லது. நீ இந்த அறையைவிட்டு அசையவே வேண்டாம்; இந்த அறையின் வாயிலுக்கு வெளியே வந்தாலும், அந்தக் கொடியவன் நீலகண்டன் உன்மீது குற்றஞ் சுமத்திச் சிறையிலடைத்து விடுவான். எனவே நீ அறையை விட்டு வெளிவருவது நல்லதல்ல" என்று வரதன் சொல்லிவிட்டுக் கீழே இறங்கி வந்தான். உடனே நீலகண்டன் இருப்பிடத்தை நோக்கி விரைந்தான். அங்கே நீலகண்டனும் வரதனும் மிக்க இரகசியமாகச் சிறிது நேரம் உரையாடினர். பிறகு வரதன் தன் இருப்பிடத்திற்குத் திரும்பினுன்.

மாலைநேரம் நெருங்கியது. சிவராமன் மனம் சோலையை நாடியது. அங்கே சிவகாமியோ அல்லது கமலமோ பணத்தோடு தன்னை எதிர்ப்பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று ஏங்கினுன். பின்பு, தன்னை அங்குக் காணுமையால் தன் ஆருயிர்க் காதலி பணத்தை எப்படியும் கமலத்தின் மூலமாக அன்றிரவு தன்னிடம் சேர்ப்பித்துவிடுவாள் என்று நம்பி, மனந் தேறினுன்.

மணி இரவு எட்டு ஆயிற்று. காலடி ஓசைக் கேட்டது. வரதன் பணத்தோடு வருவதாக நம்பினுன். அவன் தன் அறைக்குள் நுழைந்ததும், 'பணம் வந்துவிட்டதல்லவா?' என்று மிக ஆர்வத்தோடு கேட்டான்.

"இன்னும் இல்லையே, சிவராமா! இப்பொழுதுதான் நீலகண்டன் வந்து போனுன். நீ அறைக்குள்ளேயே இருக்கிறுயா என்பதை அறிந்து போகவே அவன் வந்தான்."

"சரி, சரி, தாங்கள் தயவு செய்து கீழே போயிருங்கள். பணம் எப்படியும் வந்துவிடும்" என்று சொல்லிச் சிவராமன் வரதனைக் கீழே அனுப்பினுன்.

மணி பத்தாயிற்று. பணம் வந்த பாடில்லை. வரதன் சிவராமனிடன் வந்து 'இன்னும் பணம் வரவில்லை' என்றான்.

"இன்றிரவு இனி பணம் வராது. ஆனால் நாளைக் காலை அது வருவது உறுதி" என்றான் சிவராமன்.

"மிக்க மகிழ்ச்சி சிவராமா. நாளை காலை பத்து மணிக்குள் நீ விடுதலை பெற்றுவிடுவாய் அல்லவா? நான் போய் வருகிறேன்."

"வணக்கம் வரதா. போய் வாருங்கள்."

வரதன் சென்ற பிறகு சிவராமன் தன் படுக்கைக்குச் சென்றான். அடுத்த நாளிலிருந்து தான் அடையப்போகும் இன்பவாழ்க்கையின் கனவையே அன்றிரவு முழுதும் கண்டு களித்தான் சிவராமன்.

பொழுது விடிந்தது. அரக்கன் நீலகண்டன் பிடியிலிருந்து விடுபடும் நன்னாள் அந்நாள் என்று சிவராமன் கருதி அகமகிழ்ந்தான். விடுதலை பெற்ற பிறகு தன் இன்னுயிர்ப் பாவை சிவகாமியோடு வெளியூர் சென்று அவளைத் திருமணம் புரிந்து கொண்டு நடத்தப்போகும் பேரின்ப வாழ்க்கையை நினைந்து நினைந்து நெஞ்சங் குளிர்ந்தான்.

காலைச் சிற்றுண்டியை மிக விரைவாக உண்டான். எதிர்கால இன்பத்தின் நினைப்பால் அவன் உள்ளம் உணவை அதிகம் விரும்பவில்லை.

மணி எட்டு அடித்தது. நிச்சயமாக கமலம் இப்போது வந்து விடுவாள். அந்த நேரத்திற்குள் அவள் கீழே வந்திருக்கவேண்டும் என்று கருதினான். அதற்குப் பிறகு ஒரு மணி நேரம் கழிந்தது. மணி ஒன்பது! கமலம் வந்ததாகத் தெரியவில்லை. அவன் மனம் குழம்பத் தொடங்கியது. வரதன், அவன் அறைக்குள் நுழைந்தான். அவனைக் கண்டதும் சிவராமன் மிக்க ஆவலோடு தன் கையை நீட்டினான். வரதன் தன் வெறுங்கையை விரித்தான்.

"என்ன இது? இன்னுமா பணம் வரவில்லை" என்று சிவராமன் பரபரப்புடன் கேட்டான்.

"இன்னும் வரவில்லையே! என்ன செய்வது?" என்றான் வரதன்.

"எனக்காக அன்புகூர்ந்து கீழே போயிருங்கள். எப்படியும் பணம் வரும். அது வரும் வரை அவ்விடத்தை விட்டு நகராமல் இருக்கும்படியாய் வேண்டுகிறேன். தாமதிக்காமல் கீழே செல்லுங்கள்" என்று சிவராமன் மன்றாடி வேண்டினான்.

"அஞ்சாதே, சிவராமா நீ வேண்டும் உதவி எதுவாயினும் செய்வேன். நீ மட்டும் இந்த அறையை விட்டு நகராதே. நகர்ந்தால் அந்தப் படுபாவி நீலகண்டன் உன்னை விடமாட்டான்."

"இன்னும் சற்று நேரத்தில் அவ்வரக்கனின்றும் விடுதலை பெறுவேன். தயவு செய்து கீழே செல்லுங்கள்"

வரதன் நீங்கியதும், சிவராமன் உள்ளம் அலைபாய்ந்தது. அவன் தன் சிறு அறைக்குள் பரபரப்புடன் உலாவினான். அந்த அறைக்கு ஜன்னல் பின்புறத்தில் இருந்தது. முன்புறத்தில் இருந்தாலாவது அதன் வழியாக வீதியில் கமலம் வருகையை அவன் நோக்கலாம். அதற்கும் வழி இல்லை. "ஏன் கமலம் வரவில்லை? ஏன் இவ்வளவு தாமதம்.........? இல்லை, இன்னும் சில நிமிஷங்களில் வந்து விடுவாள்" இவை அப்போது அவன் உள்ளத்தில் எழுந்த எண்ணங்கள்.

அரைமணி நேரம் கழிந்தது. ஒரு செய்தியும் இல்லை! அச்சத்தை மிகுவிக்கும் எண்ணங்கள் அவன் மனதில் தோன்றி நிறைந்தன.

"ஒருவேளை பொன்னம்பலம் உண்மையை உணர்ந்து தம் மகளையும் கமலத்தையும் வெளியேற வொட்டாமல் சிறைப் படுத்திவிட்டாரா? அல்லது நம்பிக்கைத் துரோகமா? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" இவ்வெண்ணங்கள் அவனுள் எழுந்து அவனை வாட்டின.

"மணி ஒன்பதே முக்கால் ஆயிற்று. இன்னும் வரவில்லை" என்று வரதன் தன் தலையை சிவராமன் அறைக்குள் நீட்டி, மொழிந்தான்.

"இன்னும் வரவில்லையா? ஐயோ! கீழே செல்லுங்கள்! கீழே செல்லுங்கள்!" என்று பதறினான் சிவராமன்.

பிறகு அவனுள்ளத்தில் ஓர் எண்ணம் உதித்தது. கடை வீதியில் தனக்குத் தெரிந்த மருந்துவரிடமிருந்தும் தையற்காரனிடமிருந்தும் பதினைந்து பதினைந்து ரூபாய் கடனாகக்கேட்கலாமென்று நினைத்தான். உடனே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சீட்டு எழுதினான். இரண்டு சீட்டுகளையும் எழுதி முடிப்பதற்குள் ஐந்து நிமிஷங்கள் ஆகிவிட்டன. உடனே வரதனை அழைத்தான். அவனிடம் அந்த இரண்டு சீட்டுகளையும் கொடுத்து, விரைந்தோடிக் கடனைப் பணத்தைப் பெற்றுவரும்படி கெஞ்சினான். வரதனும் அச்சீட்டுகளை வாங்கிக்கொண்டு கீழே இறங்கி ஓடினான்.

ஒவ்வொரு நிமிஷமாக ஐந்து நிமிஷங்கள் ஆயின.

தன் அறையின் கதவினிடத்துச் சிவராமன் வந்து நின்றான். கீழே வரதன் பேச்சுக் குரல் கேட்டது. அங்கே வேறு குரலும் அவன் காதில் விழுந்தது.

"ஐயோ! நான் அந்த அரக்கனுக்குப் பலிதானா? இது கனவா, நனவா? என அருமைச் சிவகாமியின் கதி என்ன? ஐயோ ஆண்டவனே! என் செய்வேன்!"

மணி பத்து! கடிகாரத்தில் அடித்த ஒவ்வொரு மணியும் அவன் உள்ளத்தை ஓங்கித் தாக்கியதுபோல இருந்தது!

"சிவராமா!" என்று கீழிருந்து ஒரு பெருங்குரல் கேட்டது. அந்தக் குரல் யாருடையது என்று சிவராமன் உணர்ந்துகொண்டான். ஆம். அந்த இரக்கமில்லா அரக்கன் நீலகண்டனின் கடுந்தூரல்தான் அது! தூக்குமேடைக்குச் செல்லும் குற்றவாளி போல் சிவராமன் சோர்ந்து மெள்ள இறங்கி வந்தான்.

(தொடரும்)

காய்ச்சல்

மக்களுக்குக் காய்ச்சல் எவ்வளவு டிகிரி வரை அதிகரிக்கலாம் என்பதை E. F. டுபோய் என்ற அறிஞர் ஆராய்ந்து கூறுகிறார். கடுங் காய்ச்சலினால் வாடிய 357 பேர்களை அவர் சோதித்தார்.

கணக்கெடுத்ததில் 107.8 டிகிரி தான் மிக அதிகம். பொதுவாக ஜுரம் கண்ட 1761 பேர்களில், 608 பேர்களுக்கு 104 லிருந்து 105 டிகிரி வரை இருந்தது.

விளக்கங்களும் விடைகளும்

•

நரம்புத் தளர்ச்சி ஏற்படுவது எதனுல்? அதற்கு என்ன செய்து கொள்வது?

எந்த அர்த்தத்தில் இந்தக் கேள்வியை அனுப்பியிருக்கிறீர்கள் என்பது புரியவில்லை. விளக்கம் தேவை.

∘° ∘° ∘°

பருவ வயதில் மட்டும் உடலில் மாற்றங்கள் தோன்றும்படி சுரப்பிகள் இயங்குவது எவ்வாறு? இவ்வியக்கம் குழந்தைப் பருவத்தில் இல்லாமல் மத்தியில் எவ்வாறு ஆரம்பிக்கிறது?

நல்ல உடல் வளர்ச்சியிருக்க வேண்டிய குழந்தைப் பருவத்தில் வாலிபத்திற்குரிய சுரப்பிகள் இயங்குவதை பீனியல் (*Pineal*) தைம்ஸ் (*Thymus*) என்ற இரு சுரப்பிகள் தடைப்படுத்தி வைத்திருக்கின்றன. உரிய காலத்தில் இவ்விரண்டும் சுருங்கி இவற்றின் உற்பத்தி நின்றவுடன் மற்றவை இக்கோளங்களின் மேலுள்ள தடை யுத்தரவு நீங்கி அவற்றின் இயக்கம் மேலோங்குகிறது. இதன் விளைவாய் பருவத்திற்குரிய மாற்றங்கள் உடலில் தோன்றுகின்றன.

∘° ∘° ∘°

வெயிலில் கடினமான வேலையைச் செய்தாலும் சிலருக்கு வியர்ப்பதில்லை. சிலருக்கு எப்போதும் அளவுக்கு மீறி வியர்க்கிறது. இதற்கு என்ன செய்வது?

அளவுக்கு மீறி வியர்ப்பதைத் தடுக்க நிரந்தரமான சிகிச்சை ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. இத்தகையவர்கள் நாள் தோறும் இரண்டு தடவை குளிப்பது நல்லது. படிகாரம் (*alum*), *tannic acid* போன்ற துவர்ப்பு வாய்ந்த பொடிகள் வியர்வைக் குழாய்களைச் சுருங்கச் செய்வதால் இவற்றை முகப்பவுடரோடு சிறிது கலந்து ஒற்றிக் கொள்ளலாம் வியர்வை நாற்றம் உண்டாகாமல் தடுப்பதற்கு க்ளோரோபில் மாத்திரைகள் (*chlorophyll tablets*) விற்கப்படுகின்றன இவை வாய் நாற்றத்தையும் தடுக்கும்.

வியர்க்காதவர்களுக்குச் சிறுநீரின் வாயிலாகக் கழிவுப்பொருள்கள் வெளியேறும்.

∘° ∘° ∘°

நிலக்கரியில் என்ன பொருள்கள் என்ன நிலையில் அடங்கியுள்ளன?

நிலக்கரியில் தனிக்கரி (*free carbon*) மிகவும் சொற்பமே. கரி, ஜலவாயு, சிறிதளவு பிராணவாயு, வெடியுப்பு வாயு, கந்தகம் போன்றவற்றுலான பொருள்கள் பல கொண்ட கலப்பு அது. B. C. U. R. A. (*British coal Utilisation Research Association*) போன்ற சில கழகங்கள் நிலக்கரியின் உள்ளமைப்பை ஆராய்ந்து முடிவு காண தீவிரமாக முயன்று வருகின்றன.

∘° ∘° ∘°

சென்ற இதழின் தொடர்ச்சி

புராணங்களைப்பற்றிய சில குறிப்புகள்

திரு. வி. ஆர். ஆர். தீட்சிதர்

11. புராணங்களின் குறிப்பு:- மகா புராணங்கள் பதினெட்டென்பதும், உப புராணங்கள் பதினெட்டென்பதும் பலரும் அறிந்து ஏற்றுக்கொண்ட செய்தியாம். (பாகவத புராணம் 12, 7–8 பார்க்க) உபபுராணங்கள் பிற்காலத்தவை; மதச்சார்புடையவை; தோன்றிய இடப்பற்றுடையவை. சரித்திர மாணவற்கு மதம் மிகமிகச் சிறிதுதான். ஆதலால், சிறிது போழ்துக்கு நாம் அதைக் கவனியாமல் விட்டே விடலாம். மகா புராணங்களில் எல்லாவிடத்தும் சிவபெருமானையும், திருமால் முதலான கடவுளரையும் விருப்பம்போல் வழிபடலாமெனக் கூறப்பட்டிருக்கின்றன. இரண்டாவதாக, ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களின் விளக்கமும் விரிவாகக் கூறப்படுகின்றன. (பத்மXLII மத். அத் LI). இந்நூல்கள் கூறுஞ் செய்திகளிலிருந்து பழைய புராண நூல்கள் சைவம் வைஷ்ணவம் போன்ற நீர்பொசியா அறைகளாகப் பகுக்கப்பட்டிருந்தன என்று துணிவது பெருந்தவறாகும். இத்தவறான துணிபால்தான் இந்நூல்கள் சமயச் சார்புடையவை என்றுணரப் பெற்றன. ஒவ்வொரு புராணமும் அது எத்தகைய பாகுபாடுடையதாகவிருந்தாலும், எல்லாத் தெய்வங்களையும் பற்றிப் பேசுகின்றதென்பது உண்மைதான். உதாரணமாக, ஒரு சைவ புராணத்தில் திருமால், நான்முகன் முதலான தெய்வங்களின் வரலாற்றையும் அவர்தம் வீரச் செயல்களையும் காண்கிறோம். இதற்கு, வாயு புராணத்தை ஒரு சான்றாகக் காட்டலாகும். இப்படியே, ஒரு வைஷ்ணவ புராணத்தில் சிவபெருமானைப் பற்றிய பல செய்திகள் வருகின்றன. ஆனால், சில புராணங்கள் வரலாற்று முறையில் வந்த செய்திகளனைத்தையும் ஒரு தெய்வத்திற்கே உரிமைப் படுத்தி அக்காரணத்தால் அத் தெய்வத்தையே வழிபடல் வேண்டுமென வற்புறுத்திக் கூறுகின்றன. அச்செய்திகளால் ஏனைத் தெய்வங்கள் புறக்கணிக்கப் பெற்றன வென்றாதல், மறுக்கப்பட்டன வென்றாதல் எவருங் கொள்ளமுடியாது. ஒவ்வொரு புராணமும் புராணங்கள் பதினெட்டெனக்கூறி அவற்றின் பெயர்களையும் குறிப்பதுவே வியத்தற்குரிய செய்தியாயிருக்கின்றது. இம்முரண்பாடுகளும், முறை வைப்புக்களும், புராணப் பெயர்களும், ஒன்றற்கொன்று மாறுபாடுடையனவாயிருக்க ஒவ்வொரு புராணமும் தன்னையும் உள்ளிட்டுப் பதினெட்டுப் புராணம் என்று கூறுவதுதான் குறிக்கத்தக்கது. புராணங்களனைத்தும் ஒரே காலத்தி லியற்றப்பெற்றன என்பதும், ஒவ்வொரு புராணத்தையும் தொகுத்த தொகுப்பாளனுக்கு அவற்றின் பெயரைச் சொல்ல இக்காலம் எளிதாக இருந்ததென்பதும் காரணத்திற்குப் பொருந்தவில்லை.

பதினெட்டுப் புராணங்களும் எழுதி முடிந்தபின்னர் இப்பதினெட்டுப் புராணத்தையும் தன்னுள் அடக்கிக் கூறும் சுலோகங்கள் பிற்காலத்திலேயே எழுதிச் சேர்க்கப்பெற்றவை எனத் துணிவதே நல்ல முறை.

இப்பொழுது காணப்படுகின்ற புராண உருவங்கள் எக்காலத்தில் இவ்வுருப்பெற்றன எனத் துணிவதற்கில்லை. புராணங்களிலுள்ள ஐந்தாம் பகுதியைப் பார்க்கும்போது கிறிஸ்தவ சகாப்தம் தொடங்கிக் கி.பி. ஐந்தாவது நூற்றுண்டு வரையில் இப்புராண உருப்பாட்டின் காலமாயிருக்கலாம் என்பதற்குத் தக்க சான்று இருக்கின்றது. எந்தப் புராணங்களில் முக்கியமான ஐந்தாவது பகுதியில்லையோ அப்புராணங்கள் பழமை சான்றனவென்றும், கிறிஸ்தவ சகாப்தததிற்கு முன்னேயோ, அல்லது உபநிடத காலத்திற்கு முன்போ தொகுக்கப் பெற்றிருக்கலாமென நாம் அறியவேண்டும். இம் மாறுபாடுகட்குக் காரணம் விளங்காமையால் ஒரு நேரான முடிவுக்கு வருவதில் தொல்லைப்பட வேண்டியிருக்கின்றது. அப்புராணங்கள் ஸூதபுராணிகளால் நைமிசாரண்ய வாசிகளான சௌனகாதி முனிவர்க்கும் தீர்க்கதரிசிகளுக்கும் உரைத்தனரெனப் புராணப் பற்றுடையவர் கூறுகின்றனர். புராண படனம் செய்பவருள் முதல்வரான ஸூதமுனிவரிடமிருந்து புராண வசனங்களைக் கேட்பதற்காக, வேள்வி நடக்கும் நாட்களிலே ஒரு தனிப்பொழுது இதற்கென ஒதுக்கப்பட்டிருந்தது. இதனை உண்மையென ஒப்புக்கொண்டால் சரித்திரப் போக்கு அற்றுப்போவதோடு இப் பதினெட்டுப் புராணங்களைக் குறிப்பிட்ட இடமான அந்த நைமிசாரண்ய வாசிகளே கேட்டார்களெனத் தெரிகின்றது. மதச் சார்பான செயல்களெல்லாம் அந் நாட்டில் எங்கெங்கே நடந்தனவோ அவ்விடங்களிலெல்லாம் புராணத் தொகுப்பு நடந்த இடமாக நாம் எண்ணவேண்டும். பதினெட்டுப் புராணங்களும் பெரும்பாலும் பூகோளப் பகுப்பு முறையைப் பொறுத்துச் செய்யப்பட்டனவாகக் காண்கின்றன. இந்தியாவின் எல்லா இடங்களிலிருந்தும் கோடிக்கணக்கான மக்கள் எந்தப் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்தார்களோ அந்த முக்கியமான க்ஷேத்திரங்களே இப் புராணப் பிரசாரஞ் செய்ய ஏற்ற இடங்களாக இருந்தன. சிற்சில க்ஷேத்திரங்கள் மிக்க உயர்வுடன் கூறப்பட்டிருப்பதிலிருந்து அக்கூற்றுகள் அடங்கிய புராணம் ஒருகால் அவ்விடத்தினின்றும் தோன்றியிருக்கலாம் என்று நாம் எண்ணுதல் பெரிதும் பொருந்துவதேயாம். ஒரு புராணம் கயா மஹாத்மியத்தைப் பற்றி மிகவும் விரிவாகக் கூறுகின்றது. ஒருகால் அப்புராணம் கயா நகரத்தில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது பொருத்தமான காரணந்தான். இக்கூற்றுக்களால் புராணந் தோன்றிய இடத்தை ஒருவாறு ஊகிக்க முடிகின்றது. அப்படியே பத்ம புராணம் புஷ்கர க்ஷேத்திரத்திலும், வாயு புராணம் கயாநகரிலும், பிரம்ம வைவர்த்தம் ஒரிஸ்ஸாவிலும், மார்க்கண்டேய புராணம் நர்மதை தப்தி முதலான நதிகளின் பள்ளத்தாக்குகளிலும் தொகுக்கப்பட்டிருக்கலாம் எனவும் ஊகிக்க இடமுண்டு.

12 இந்திய இலக்கியங்களுள் புராணங்களின் நிலை:— நூற்புலவர்களிற் சிலர் இந்துக்களின் புராண இதிகாச நூல்கள் முதன் முதலில் க்ஷத்திரிய பரம்பரையிலிருந்து எழுந்தனவென்றும், பிராம்மணியத்திற்கு மறுதலைப்பட்டன என்றும் தங்கள் கருத்தைத் தெரிவித்திருக்கின்றனர். அவர்கள் பழைய இந்தியாவில் பிராம்மணச் சார்பானதும், க்ஷத்திரியச் சார்பானதுமான இலக்கியத்தையும் பண்பாட்டையுங் கொண்ட இரண்டு ஓடைகள்

பெருகின வென்பர். வேதங்களின் வரலாறு பிராம்மணச் சார்புடைய தென்றும், இதிகாச புராணங்களின் வரலாறு க்ஷத்திரியச் சார்புடைய தென்றும் அறியப்படுகின்றது. முன் சொன்ன அறிஞர்கள் புராணத்தைத் தொகுத்தவரும் தொகுத்தவா றுரைத்தவருமான ஸூத புராணிகரே சாதியால் அந்தணரல்லர் என வாதிக்கின்றனர்.

மேலும், அவர்கள், க்ஷத்திரியச் சார்பான இலக்கியங்கள் பிராம் மணர்கள் கைப்பட்ட காரணத்தால் அவற்றின் உள்ளுறைகளையும், நடையையும் பார்ப்பார்ச் சார்புடையன என நம்புமாறு மாற்றிவிட்டனர் எனச் சொல்லுகின்றனர்.

13 அரசர் நூல்களும் துறவி நூல்களும்: கார்பே, ரிஸ் டேவிஸ் போன்ற சில அறிஞர்கள் இந்திய இலக்கியங்களெல்லாம் பிராம்மணச் சார்புடையவை என்று சொல்லும் கூற்றுக்களை மறுக்கின்றார்கள். பழைய இந்தியாவில் அரசர் நூல்கள் இருந் தன வென்று அவர் கூறுவர். ஈல்யூ மென் என்பார் துறவி நூல்கள் என ஒரு பகுப்புண்டு என உணர்த்துவர். புராண நூல்களில் உள்ள செய்தி களைப் பார்க்கும்போது பழைய இலக் கியங்கள் அந்தணர்ச் சார்ந்தவை, அரசர்ச் சார்ந்தவை யென இரு பகுப் பின என்று கொள்வதற்கு ஆதாரங் கள் எவையும் இல்லை. எல்லா நூல் களுள்ளும் அந்தணர்ச் சார்பான கொள்கைகள் மிக்க சிறப்போடு சொல்லப்பட் டிருப்பதாகவே நாம் அறிகின்றோம். அரசர் மரபுகளுள் பேரரசர்களும் அவர்தம் வமிசாவளி களும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின் றன என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால், இப்பொருள்பற்றிக் கூறப் பட் டிருக்கும் பகுதியை ஆராய்ந்து பார்க்கும்போது எல்லாப் புராணங் களிலும் அதன் ஐந்தில் ஒரு பகுதியே என்பது எவரும் அறிந்த செய்தி. பெரும்பான்மையான பகுதிகள், பட்டினி, பேருண்டி, குறிப்பிட்ட ஒரு கடவுளை வணங்குதற்கான பல்வேறு முறைகள், வேதஞ் சொல்லிய உலகத் தோற்றம், வேதாந்த மதம் என்னு மிவைகளைப் பற்றிக் கூறுகின்றன. மங்வந்தரங்களைம் பற்றியும், அவர்தம் வமிசாவளிகளைப் பற்றியும், ஸப்த ரிஷிகளைப் பற்றியும், ப்ரஜாபதிகளைப் பற்றியும் வருணித்துக் கூறப்பட் டிருப்பவை யெல்லாம் அந்தணர்ச் சார்பானவை. இரண்டாவதாக ஒரு தனி க்ஷத்திரிய பரம்பரை இருந்த தென்பது பொருந்தாது. பழைய இந்தியாவில் க்ஷத்திரியன் அரசனாக வும், பிராம்மணன் அவனது குரு வாகவும் அல்லது புரோகிதனாகவும், அமைச்சனாகவும் இல்லாத காலத்தை நாம் பார்க்கமுடியாது. பொருட் பாலின் கரைகண்ட பழைய நூலா சிரியர்களான கௌடில்யர் போன்ற வர்கள் சஸ்திரங்களையும் சாஸ்திரங் களையும் அல்லது கலைகளையும் கருவி களையும் ஒன்றுக்குவதாலேயே ஓர் அரசாங்கம் முன்னேறும் என்பதை நன்குணர்த்தி யிருக்கின்றனர். மூன் றுவதாக, பிராம்மணச் சார்புடைய வேதநூல்கள் என்று சொல்லப்பெற் றவை சில மனிதர்களைப் பற்றியே சொல்லுகின்றன. அவருள்ளுஞ் சிலர் சரித்திர காலத்திற்கு முற்பட்ட க்ஷத்திரிய அரசர்களா யிருந்தனர். வேதங்களைச் சொன்ன முனிவர்களின் பெயர்கள் புராணத்தி லுள்ள வம்சாநு கீர்த்தனம் என்னும் பகுதியிற் காணப் பெறுகின்றன. இருக்கு வேதத்தில் ஒன்பது குடும்பங்கள் குறிக்கப்பெற் றுள்ளன. அவற்றுள் வைவஸ்வத, ஐல, சாக்ஷுஷ என வரும் மூன்றும் க்ஷத்திரியரைக் குறிக்கும் பெயர் களாம். வேதத்துள் வருஞ் சில துதிப் பாடல்கள் விவஸ்வான், மநு, பூரு ரவஸ், யயாதி, மாந்தாதா, விச்வா மித்ரர், சிபி முதலானோர் செய்தன வாகக் காண்கின்றன. அது உண்மை

யாயின் க்ஷத்திரிய மரபுக்கு ஒரு தனிப் பெருமைதான். இதனால் இந்த வேதப்பகுதியை க்ஷத்திரியச் சார்புடையது அல்லது அவர்களைப்பற்றிச் சொன்ன நூல் என்று பெயரிட்டு விடலாமா?

இத்துதிகள் ஒருபுறமிருப்ப, அரிச்சந்திரன், பிருது, வைதேகன், ஜநகன், நாபாகன், ப்ரத்யும்நன் முதலிய அரசர் வரலாறுகள் சிற்சில இடங்களில் சுருக்கமாகவும், வேறிடங்களில் விரிவாகவும் கூறப்பட்டிருக்கின்றன. நான்காவதாக, இதிகாசங்களைப் போலவே புராணங்களும் தம்மை ஐந்தாவது வேதம் எனச் சொல்லிக் கொள்கின்றன. அதனால், அவை பிராம்மணச் சார்புடைய வரலாறுகளைப் புறக்கணிக்கவில்லை. அப்புராணங்கள் வேதக் கொள்கைகளைப் பின்பற்றியே செல்கின்றன. சிற்சில செய்திகள் வேதங்களையும் புராணங்களையும் இரண்டாகப் பிரிக்க முடியாமல் ஒன்றென்னுந் தன்மையில் இணைந்துள்ளன. க்ஷத்திரியச் சார்பானவை என்னுங் கொள்கையிலும் ஒரு சிறப்புக் காணப்படுகின்றது. அச்சார்புடையவை வேதங்களில் சொல்லப்பட்ட சடங்கு முறைகளையும், இறை வழிபாடுகளையும், சிராத்தங்களையும் மிகச் சிறப்புடனும் பெருமையுடனும் கூறிச்சென்று வேத வழிப்படாத பௌத்த ஜைன மதங்களை அடியோடு புறக்கணிக்கின்றன. இருந்தாலும் மேலைநாட்டுப் பேரறிஞராகிய பார்ஜிடர்-திரிசங்கு, விச்வாமித்ரர், வசிட்டர் என்னும் இம்மூவர்க்குமிடையே நிகழ்ந்ததாகக் கூறும் கதையில் உள்ள மாறுபாடே அரசர் பகுப்பு, அந்தணர் பகுப்பு என்னும் இரண்டும் இருந்தன வென்பதைத் தெளிவாய்க் காட்டும் எனக் குறை கூறுவர். அம்முறையிலேயே அப்பார்ஜிடர் பிராம்மணர்க்கு ஆதரிப்பாளராக க்ஷத்திரியர் இருந்தனர் என்பதை ஒப்புக்கொள்கின்றார். அரசர் மரபினைச் சிறப்பாகச் சொல்லும் இடங்களிலே, அந்தணரையும், அவர்தம் கல்வி, செயல்கள் முதலியனவற்றையும் குறைபடக் கூறாத காரணத்தால் அவ்வந்தணர்தம் நிலையினையும் ஒழுக்கத்தினையும் ஒப்புக் கொள்கின்றனர். இந்த இரண்டு பகுப்புக்களும் உண்டென்று சொல்லுவதற்குப் பார்ஜிடர்-க்ஷத்திரியர்களைப் பற்றிப் பேசும்பொழுது அவர் வரலாறுகளெல்லாம் எளிய நடையில் இயற்கையாக ஆற்றொழுக்குப் போலே வருகின்றன வென்றும், அந்தணர் சார்பானவை வரும்போதெல்லாம் பொருந்தாக் கூற்றுக்களும், இயற்கை முரண்பாடுகளும், பல கலப்புச் செய்திகளும் வருகின்றன வென்றும் துணிந்து, இவ்விரண்டு பகுப்புக்கள் இருந்தன வென்பதற்கு இவையே நல்ல சான்றெனவுங் கூறுவர். இக்கூற்றுக்களை ஆராயும்போது ஒரு கதையோ வரலாறோ எளிய நடையில் அணிப் பெருக்கமின்றியும், தெய்வத் தன்மையை ஏற்றிக் கூறாமலும் வருகின்றதோ அங்கெல்லாம் உண்மையான க்ஷத்திரியர் வரலாறும்! அணிப்பெருக்க முற்றச் செய்திகள் பலவும் விரவி, கன்னபரம்பரைச் செய்திகளும் கலக்கப் பெற்றிருந்தால் அவையெல்லாம் அந்தணர்ச் சார்பானவை என அறிய வேண்டுமாம்! அறிஞர் பார்ஜிடர் ஓர் அதிகாரத்தில் க்ஷத்திரிய மரபுகளைப் பற்றி விளக்கும் பொழுது வியப்புக்குரிய எத்தகைய செய்திகளும் இல்லையென்றும், அப்படி அவர்களைப்பற்றி ஏதேனும் ஆற்றல் வாய்ந்ததும் வியத்தற்குரியதும் ஆகிய செய்திகள் காணப் பெற்றால் உயர்வு நவிற்சியென்றும், அச்செய்திகளும் பொருத்தமில்லாதன வென்றும் க்ஷத்திரிய மரபு ஒரு தனிப்பட்ட பௌராணிகர்களாலே போற்றப்பட்டு வந்ததென்பதும், அவர்கள் ஸூதர்கள் என்பதும், அதனால் ஓர் உண்மையான க்ஷத்திரிய மரபு அவர்களுடைய

அக்கால நிலைமையைப் பற்றிப் பிறழ உணர்ந்த உணர்ச்சியினால் இப்படி விச்வாமித்ர சிருஷ்டியாகச் செய்யப் பட்டிருக்கிற தென்றும் நாம் அறிய வேண்டும்.

வாயுபுராணம் 62·147 லும், பாத்ம புராணம் VI 27-ஆம் பக்கத்திலும் ஸூதர் என்னுஞ் சொல் பல பொருள் தருவதைக் காணலாம். ஒரு பெரிய ரிஷியும் அயோநிஜருமானவ ரென்றும், ஒரு சாரதியும் அயோநிஜரு மானவ ரென்றும், ஒரு சாரதியும் அநூப நாட்டிலுள்ள ஸூத நகரினன் என்றும் பொருள்பட வருகின்றன.

மகத நாட்டுக்குக் கிழக்கே அநுப நாடு இருந்ததாகச் சொல்லப்படுகின் றது. மகத நாட்டிலுள்ளவர்கள் மக தர் என்பதைப் போல அங்குள்ள மக்களனைவரும் ஸூதர்கள் அநுபர் கள் என்றறியப் படுகின்றார்கள். இரண்டாவதாக, மானவதர்ம சாத் திரத் (10, 11, 17)ல், ஸூதர் என் னும் பிரதிலோமர் வகுப்பு அல்லது கலப்புச்சாதி குறிக்கப்பட் டிருக் கிறது. மகாபாரதம் விராடபர்வம் 21-ம் அத்தியாயத்தில் 9-13ம் சுலோ கங்கள் க்ஷத்திரியத் தந்தைக்கும் அந்தணத் தாய்க்கும் பிறந்த ஒருவன் சாதியால் ஸூதனாகின்றான் எனச் சொல்லும். நமது ஸூதபுராணிகரோ புராணங்களைத் தொகுத்துக் கூறிய வர். க்ஷத்திரிய மரபினைப் பற்றி நன் கறிந்தவர். மாபாரதம் சொல்லும் கலப்புச் சாதியினர் அல்லர். முதல் வேந்தன் மண்ணுலகத்திற் செய்த பெருவேள்வியினின்றும் தோன்றிய வர் புராணச் சூதர். அம் முதல் வேந்தனே பிருது என்பவன். பிருது வின் பெயரே பின்னர்ப் பூமிக்கு 'ப்ரிதிவி' என்னும் பெயரால் அமைந் தது. இவ்வரலாற்றைப் பார்க்கு மிடத்து ஸூதர் உயர்ந்த முனிவர் என்பதும், அயோநிஜர் என்பதும் விளங்கத் தடையில்லை. அவர் முத லில் பிருது மன்னன் வரலாற்றைச் சொன்னார். (வாயு. பக். 33—35) வேள்விச்சாலைக்கு ஸூதர் வந்த போது பிருது மன்னனே அவரை ஸூதர் என்றழைத்தான். இதி லிருந்து சரித்திர சம்பந்தமான அர்த்த சாஸ்திர காலம் வரைக்கும் இச்சூதர் வேதவேள்விகளைத் தவறு மற் செய்கின்ற அந்தணர் முதலியோர் பெரிதும் மதிக்கப் பெற்றுச் சமூகத் தில் ஒரு தனிப்பெரு நிலையை அடைந் திருந்தனர். மேதாவி, வம்சகுசலர், கல்பஞ்ஞர், மஹாபாகர் என்று கற்று வல்ல சபையோரால் அவர் அழைக்கப் பெற்று அச்சபைகளிலேயே தனி மதிப்பிற்குரிய முதல் இருக்கைக்கும் உரியராயினர். ஏனைய முனிவரெல் லாம் ஐயந் தீர்த்தற்காக அவர்தமை அழைக்கும் போதெல்லாம் மேற் சொன்ன அடைமொழிகளாலேயே அச்சூதர் அழைக்கப் பெறுவாராம்.

கி. மு. நான்காம் நூற்றாண்டிலே கௌடில்யர் தம் அருத்தசாத்திரத் திரத்தைச் செய்தபோது ஸூதர் என்னுமித் தனிச்சாதி இருந்தது. இப்பகுப்பைப் பற்றிக் கௌடில்யர் திறம்படப் பேசுகின்றார். பேசினா லும், தனிப் பெருமையை மாத்திரம் ஸூதபௌராணிகளுக்கும் அவரைச் சார்ந்த மாகதருக்குமே உரிமையாக்கு கின்றார். (பௌராணிகஸ்தோ அந்யா: ஸூதோ நாகதஸ்ச பிரஹ்ம க்ஷத் ராத் விசேஷத:-கௌடில்யர் அருத்த சாத்திரம்)

இந்திய நாட்டுப் பழைய இலக்கி யங்களிலே புராணங்கள் எந்த அள வுக்கு இடம் பெற்றிருந்தன என்பது அடுத்தெழுகின்ற கேள்வி. இந்திய நாட்டு இலக்கியங்கள் முழுதும் வேத நூல்கள், இதிகாச புராணங்கள் என ஒருவாறு இரண்டாகப் பகுத்து விட லாம். வேத நூல்களோ தனிப்பட்ட சிலருக்கே உரிமையுடையனவாக இருந்தன. அக்காரணம் பற்றிச்

சமூக மக்கள் இதிகாச புராணங்களையே கற்று வந்தனர். இப்புராண இதிகாசங்கள் ஒரு கிராமத்தில் அல்லது நகரத்தில் உள்ள பெரிய பொது மண்டபத்திலே சமூக மக்களின் நன்மைக்காக விரித்துரைக்கப்பட்டு வந்தன. எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் இப்புராண வரலாறுகளைக் கேட்டும், அவற்றில் உள்ள ஒழுக்க முறைகளையும் நீதிகளையும் பின்பற்றியும் ஒரு நல்ல கல்வியைப் பெற்று வந்தனர். சிலபோது இப்புராணங்களை விரிவாகக் கற்றவர்கள் கூடக் கேட்கச் சென்றனர் எனத் தெரிகின்றது. பாணபட்டர் என்னும் உரைநடை ஆசிரியர் ஒரு நாள் தம்கிராமத்தில் நடந்த வாயுபுராணப் பிரசங்கத்தைக் கேட்கச் சென்றனர் என வரும் ஹர்ஷ சரிதச் செய்தி இதற்கு நல்ல சான்றாகும். இதிகாசங்கள் நீதிகளையும், சட்டங்களையும், அரசர் ஆட்சி முறைகளையும் பற்றிக் கூறி ஒழுக்கத்தை நோக்கமாகக் கொண்டிருந்தன. புராணங்களோ எல்லா வழிபாட்டு முறைகளையும், துதிகளையும், மூட நம்பிக்கைகளையும், பூகோளம், சரித்திரம், கர்ண பரம்பரைச் செய்திகள், புண்ணிய க்ஷேத்திர வருணனை, பல சடங்குகள், வானூற் செய்திகள், சோதிடச் செய்திகள், பலமதக் கொள்கைகள், வீடுபெற எளிய வழிகள் என்னு மிவற்றையும், இன்னும் பிற பொதுச் செய்திகளையும் பற்றிக் கூறிப்போகும். இவையெல்லாம் ஒரு தனி மனிதன்கூட விரும்பி மேற்கொள்ளுந் தன்மையில் ஆக்கப்பட்டிருந்தன. ஆகவே, புராணங்கள் இதிகாசங்களைப் பின்பற்றி யெழுந்த விரிவான நூல்கள் எனக் கொள்ளவே இவ்விரண்டும் மக்கட்டொகுதியின் பொதுப் பண்பாட்டிற்குப் பெரிதும் துணைசெய்தன என்பதை ஒரு முடிபாகக் கொள்ளத் தடையில்லை.

14. புராணங்களின் காலம்:— எல்லாப் புராணங்களும் ஆக்கி முடிந்த காலத்தைப் பல நூற்றாண்டுகளாக நாம் கருதவேண்டும். பிராம்மணங்களிலும் உபநிடதங்களிலும் புராணச் சார்பிற்பட்ட ஒரு வகைச் செய்யுள் யாப்பு உண்டென்று முன்னர்க் கூறப்பட்டது. வேதகாலத்தின் இறுதியிலே சில பழைய புராணங்கள் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும் அப்புராணங்கள் எவ்வெவை என்று இப்போது துணிந்து கூறமுடியாது.

மிகப் பழமை வாய்ந்த கௌதம மதர் சூத்திரத்தைப் பற்றியும் ஆபஸ்தம்ப தர்ம சூத்திரத்தைப் பற்றியும் புராணங்கள் குறிக்கின்றன. அர்த்த சாஸ்திரஞ் செய்த கௌடில்யர் காலத்தில் அரசனாக வரப்போகும் இளவரசனுக்கும் புராணம் ஒரு முக்கிய பாடமாகக் கருதப் பெற்றது. பொதுவாகப் புராணங்கள் அனைத்தும் மகாபாரத காலத்திற்கு முந்தியவைதாம். மார்க்கண்டேய புராணத்தையும் மகாபாரத ராமாயணங்கள் குறிக்கவில்லை. ஆனால், அவை அப்புராணங்களிற் கண்ட கர்ண பரம்பரைகளையும் வரலாறுகளையும் குறிக்கின்றன. வேத நூல்களும் அவற்றின் கிளைகளும் விளக்கமாய்த் தெரிகின்றன. புராண இதிகாசங்கள் அவற்றின் பெயரால் எந்தச் செய்திகளையும் குறிக்கவில்லை. இச்செய்திகள் மகாபாரதத்தில் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப் பெறவில்லை. ஏறக்குறைய அதன் சார்பிலே வந்த ஒரு தனிப் புராணம் என்று சொல்லத்தக்க ஹரிவம்சமும் புராணங்களுக்கு ஓராங்குக் கடைப்பட்டிருப்பதாகத் தெளிவாய்க் கூறுகின்றன.

புராணம் இதிகாசத்திற்கு முற்பட்டது என்பதற்கு இதிகாசத்திலேயே சில நல்ல குறிகள் அடங்கியிருக்கின்றன. இதிகாச புராணங்களைத் தொகுத்த பின்னர்த்தான் மாபாரதஞ் செய்யப்பட்டதென்று வியாச

முனிவரே வெளிப்படையாய்ச் சொல்லுகிறார். இதிகாசத்தில் பதினெட்டுப் புராணங்களையும் யார் கேட்கிறார்களோ அவர்கள் சிறந்த ஞானவான்கள் ஆகிறார்கள் என்றும் ஒரு செய்தி காணப்படுகிறது. இவையும் ஏனைய மேற்கோள்களும் எத்தனையோ புராணங்கள் மாபாரதத்திற்கு முற்பட்டவை என்பதை விளக்குகின்றன. அதனால், அவை மிக்க துணிவுடன் மாபாரதத்திற்கு முற்பட்ட ஒரு காலத்திலேயே துணிந்து வைக்கலாம். பிற்காலத் தெழுந்த புராணங்கள் தம் செய்திகளை இதிகாசங்களிலிருந்தே கடன் கொண்டன என்பதற்கு ஐயமில்லை. புராணங்கள் எல்லாம் மகாவீரர், கௌதமபுத்தர் காலத்திற்கு முன்னரே செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பது நன்கு விளங்கும். பிற்காலத்துப் புராணங்கள் புத்தர் காலத்திற்குப் பின்னர்த் தோன்றியவை. பழைய புராணங்களிலே அர்ஹத: புத்யதே, புத்தாய- எனவருஞ் சொற்களிலிருந்து அப்புராணங்கள் புத்தமதக் காற்றோடிருந்தன வென்று கருதப்படுகின்றது. ஆனால், இச்சொற்கள் தோன்றிய இடத்திலிருந்து ஆராய்ந்து பார்த்தால் புத்தரைக் குறிக்கவில்லை யென்பது விளங்கும். அச்சொற்கள் தாமும் மதிப்பிற்குரியவன், 'சான்றோன்' 'ஆன்றோன்' என்னும் ஒரே பொருளைத் தருவனவாம். இச்சொற்கள் சிவபெருமானுக்குப் பெயர்களாய் வருகின்ற காரணத்தால் ஜைன பௌத்த மதங்களோடு எத்தகைய தொடர்பும் இல்லையெனலாம். பார்ஜிடர், விஷ்ணு புராணமும், பாத்மபுராணமும், ஜைன பௌத்த மதங்களைக் குறிக்கின்றன என்பர். ஆருகதர்களோ வேதவழிப்படாதவர்கள். ஜைன பௌத்தர்களுக்கும் பிராம்மணர்க்குமிடையே தத்தம் உயர்வு குறித்து நிகழ்ந்த சொற்போரானது தேவாசுர யுத்தம் எனக் கருதப்படுகின்றது. கடவுளர்க்கும் அசுரர்களுக்குமிடையே நிகழ்ந்த இக்கலகம் திருமால் ஒரு புனித ஆண்டில் மாயாமோகத்தைப் படைத்தபோது அதைப் பின்பற்றியவர்கள் அனைவரும் ஆருகதர் என்று ஒரு பெயர் பெற்றனர். இக்கலகம் நிகழ்ந்த இடம் நருமதை நதிக்கரை. காலத்தையும் இடத்தையும் ஆராய்ந்து பார்க்கும்போது இக்கொள்கைக்குத் தக்க காரணம் இல்லை. இந்த ஆருகதர்கள் தோன்றிய இடம் மகதநாடு. மகதம் நருமதைக்குச் சேய்மையில் இருக்கின்றது.

ஸூத்ர காலத்தில் தோன்றியதாகக் கருதப்பெறும் சரணவ்யூகம் என்னும் நூலில் வேதங்களின் ஐந்து கிளைகள் கூறப்பெற்றிருக்கின்றன. புராணங்களிலும் இத்தகைய கிளைகள் உண்டு. அவை சாகலர், வாங்கலர், மாண்டூகர் எனப் பெயர் பெறும். இருக்கு வேதத்தில் மூன்று கிளைகள் உண்டெனப் புராணங்கள் பேசுகின்றன. சரணவ்யூகம் என்னும் நூலுட் கூறப்பட்டபடி ஐந்தல்ல. இச்செய்திகளிலிருந்து புராணங்கள் சொல்லுகின்ற இக்கிளைகள் ரிக்வேதத்தில் சொல்லப்பெற்ற இரண்டு பகுப்புக்களும் மறைவதற்கு முன்னாலேயே தொகுக்கப்பெற்றிருத்தல் வேண்டும். ஆதலால் அவை ஸூத்ர காலத்திலேயே ஏற்பட்டன என்னலாம். ஸூத்ர காலத்திற்குப் பிந்தியவை என்று கூறுவதால் மிக்க பொருத்தமிருக்கின்றது.

புராணங்கள் அடுத்தடுத்து வந்த பல காலங்களில் எழுதப் பெற்றவை. இவையெல்லாம் எழுதி முடியப் பல நூற்றாண்டுகள் சென்றிருக்க வேண்டும். இதனால் உபநிடதங்கள் தோன்றிய காலமே புராணகாலம் என்றறியலாம். இதிகாச காலத்திற்கு முன்னேயோ பின்னேயோ சூத்திரங்கள் எழுந்திருத்தல் வேண்டும். ஆகையால், ஒவ்வொரு புராணமும்

அதன் உள்ளுறைக்குத் தக்க வாறு மதிப்பிடப் பெறவேண்டும். முன்னரா பின்னரா என்பதையும் துணிந்து பொருத்திக்கொள்ள வேண்டும்.

15 புராணங்களின் சரித்திரப் பெருமை: பழைய இந்தியாவின் சரித்திரத்தை எழுதும் ஆசிரியனுக்குப் புராணங்களே ஒரு வற்றாத செய்திக் களஞ்சியமாம். அரசர் மரபுகளையும் அவற்றின் வமிசாவளிகளைப் பற்றியும் பேசுகின்ற புராணங்கள் பன்னிரண்டாம். அவை ஒவ்வொன்றும் வமிசாநுசரித்திரத்தை ஐந்தாவதாகக் கொண்டு, மரபு வரிசைகளையும், அவற்றின் வரலாறுகளையும் கூறுகின்றது. இந்தப் பகுதியிலும் எத்தனையோ ஒன்றற்கொன்று முரணான வரலாற்றுச் செய்திகளையும் சரித்திர நிகழ்ச்சிகளையுங் காண்கின்றோம். வமிசாநுசரிதப் பகுதிகள் மரபுப் பட்டியையே தருகின்றன. அரசனைப் பற்றியோ அரச மரபினைப் பற்றியோ எந்த நிகழ்ச்சிகளையும் வரலாறுகளையும் அவை கூறுவதில்லை. அரசர் இத்தனை பேர் என்னும் கணக்கிலும் நம்பிக்கை ஏற்படவில்லை. சில இடங்களில் தவறான கணக்கும் ஏனைய இடங்களில் தவறான பெயர்களும் தரப்படுகின்றன. சரித்திர ஆசிரியன் இச் செய்திகளை யெல்லாம் சிற்பங்கள், சாசனங்கள், இலக்கியங்கள் இவற்றின் உதவியால் நன்றாய்ப் பரீட்சித்துக் கொள்ளவேண்டும்,

விஷ்ணுபுராணம் சொன்ன மௌரிய வம்சத்துச் செய்திகளும், வாயுபுராணஞ் சொன்ன ஆதிகுப்தர்களின் செய்திகளும் அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப் பெற்றன. வாயு புராணஞ் சொன்ன குப்தர் ஆட்சி மகதநாட்டைக் கி. பி. 320 — 330 வரையில் ஆண்ட முதலாம் சந்திர குப்த மன்னனது ஆட்சியின் வருணனை என நம்பப்படுகின்றது. அரசர் மரபுகளைக் கூறும் பகுதியில் பழையதும் புதியதுமான இரண்டு பட்டிகள் இருக்கின்றன. புதிய பட்டியில் வரும் அரசர் மரபுகள் சரித்திரப் பொருத்தம் உடையனவாகக் காணப்படுகின்றன. இப் பட்டியில் அரசர் பெயர்களைச் சொன்னதோடு மாத்திரமன்றி அந்த அரசர்கள் எத்தனை காலம் ஆண்டார்கள் என்ற வரலாறும் கொடுக்கப்பெற்றிருக்கின்றது. இப்புதிய பட்டி ஒரு பெரும் போருக்குப் பின்னாத் தோன்றிய அரசமரபுகளைப் பற்றிப் பேசுவதால், அறிஞர் பார்ஜிடர் கி. மு. 1100 ஆண்டே அக்காலம் என்கின்றார். இப்போருக்குப் பின்னர் மூன்று அரசமரபுகள் அறியப்படுகின்றன. அவை புரு, இஷ்வாகு, மகத நாட்டு அரசர் மரபுகள் என்பனவாம். இவர்க்குச் சமகாலத்தில் எத்தனையோ அரசமரபுகள் இருந்தன. அவையெல்லாம் மிகச் சிறியவை. முதன்மையாக எண்ணப்பெறாதவை. புரு, இஷ்வாகு, மாகதர் என்னும் மூன்று அரசமரபுகளின் சரித்திரமே பழைய இந்தியாவின் சரித்திரமெனப் பெரும்பான்மையாகக் கொள்ளப் பெறுகின்றது. தெலுங்கு மன்னர் தம் மரபுகளைப்பற்றி ஆராயும்போது அம்மரபுப் பட்டியின் தொடர்பு அற்றுப் போய்விட்டது. புராணங்கள் ஆந்திர அரசர்களைக் கண்வ அரசர்க்குப்பின்னே தோன்றியவர்கள் என்று சொல்வதோடு இவ்விரு அரசமரபுகளுக்குமிடையே நூற்றைம்பத்தேழு ஆண்டுகள் சென்றிருக்கலாமெனக் கணக்கிடுகின்றன. முதல் சுங்க அரசர்களுக்கு முற்பட்ட காலத்தில் அதாவது கி. மு. 220 அல்லது 234-ஆம் ஆண்டில் முதல் ஆந்திர மன்னர்கள் என்று சொல்லப் போதிய காரணங்கள் இருப்பதால் இக்கூற்றை மதித்துப் போற்றவேண்டும். (ஸ்மித் எழுதிய பழைய இந்திய சரிதம் 216-217-ஆம் பக்கம் பார்க்க). மீண்டும் இந்த மரபினைப்பற்றி இன்னொரு

குறைபாடு காணப்படுகின்றது. தெலுங்கு மன்னர் மகதநாட்டை எப்பொழுதாவது ஆண்டனரா என்பது இன்னும் ஒரு கேள்வியாகவே இருக்கின்றது. புராணங்களிலும் இதன் சார்பிலே நல்ல சான்றுகள் பல இருந்தாலும் அறிஞர்கள் அவற்றின் ஆதாரத்தைப்பற்றி ஐயப்படுகின்றனர். (ஸ்மித் பழைய இந்திய சரிதம் 216–ஆம் பக்கம் பார்க்க). தெலுங்கர்களின் இயக்கத்தையோ ஆட்சியையோ வட இந்தியாவில் உண்டென்று சொல்ல எந்த ஆதாரத்தையுங் காணோம். இத்தகைய ஆதாரம் இல்லாதபொழுது புராணஞ் சொன்ன ஆதாரங்களை அவ்வளவாக மதித்தற்கில்லையென்றாலும் ஆராய்ச்சியின் பயனாக ஆதாரங்கள் கிடைத்தால் ஒரு துணிவு பிறத்தலுங் கூடும்.

பல புராணங்களில் அரசர்களின் வமிசாவளிகளைப் பற்றிய செய்திகள் காணப்படுன்கின்றன. அவற்றுள் எவை பழமை சான்றவை எனச் சொல்வதற்கில்லை. இருப்பினும், வாயு, பிரம்மாண்டம், பிரம்மம், மத்யம் என்னும் புராணங்களும் இப்பகுப்பிற் சேர்ந்தவையென எண்ணப் பெறுகின்றன. அரச மரபுகளின் பரம்பரைகளைப் பற்றிச் சொல்லுகின்ற பிற புராணங்கள் பாத்மம், கருடம், அக்னி, பாகவதம், லிங்கம், கூர்மம், சிவம், மார்க்கண்டேயம் என்னுமிவைகளாம். இம்மரபுகளைப் பற்றி ஒருதனிப் புராணத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு பரீட்சித்துப் பார்ப்பதில் பயனொன்றுமில்லை. சில செய்திகள் பிழைபடவும், மாறுபடவுங் காண்கின்றன. சில மறைந்தன. வேறு சில இடைச்செருகல்கள். இப்போது அச்சில் வந்துள்ள பிரம்மாண்ட புராணத்தில் ஆணவ— வம்சாவளியின் பிற்பகுதியும், பௌரவ வம்சாவளியும், கலியுக வம்சாவளியின் ஒரு பகுதியுங் காணப்பெறவில்லை. ஆனால், விடுபட்ட அச்செய்திகள் வாயுபுராணத்திற் காணப்படுகின்றன. பிரம்ம புராணத்தில் வடபாசாலஞ் வம்சாவளியைப் பற்றிச் சில அறைகுறைச் செய்திகள் காணப்படுகின்றன. மேலும், பிரம்மபுராணம்— கான்ய குப்ஜம், காசி இவற்றின் வமிசாவளியைப் பற்றி அக்னிபுராணத்திலும் மேற்கூறிய பிழைபட்ட செய்தி காணப்பெறுகின்றது. மச்சபுராணமும் இலிங்கபுராணமும் இஷ்வாகு வம்சத்தில் ஆறு அரசர்கள் இருந்தனர் எனப் பேசும். வாயுபுராணமோ முப்பத்தொரு மன்னர்கள் இருந்தனரெனச் சொல்லும். கூர்ம புராணத்தில் இன்னும் பல அதிகமான செய்திகள் காணப்பெறுவதோடு வஸுமநஸ் மன்னன், ஹைஹய மன்னர், ஜயத்வஜன், துர்ஜயன் என்னும் அரசர்கள் முதலானோர் வரலாறுகளைப் பற்றியும் கூறப்படுகின்றது. மார்க்கண்டேய புராணம் வைசாலவமிசத்தின் பழைய சரித்திரத்தை மிக விரிவாகச் சொல்லுகிறது.

16 **தமிழ் இலக்கியங்கட்கிடையே புராணங்கள்:—** புராணம் என்னுஞ் சொல் பழைய வரலாறும் அவ்வரலாற்றைப் பற்றிய கதைகளும் என்னும் பொருளில் சிலப்பதிகாரத்தும், மணிமேகலையிலும் மேற்கோள்களைக் காணலாம். மணிமேகலை விஷ்ணு புராணத்தைக் கடல்வணன் புராணம் எனச் சொல்லுவதால் விஷ்ணுபுராணப் பழமையை ஒருவாறு நாமறிதல் கூடும். சங்க இலக்கியங்களிலே ‘விஷ்ணு’ வைக் குறிக்கும் போதெல்லாம் கடல் வண்ணன் திருமால் முதலிய சொற்களே வருகின்றனவாதலால் அப்பெயர் அந்நூல்களிற் காணப்பெறவில்லையென ஒரு கேள்வி எழலாம். மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் ‘நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி’ எனக் கூறுவதால் இலிங்க புராணத்திற் கண்ட இராமாவதாரத்தை இவ்வாசிரியர் கண்டறிந்தவர் என்று சொல்ல ஒரு நல்ல சான்றாகும். இதனால் விஷ்ணு பார்வதரும்

னார்தரும் அம்பரீஷனுக்குக் கொடுத்த சாபத்தை மயங்கித் தம்மேல் ஏற்று இராமனாய் அவதரித்தார் எனச் சுருக்கமாய் அறியலாம். புராணங்களிற் காணப்பெறும் கருத்துக்களும், நோக்கங்களும், விதிகளும் விலக்குகளும், பொய் போன்ற நற்செய்திகளும் நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் பயன்படுத்தப் பெற்றிருக்கின்றன. அச்சான்றோர்களெல்லாம் ஞானதீபத்தைக் கையிற் பிடித்து, மதக்கொள்கைகளை மனத்திற் கொண்டு தமிழகமெல்லாம் அறிவொளி பரப்பி, சமயக் கருத்துக்களைப் பண்பட்ட மனமெனும் வயல்களில் வித்திப் பெருந்தொண்டு செய்திருக்கின்றனர். தேவாரத்திலும், திருவாய்மொழியிலும் இலிங்க புராணத்தைப் பற்றிப் பேசப்பட்டிருப்பதால் தமிழர்கள் இப்புராணத்தை நன்கறிந்தவரெனச் சொல்லுவதற்குத் தடையில்லை. அப்பர் பாடியனவாக வரும் பொதுப்பதிகங்களுள்ளே ஒரு பதிகம் இலிங்க புராணத் திருக்குறுந்தொகையெனப் பெயர் பெற்றிருக்கின்றது. நம்மாழ்வார் திருவாய்மொழி 4, 10, 5-இல் 'இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும்" எனப் பேசுகின்றார். ஆகையால் இப்பகுப்பு நூல்கள் பலராலுங் கொள்ளப்பெற்று விரும்பவும் பெற்றன. தமிழிலக்கிய உலகம் வடமொழிபானியன்ற பல புராணச் செய்திகளையறிந்து தமிழ் மொழியின்கண் மொழி பெயர்க்கவுந் தொடங்கியது. இங்ஙனம், புராணங்கள் தமிழ் இலக்கிய உலகத்திலே இடம் பெற்றுவிட்டன. இதுவரையில் மொழி பெயர்க்கப் பெற்ற தமிழ்ப் புராணங்கட்குக் காலவரையறை செய்ய முடிவதில்லை. சிவ, லிங்க, மச்ச, கூர்ம, பாகவத, மார்க்கண்டேய, தேவி பாகவத, விஷ்ணு, காருட புராணங்கள் மொழி பெயர்க்கப் பெற்று விட்டன. பதினெட்டுப் புராணங்களுள் ஏறக்குறைய ஒரு பத்துப் புராணங்கள் தமிழ் மொழியில் வந்து விட்டன.

17 சிவ, வாயு புராணங்கட்கிடையே ஒரு மயக்கம்: தமிழ் மொழியில மிகப் பழமை வாய்ந்த சிறந்த நிகண்டு 'பிங்கலந்தை' என்பது. அதில், மச்ச, கூர்ம, வராக, வாமன, பாத்ம, விஷ்ணு, பாகவத, பிராம்ம, சைவ, லிங்க, பவிஷ்ய, நாரத, கருட, பிரம்ம, வைவர்த்த, ஸ்கந்த, மார்க்கண்டேய, அக்னி, பிராஹ்மாண்ட எனப் பதினெட்டுப் புராணங்கள் காணப்படுகின்றன. இதிலிருந்து பிங்கலந்தை ஆசிரியர் சிவ புராணத்தை ஒரு மகா புராணமாகக் கருதும் வழக்காற்றை அறிந்திருந்தார் எனத் தெரிகிறது. வாயு புராணமா, சைவ புராணமா - எது மகா புராணம் என்பதைப் பற்றி ஒரு மயக்கம் உண்டு. பழமையிலும், காலத்திலும், நடையிலும், நூற்செய்திகளிலும், நான்கு பாதப் பகுப்புக்களிலும் வாயு புராணமே ஒரு மகா புராணமென நாம் துணிவுடன் கருதவேண்டும்.

இப்பொழுதுள்ள ஸ்காந்த புராண முகவுரைப் படியும் தமிழ் அகராதிகள் வாயிலாகவும் கீழ்க்கண்ட புராணப் பகுப்புக்கள் அப்புராணங்களுக் குரிய தெய்வங்களோடு பகுக்கப் பெற்றிருக்கின்றன.

	தெய்வம்	புராணங்கள்
1	பிரம்மா	பிரம்ம புராணங்கள்
2	சூரியன்	பிரம்ம வைவர்த்த புராணம்
3	அக்னி	அக்னி புராணம்
4	சிவன்	சிவ, ஸ்கந்த, லிங்க கூர்ம, வாமன, வராஹ, பவிஷ்ய, மச்ச, மார்க்கண்டேய, வாயவீய அல்லது பிரம்மாண்ட புராணங்கள்

5 விஷ்ணு நாரத, பாகவத, கருட, விஷ்ணு புராணங்கள்

இப்பகுப்பு முழுதும் பிற்காலத்தில், ஒரு புராணத் தொகுப்பாளரால் சேர்த்துச் செய்யப்பட்டிருக்க வேண்டும். சைவம், வைணவம் முதலான மதஇயக்கம் தமிழ்நாட்டில் எங்கும் பரவி அவ்வியக்கங்கள் நிலைத்த பின்னர் இவை உண்டாயிருக்கவேண்டுமென்பது வெளிப்படை.

18 புராணத்தின் ஐந்து சிறப்பியல்புகள்:—

புராணங்களின் ஐந்திலக்கணத்தை வடமொழி அகராதி ஆசிரியர் அமரசிம்மர் கூறியபடி தமிழில் மொழிபெயர்க்கப்பெற்று அது ஒரு செய்யுள் வடிவத்திலே கூர்ம புராணத்திற் காணப்படுகின்றது. புராணங்களின் ஐந்திலக்கணமும் அமரசிம்மர் பகுத்த முறையென்று சொல்லத் தட்டில்லை. உலகத் தோற்றம், ஒடுக்கம், மங்வந்தரம், முனிமரபு, அரசமரபுகளும் வரலாறுகளுமே அவ்வாசிரியரின் பகுப்பாகக் கொள்ள வேண்டும்.

இக்கட்டுரையை முடித்தற்கு முன்னால் மொழிபெயர்ப்புக்களைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகின்றேன். மொழி பெயர்ப்புக்கள் வடமொழிமூலத்தை விடாது பின்பற்றினவாகத் தோன்றவில்லை. மொழி பெயர்க்கும்போது மொழிபெயர்ப்பாளர் அவருக்குத் தோன்றியதொரு நெறியைப் பின்பற்றி வருகின்றனர். மொழிபெயர்ப்பாளர் கருத்துக்களெல்லாம் மொழிபெயர்ப்புக்களில் முதலிடம் பெற்று விளங்குகின்றன. புராணங்களின் மூல பாடங்களையும் அவற்றின் பகுதிகளையும் அத்தியாயங்களையும் ஒத்திட்டுப் பார்த்தவருக்கு மொழிபெயர்ப்புக்களில் உள்ள மேற்கூறிய குற்றங்கள் விளங்காமற் போகா. இருந்தாலும், நூற் செய்திகளின் திரண்ட கருத்து ஒருவாறு கொண்டு வரப்பெற்றிருக்கின்றது. ஆனால், அங்கே வடஇந்தியப் பண்பாட்டிற்கும் தென்னிந்தியப் பண்பாட்டிற்குமிடையே ஒரு வலிய நேசப்பான்மை விளங்கிக் கிடப்பது கண்டு நாமெல்லாம் பெரிதும் மகிழ்ந்து திருவருளை வாழ்த்த வேண்டும்.

சாயம் வெளுப்பது . . .

.........துவைக்கிறபோது வண்ணானுக்குத் தெரிகிறது; ஒரு வெள்ளை வந்த பிறகுதான் புடவை வாங்கினவளுக்குத் தெரிகிறது.

ஆனால்,

அந்த 'ரகசியம்' நெய்யும்போதே சாலியனுக்குத் தெரியும்.

— ஒரு தேர்தல் கூட்டத்தில் கேட்டது

ஒரு முக்கிய அறிவிப்பு

கலேக்கதிர் அலுவலகத்தின் அனுமதி பெருமலே சொந்த மாக ரசீதுப் புத்தகங்கள் அச்சிட்டுப் பொதுமக்களே ஏமாற்றி வரும் போலிப் பிரதிநிதிகளேப்பற்றி ஏற்கெனவே மாசி மாத இதழில் எச்சரித்திருந்தோம்.

அதன் பிறகும் அந்தப் போலிப் பிரதிநிதிகள் தங்களுடைய ஒழுங்கீனத்தைக் கைவிட்டதாகத் தெரியவில்லே.

மேலும், நம்முடைய ஒரே பிரதிநிதியாக இருந்த திரு. E. V. சாமுவேல் என்பவரும் ஷெ ஒழுங்கீன முறையில் பொதுமக்களேயும் நம் அலுவலகத்தையும் ஏமாற்றி வந்திருக் கிருர் என்று நமக்குவரும் கடிதங்கள் மூலமாகத் தெரிந்தது. அதனுல், அவரை வேலேயிலிருந்து நீக்கிவிட்டோம்.

திரு. சாமுவேல் மீதும் நமக்கு வந்த தகவல் வாயிலாகத் தெரிந்த வகையில்—பழனிவேலு என்ற போலிப் பிரதிநிதி மீதும் போலீஸ் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

எவரிடமும் பணம் செலுத்தி ஏமாறவேண்டாம் என்று பொதுமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேம். எங்களுக்கு நேராக வரும் பணத்துக்கு மட்டுமே நாங்கள் பொறுப்பாளிகள் ஆவோம் என்பதை யாவருக்கும் அறிவித்துக்கொள்கிறேம்.

கலேக்கதிர் அலுவலகத்தார்

இன்ஷ்யூரன்ஸ்

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து

முதலிய இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள், மற்றும் லாபகரமான ஏஜன்சி நிபந்தனைகள் பற்றிய விவரங்களுக்கு எழுதவும்.

பயனீர்

பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

தந்தி: "PROTECTION" போன்: "121"

"கலைக்கதிர்"

கலையின் களஞ்சியம்
சிந்தனைச் செல்வம்

★

- கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து.
- கலை நலம் மிக்கது; எழில் மிகப்பெற்றது.
- பார்த்தால் படிக்கத் தூண்டும்.
படித்தபின் பாதுகாக்க எண்ணம் வரும்.

ஆண்டுச் சந்தா ஆறு ரூபாய்

கலைக்கதிர்

பீளமேடு போஸ்ட் :: கோயமுத்தூர்.

டெலிபோன் நெ. 17 தந்தி: "ரங்கவிலாஸ்"

ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங்

அண்டு

வீவிங் மில்ஸ், லிமிடெட்.

[ஸ்தாபிதம் 1922-ல்]

★

ரிஜிஸ்டர் ஆபீஸ்: பூளைமேடு, கோயமுத்தூர்.

மூலதனம், ரூ. 16,00,000

வெளியிடப்பட்டு வசூலான ரூ. 15,02,500

வேலை செய்யும் மொத்த கதிர்கள் 30,000

20-நெ. முதல் 100 நெ. வரை ஜவுளி நூல் தினுசுகள், பனியன் வகையருக்களுக்கு உபயோகப்படும் கோன் நூல் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு பாங்கர்ஸ்:

பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்,

பூளைமேடு — கோயமுத்தூர்.

இந்திய மூலதனம், இந்தியக் கைத்தொலாகிய இந்த சுதேசித் தொலை ஆதரியுங்கள்.

நல்ல விதைப் பருத்தி விதையும், மாட்டுத் தீவனத்திற்குப் பருத்தி விதையும், குடியானவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் நியாயமான விலைகளில் சப்ளை செய்கிறோம்.

உரத்திற்கும், மாட்டு உணவிற்கும் ஏற்றதான பெரிய கடலைப் புண்ணாக்கு சரசமான விலைக்கு விவசாயிகளுக்கும் தாராளமாய்க் கொடுக்கப்படும்.

நவீன முறையில் தயார் செய்து சுத்தம் செய்யப்பட்ட திடமான கடலெண்ணெய் நம் தேசம் பூராவிற்கும் சப்ளை செய்வதுமல்லாமல், அயல் நாடுகளின் தேவைக்கும் கணிசமான முறையில் குறித்த காலத்தில் ஏற்றுமதி செய்கிறோம். இதர வியாபாரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

உணவு தானியம், கரும்பு, பருத்தி ஆகியவைகளின் உற்பத்திப் பெருக்கத்திற்கு மிக அத்யாவசியமாய் வேண்டப்படும் ரசாயன உரங்களாகிய அம்மோனியம் சல்பேட், அம்மோனியம் பாஸ்பேட், சூபர்பாஸ்பேட், ஆகியவை எல்லா முக்ய இடங்களிலும் டிப்போக்கள் ஏற்படுத்தி சர்க்காரின் நிர்ணய விலைக்கு சப்ளை செய்கிறோம்.



ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங் & ஆயில் மில்ஸ்

பாப்பநாய்க்கன்பாளையம்

போன் நெ. 51 தந்தி "ஆயில்மில்ஸ்"

தபால் பெட்டி நெ. 151 கோயமுத்தூர்

Telegrams: PIONEER. Telephone: 160.

THE

Coimbatore Pioneer Mills, Ltd.

PEELAMEDU, COIMBATORE, SOUTH INDIA.

SPINDLES 19,700

SPINNERS OF HIGH QUALITY

YARN - 40s to 100s.

MANAGING DIRECTOR:

G. R. GOVINDARAJULU NAIDU.

OFFICE OF THE REGISTRAR ... 1 AUG 952 139 MADRAS

Printed at Kasthuri Printing Press, Jail Road, Coimbatore.